ஆனந்த போதினி.

19

ஜூலை 1933

ஸ்11, N15AB
N33.19.1
190104

8 AUG 1933
MADRAS

ஆனந்தபோதினி
ஸ்ரீமுக
௵ ஆடி ௴ 1௳

"ஆனந்தபோதினி"யின் 19-வது ஆண்டு.

கருணாநிதியாகிய பரம்பொருளின் திருவருட் பெருமையாலும், அன்பு நிறைந்த நேயர்களின் ஆதரவாலும் நமது "ஆனந்போதினி"யின் 18—வது ஆண்டு இனிது நிறைவுற்று இன்று முதல் 19—வது ஆண்டு பிறந்திருக்கும் நற்செய்தியை எல்லாருக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். "ஆனந்தபோதினி" என்னும் திருநாமம் சூட்டி, ஆதரித்து, ஆரம்பவிழா நிகழ்த்தி, ஆசிகூறி யருளிய மஹான் ஸ்ரீலஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளின் தெய்வத் திருவுளப் பாங்கின் வழிநின்று தொண்டாற்றல் ஒன்றையே நமது "போதினி" முதற் பெருங் கடமையாக மேற்கொண்டிருக்கிறது என்னும் உண்மையை வாசகர்கள் அநுபவத்தில் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். உலகப்பொருள் நெருக்கடி மிக்குள்ள இக்காலத்தில் ஆண்டொன்றுக்கு ஒரு ரூபாயாகிய குறைந்த சந்தாவில் 80 பக்கங்களில் நிறைந்த விஷயங்களோடு "ஆனந்தபோதினி" போன்ற பத்திரிகையை நடத்துவதில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டு என்பதைத் தமிழ் நேயர்கள் தயைகூர்ந்து சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். சந்தாநேயர்களின் அன்புடன் கூடிய ஆதரவும், இறைவனது திருவருள் நோக்கமும் தவிர வேறு எத்தகைய ஆதரவும் உதவியும் எமக்கு இல்லை. இவ்வுண்மையை யாம் ஆண்டுதோறும் அறிவித்துக் கொண்டேவருகிறோம். எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் நேரினும்

19/6/64

தமிழ் மக்கட்குத் தொண்டாற்றல் ஒன்றே எமது குறிக்கோள். கேற்ப எமக்கு மேன்மேலும் உற்சாகமும் ஊக்கமும் ஊட்டிக்கொண்டிருக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ் மக்களைச் சார்ந்திருக்கின்றன.

"ஆனந்தபோதினி"க்குச் சாதி சமய வேற்றுமை இல்லை. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகிய இம்மூன்று தர்மங்களையும் தமிழகத்திற் பரவச் செய்யவேண்டும் என்றே "போதினி" அரும்பாடுபட்டுவருகிறது. சமரஸ சமய வளர்ச்சி, சமூக முன்னேற்றம், புத்திலக்கிய வளர்ச்சி முதலிய துறைகளில் நமது "போதினி" முனைந்து நின்று தொண்டாற்றிவருதல் எல்லாரும் அறிந்ததே.

வழக்கம்போலவே இனியும் நம் நாட்டு நாகரிகத்திற்கும், நல்ல ஒழுக்க வழக்கங்கட்கும் பொருத்தமான விதத்தில் சீர்திருத்த விஷயத்தை உள்ளுறையாகக்கொண்ட படங்களுடன் கூடிய நவரஸச் சிறு கதைகளும், கட்டுரைகளும், ஹாஸ்யப்படங்களும், பாட்டுக்களும் "ஆனந்போதினி"யில் மிளிரும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். சிறந்த தொடர்கதையும் வந்துகொண்டே இருக்கும். இப்பத்தொன்பதாம் ஆண்டு முதல் தக்க அறிஞர்களைக் கொண்டு காலத்துக்கேற்ற நவநவமான அரிய விஷயங்களை வெளியிடவும் ஏற்பாடுசெய்திருக்கின்றோம். போட்டிப் பரிசு ஏற்படுத்துமாறு "ஆனந்தபோதினி"யின் பால் அன்புபூண்ட பல நண்பர்கள் அடிக்கடி எழுதித் தூண்டிவருகிறார்கள். இக்காலத்தில் உற்சாகப் பொழுதுபோக்குக்கும் அறிவு வளர்ச்சிக்கும் "போட்டிப் பந்தயங்கள்" ஒரு சாதனமாக விளங்குகிறபடியால் இம்மாதம் முதலே அதையும் வெளியிட ஏற்பாடு செய்திருக்கின்றோம். அதற்காக ஐம்பது ரூபாய் பரிசு கொடுக்கவும் தீர்மானித்துள்ளோம். இப் பரிசுத் தொகை அடுத்த மாதம் முதல் உயர்த்தப்படும். இப்போட்டிப் பந்தயங்கட்கு நாம் பிரவேசக் கட்டணம் ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதுகாறும் தனிப் பிரதியின் விலை இரண்டணாவாக இருந்ததை நாட்டில் ஏற்பட்டுள்ள பணப் பஞ்சத்தை முன்னிட்டு இன்று முதல் ஒன்றரை அணாவாக ஏற்படுத்தியிருக்கிறோம். சந்தாநேயர்களல்லாத ஏனைய தமிழன்பர்கள் ஒவ்வொரு ஊரிலுமுள்ள எமது ஏஜண்டுகளிடம் ஒன்றரை அணாவுக்கு ஒரு தனிப்பிரதி வீதம் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டுச் சந்தா வழக்கப்படி ஒரே ரூபாய்தான்.

r-211, N45PB
133-9-1

ஆகையால், கைம்மாறு கருதாது நாட்டு நலன் ஒன்றே கருதி உண்மைத் தொண்டாற்றி வரும் நமது "ஆனந்தபோதி"னிக்கு ஒவ்வொரு சந்தாநேயரும் ஒவ்வொரு புதிய சந்தாதாரைச் சேர்த்துக் கொடுத்து எமக்கு மேன் மேலும் ஊக்கம் அளிக்கவேண்டும் என்று எல்லோரையும் வற்புறுத்தி வேண்டிக்கொள்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் கட்டுரைவரைந்து விஷயதானம் புரியவிரும்பும் நேயர்களுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றோம். சிலர் எழுத்துப் பிழைகளும், வாக்கியப் பிழைகளும் மலிந்த கட்டுரைகளை அனுப்புகின்றனர். சிலர் கூட்டு எழுத்துக்களில் எழுதி அனுப்புகின்றனர். சிலர் திருப்பி இரண்டு பக்கங்களிலும் எழுதிவிடுகின்றனர். விஷயம் நன்றாயிருந்தாலும் இவைகளை எவ்வாறு வெளியிட முடியும் என்று எமக்கு விளங்கவில்லை. இத்தகைய கட்டுரைகளால் எழுத்துக் கோப்போருக்கும் எமக்கும் மிகுந்த சிரமமும் வேலைக்கேடும் உண்டாகின்றன. நிற்க, ஒவ்வொருவரும் எழுதும் விஷயத்தைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப் பழகல் வேண்டும். இங்ஙனமின்றிச் சிலர் ஒரு வரையறையில்லாமல் அநேக பக்கங்கள் நிரப்பி அனுப்பிவிடுகின்றனர். இத்தகைய கட்டுரைகளை வருந்தி எழுதி அனுப்புவதாற் பயன் என்ன? இவைகளை வெளியிட முடியாமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். அந்நேயர்கள் மனம் பொறுக்க.

தங்களுடைய அரும்பெருங் காரியங்கட்கிடையே சிரமம் பாராட்டாது நல்ல கட்டுரைகளையும் கதைகளையும் எழுதி விஷயதானம் புரிந்துவரும் அறிஞர்கட்கும், பெண்மணிகட்கும் எமது அன்பார்ந்த நன்றியறிதலை அறிவித்துக்கொள்ளுகின்றோம். "ஆனந்தபோதினி"யின் அன்பர்கள் நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

———:(o):———

ஞானியாரின் அறுபதாண்டு நிறைவு

சென்ற ஜூன் மாதம் 9-10-ம் தேதிகளில் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் என்று பிரசித்திப்பெற்ற திருப்பாதிரிப்புலியூர் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா வெகு சிறப்புடன் நடந்தேறியது. நம் தமிழ்நாட்டில் இக் காலத்தில்

மடங்களின் பெருமையையும், மடாதிபதிகளின் பெருமையையும் காப்பாற்றுகிறவர்கள் யாரேனும் உண்டு என்றால் அப்பெருமையெல்லாம் நம்ஞானியார் சுவாமிகட்கே உரிமையாகும் என்று கூறல் மிகையாகாது. ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சிறந்த ஒழுக்கமும், ஆழ்ந்த சைவப்பற்றும், உண்மைத் தொண்டில் ஆர்வமும் வாய்ந்தவர்கள். இவ்வகையில் ஏனைய மடாதிபதிகட்கும் ஓர் வழிகாட்டியாய் விளங்குகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனையோரைப்போல் வீணே காலங் கடத்திக்கொண்டிராமல் நம் தாய் மொழியாம் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டுவருகிறார்கள். நம் ஞானியார் சுவாமிகள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளிலும் சிறந்த புலமை பெற்றவர்கள். நல்ல ஆராய்ச்சி அறிஞர். அன்றியும் செந்தமிழில், இனிய நடையில், சொற்பொழிவு ஆற்றும் முறை தமிழ் நாட்டில் பரவுவதற்கு அடிகோலியவர் நம் சுவாமிகளே ஆவர். ஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் சொற்பொழிவு எங்கேனும் நிகழும் என்று கேள்வியுற்றால் போதும்—அநேக மைல்களுக்கப்பாலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து ஒருங்கே கூடிவிடுவர். சுவாமிகளின் சொற்பொழிவில் மிளிரும் சொல் நயம், பொருள் நயம் ஹாஸ்ய நயம் முதலிய சுவைகளால் மணிக்கணக்காக கேட்போர் மெய்ம்மறந்து இளைப்போ களைப்போ இன்றி உட்கார்ந்து விடுவார்கள். ஆதலால் சொற்பொழிவாற்றும் சிறப்பில் நம் ஞானியார் சுவாமிகட்கொப்பாக யாரையும் கூற முடியாது என்பதே எமது கருத்து. சைவ சமய சபைகள் நடைபெறும் இடங்கள் தோறும் எழுந்தருளி சைவமதக் கோட்பாடுகளையும், தமிழ்மொழி வளர்ச்சியின் அவசியத்தையும் தம் இனிய ஆற்றல்மிக்க சொற்பொழிவு வாயிலாகப் பொதுஜனங்களுக்கு ஊக்கமூட்டிவருகிறார்கள். ஞானியார் சுவாமிகள் தம் அறுபதாம் ஆண்டு ஞாபகார்த்தமாகத் தமிழையும் சைவத்தையும் போதிப்பதற்கென ஓர் கல்லூரியை ஏற்படுத்தப் பதினாயிரம் ரூபாய் நன்கொடையளித்துள்ளார்கள். இதிலிருந்து நம் சுவாமிகளின் மாட்டு அமைந்துள்ள உண்மையான சமயப் பற்றும் தமிழ் மொழிப் பற்றும் இனிது விளங்குமன்றோ? பொருள் வருவாய் மிக்க திருவாவடுதுறை தருமபுரம் முதலிய மடாதிபதிகளை விட வருவாயில் மிகக் குறைந்த திருப்பாதிரிப்புலியூர் மடாதிபதிகள் அளித்துள்ள நன்கொடை மற்றவர்கட்கு ஒரு விழிப்பை உண்டாக்கும் என்றே நம்புகின்றோம். மடாதிபதிகள் என்பவர்கள் சமயத்தையும் மொழியையும் வளர்க்கக் கடமைப்பட்டவர்கள். ஆனால் இக்காலத்தில் சில மடாதிபதிகளின்

செயல்களைக் கேட்டாலே வெட்கம்! வெட்கம்!! இவர்கள் என்ன செய்கின்றனர்? வீண் படாடோபங்களிலும் சிற்றின்பக் களியாட்டங்களிலும் ஈடுபட்டுக் காலத்தையும் பணத்தையும் கோர்ட்டுகட்கும் தாசி வேசிகட்கும் கொட்டித் தொலைத்து வருகின்றனர். இன்னும் சில மடங்கள் தூங்கிக்கொண்டே இருக்கின்றன. கிறிஸ்தவ மிஷனரிகளைக் கண்டேனும் உணர்வு பிறக்கவில்லை. ஆதலால் இனிமேலாவது நம் ஞானியார் சுவாமிகள் காட்டிய வழியை அம்மடாதிபதிகள் பின்பற்ற வேண்டுகின்றோம். மடங்களை ஏற்படுத்திய நோக்கமே சமயத்தைப் பரப்புவதற்காம். சமயங்களைப் பரப்பப் போதிய கல்வி வேண்டும். ஆதலால் ஒவ்வொரு மடாதிபதியும் தம்மால் இயன்ற அளவுக்கு வீண் காரியங்களில் செலவிடும் பணத்தை மிச்சப்படுத்தி இம்மாதிரி பல தமிழ்க் கல்லூரிகளை ஏற்படுத்தினால் விரைவில் நம் தமிழ் மொழியும் வளரும்; மதமும் மேன்மேலும் செழித்து வளரும்.

தமது அறுபதாண்டு நிறைவு விழாவின்போது கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக உறுப்பினரும் ஆகிய திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கட்குச் 'செந்தமிழ்ப் புரவலர்' என்னும் பட்டத்தை நம் ஞானியார் சுவாமிகள் அன்புடன் உவந்தளித்துள்ளார்கள். நம் பிள்ளையவர்கள் தஞ்சையில் செல்வாக்குள்ள நியாயவாதி. வருவாய் மிக்க தம் தொழிலையும் லக்ஷியம் செய்யாது தம் ஆயுள் முழுவதையும் தமிழபிவிருத்திக்காகவே அர்ப்பணம் செய்துவருகிறார்கள். கரந்தைத் தமிழ்ச்சங்க அபிவிருத்திக்காக அரும் பெரும்பாடு படுகிறார்கள். ஆதலால் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கட்கு ஞானியார் சுவாமிகள் அளித்த பட்டம் பெரிதும் தகுதி யுடையதாகும் என்பதில் ஐயமில்லை. இன்னும் இவரைப் போன்ற தமிழபிமானிகட்கு இம்மாதிரிப் பட்டங்கள் பல நல்க மடாதிபதிகள் முன் வரவேண்டும். தமிழபிமானிகட்கு ஊக்க மூட்டித் தமிழை ஆதரிக்க வேண்டும். அருள் வள்ளலாகவும், அறிவு வள்ளலாகவும், தமிழ் வள்ளலாகவும் விளங்கும் திருப்பாதிரிப் புலியூர் மடாதிபதிகளாகிய நம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் மக்களை உய்விக்கத் திருவருள் சுரக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம். வாழ்க சமயம்! வாழ்க தமிழ் மொழி.

ஓம் தத் ஸத்.

"ஆனந்தபோதினி" புத்தாண்டு வாழ்த்து

(பண்டிதை ரா. ரங்கநாயகி)

செந்தமிழ் "ஆனந்த போதினி"ச் செல்வி!
வருகநின் வரவு நல்வர வாகுக!
ஆண்டுபத் தொன்பதாம் அணங்கே வருக!
அருங்கலை வளர்க்கும் அன்னையே வருக!
அறிவு விருந்தளிக்கும் அம்மையே வருக!
மாதர் விரும்பும் மாண்பே வருக!
பாவலர் போற்றும் பண்பே வருக!
அறிஞர் போற்றும் அன்பே வருக!
திங்கள் தோறும் திகழும் தேவி!
எங்கும் நின்புகழ் எங்கும் நின்பெயர்!
சமத்துவம் சுதந்தரம் சகோதரத்துவம்
சமரச சமய சன்மார்க்க நூலாம்
சித்திரப் படஞ்சேர் சுவைச் சிறுகதை
உள்ளம் அள்ளும் ஒருபெருந் தொடர்கதை
கம்பன் கவியின் செம்பொருள் நயங்கள்
தமிழ்மணம் கமழும் தனிக்கட் டுரைகள்
முக்கிய தாங்கி உதயும் "போதினி"
நிறைந்த பொருள்களைக் குறைந்த சந்தாவில்
நின்போல் யாரே நிலத்தில் அளிப்பார்?
பதினெட் டாண்டுகள் பாங்காய்க் கழிந்தன
பத்தொன்ப தாகும் புத்தாண்டு முதல்நீ
பல்வகைச் சிறப்பும் பரவும் புகழும்
பாரினிற் பெற்றுப் பல்லாண்டு வாழ்க!
நின்னைத் தாங்கும் நேயச் சீமான்
கற்றோர் போற்றும் கண்ணிய சீலன்
தெய்வ தேச பக்தியிற் சிறந்தோன்
முனிவகத் தில்லா முனிசாமி வள்ளல்
எல்லாச் செல்வமும் எய்தி
வாழ்க பல்லாண்டு வழிவழி சிறந்தே

கோஹினூர் என்னும் அருமணி

(T. A. ...த்தினம் பிள்ளை)

கோஹினூர் என்னும் பெயரை நம்மில் பலர் கேட்டிருக்கின்றோம். அரசர்களுக்குரிய இராஜ சின்னங்களில் முக்கியமானது அவர்கள் சிரசில் அணிந்துகொள்ளும் திருமுடியாகும். அதற்குக் கிரீடம் என்றும் மகுடம் என்றும் வேறு பெயர்களுமுண்டு. நமது அரசர் பெருமான் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் கிரீடம் மிகப் பெரியதானது. அதிற் பற்பல விலையுயர்ப்பெற்ற அருமணிகள் இழைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கோஹினூர் என்னும் வைரமணி மிகவும் குறிப்பிடத்தக்கது.

வைரங்கள் இரத்தினங்களுள் எல்லாவற்றிலும் உயர்ந்தவையாயும் தெய்வீகத் தன்மையுடையவையாயும் வெகு காலமாக மதிக்கப்பட்டு வந்தன. ஆகையால் முற்காலத்திலிருந்து அரசு செலுத்தின மண்டலாதிபதிகள் நமது தேசத்தில் மாத்திரமல்ல மேல்நாடுகளிலும் வைரங்களைச் சேர்த்து வைத்திருந்தனர். அவ்வைரங்களிற் பல இன்றும் அம் மண்டலாதிபதிகளுடைய குடும்பங்களிற் பரம்பரையாய் இருந்து வருகின்றன. அத்தகைய பெரும் புகழ் பெற்ற வைரங்களில் கோஹினூர் ஒன்று.

இவ்வுலகிலுள்ள எல்லா வைரங்களிலும் கோஹினூர் மிக்க பூர்வீகமானது. அதன் உற்பத்தியை ஆராயப் புகுந்த எட்வின் ஸ்ட்ரீட்டர் என்னும் ஆங்கில ஆசிரியர், அது சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதென்றும், மகாபாரதப் போரில் மிக்க பிரசித்தி பெற்ற கர்ணமகாராஜன் அதைத் தன் வலது காதில் இரத்தின பூஷணமாக அணிந்திருந்தானென்றும் சொல்லும் கர்ண பரம்பரையான சில கட்டுக்கதைகளை மட்டும் கூறுகின்றனர். ஸ்ட்ரீட்டர் சாமானியமானவரல்லர். இவ்வுலகம் பற்பல அரசர்களிடத்திலுள்ள முக்கியமான வைரங்களைக் குறித்து நன்றாய் ஆராய்ச்சி செய்து மகாராணி விக்டோரியா பெருமாட்டியின் அனுமதியுடன் "உலகத்திலுள்ள பெரிய வைரங்கள்" என்ற ஒரு பெரிய நூல் எழுதி அச்சிட்டு வெளியிட்ட பேராசிரியர். அவர் பல காரணங்களைக் காட்டி, கோஹினூர் கர்ண மகாராஜன் கையிலிருந்ததென்றும் கூறத் துணிகின்றார். ஆயினும் அவை புராண சம்பந்த முடையவை யாதலின் பலர் நம்ப மாட்டார்கள்.

இவ்வாசிரியர் கோஹினூர் ஏறக்குறைய 5,000 வருஷங்களுக்கு முன்னே நமது தேசத்திலுள்ள கோதாவரி நதியின் மூலஸ்தானத்திற்குச் சமீபத்தில் மணலில் ஒரு செம்படவனால் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறுகின்றார். கோதாவரி நதியும் அதைச் சார்ந்த நாடும் வைரங்கள் உற்பத்தியாகுதற் கேற்ற உயிருள்ள பூமியென, கற்றுணர்ந்த பெரியோரால் அங்கீகரிக்கப்படுகிறது. கர்ண

மகாராஜன் அந்த தேசத்தை ஆண்மையுடன் ஆண்ட மன்னன். அது இந்தியாவின் வடபாகத்திலுள்ள பாந்த நாடு. தற்காலத்தில் அது வங்காளம் எனப்படுகிறது. பூர்வகாலத்தில் அது கோதாவரி நதிக் கரையிலும் எட்டியிருந்தது. ஆகையால் கோஹினூர் கோதாவரி நதியின் மணலில் அகப்பட்டதென்பதை ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது. ஆகையால் அது ஆதியில் கர்ணன் கையிலிருந்ததென்னும் கூற்றும் நம்பக் கூடியதாகும்

கோஹினூர் உண்மையான சரித்திரத்தை நன்குணர்ந்த ஆசிரியர் ஸ்ரீட்டர் இவ்வாறு கூறுகின்றனர்:—

"கோஹினூர் தொடர்ச்சியான மிக்க புராதன சரித்திரத்தையுடைய ஆச்சரியமான வைரம். வைரக் கற்களுக்கு அபாரமான ஆச்சர்ய சக்தி உண்டென்பது கணித சாஸ்திரத்தில் வல்ல சில நிபுணருடைய அபிப்பிராயம். கோஹினூர் நெடுங் காலமாகப் பற்பல அரசர் கையில் மாறி வந்தது. அது எந்தெந்த அரசர் கையில் மாறிற்றோ அந்த அரசர்களெல்லாம், பெருஞ் செல்வத்தை யடைந்து, குதூகலத்துடன் வாழ்ந்தன ரென்றும் ஈற்றில் இராஜ்யம் செல்வமனைத்தையு மிழந்து மாண்டன ரென்றும் தெரிகிறது." ஸ்ரீட்டருடைய இக் கூற்றையும் கோகினூரின் பிற்காலத்து உண்மையான தொடர்ந்த சரித்திரத்தையும் உற்று நோக்குமபோது அது அபார சக்தியுடைய தென்பது உள்ளங்கையின் நெல்லிக் கனிபோல் தெள்ளிதிற் புலப்படும்.

கோஹினூரின் பூர்வீக சரித்திரத்தை ஆராயப் புகுந்த மற்றோர் ஆசிரியர் அக்கல் இந்தியாவின் பூர்வீகசக்கரவர்த்திகளில் ஒருவரான விக்கிரமாதித்தன் கையிலிருந்ததென்று கூறுகின்றார். ஆகையால் இவ் விக்கிரமாதித்தன் யாரென்று ஆராய்வோம். நமது தேசத்தைக் கி. பி. 300 முதல் கி. பி. 650 வரையில் ஒரு புதிய அரச பரம்பரை அரசர் ஆண்டு வந்தார்கள். அதற்கு குப்த பரம்பரை என்று பெயர். விக்கிரமாதித்தன் அந்த அரச பரம்பரையைச் சேர்ந்தவன். அவன் கி. பி. 875 முதல் கி. பி. 413 வரையில் சுமார் 38 வருஷம் அரசு செலுத்தினான். குப்த அரசர்கள் புத்த மதத்தை ஆதரித்தவர்களாயினும் அவன் இந்து அரசனாகவே அரசு செலுத்தினான். அவன் மிக்க புஜபல பராக்கிரம முடைய வீரன். அவன் செய்த யுத்தங்களிலெல்லாம் ஜயத்தையே அடைந்தான். ஆகையால் அவனுக்கு விக்கிரமாதித்தன் என்று பெயருண்டாயிற்று. அதன் அர்த்தம் வெற்றி யடைவதில் சூரியனைப் போன்றவன் என்பது.

அவன் பல நாடுகளை ஜெயித்துத் தன் வசப் படுத்திக்கொண்டான். அவற்றில் மாளவம் ஒன்று. கூர்ஜரம் ஸௌராஷ்டிரம் என்னும் நாடுகளும் அவன் வசப்பட்டன. அவன் சகல சம்பத்தும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த பெரிய அரசன். அவன் இவ்வாறு வாழ்வதற்கு அவனிடத்திலிருந்த கோஹினூரே காரணம் என்று இவ்வாசிரியர் கூறுகின்றார். அவனுடைய காலத்தில் குப்தராஜ்யம் உச்சநிலையை அடைந்திருந்தது. விக்கிரமாதித்தன் கர்ணமகாராஜனுடைய பரம்பரையைச் சேர்ந்தவனென்றும் அவ்வாசிரியர் அபிப்பிராயப்படுகின்றனர். விக்கிரமாதித்தனுக்குப் பின் அவனுடைய பரம்பரையில் உதித்தவர்கள் மாளவம், குவாலியர் முதலிய நாடுகளையும் ஆண்டு வந்தார்கள். ஆகையால் இந்த வைரக்கல் மாளவநாட்டை ஆண்டு

வந்த மன்னர் கையிலகப்பட்டுப் பரம்பரையாய் வெகுகாலம் இருந்து வந்தது. குப்தராஜ்ஜியம் பின்னால் க்ஷீணிக்கவே மாளவம் குவாலியர் இரண்டும் பிரசித்தி யடைந்தன. வேறு சில சிறிய ராஜ்ஜியங்களும் அங்குத் தோன்றின.

கோஹினூர் விக்கிரமாதித்தனுடைய பரம்பரையிலிருந்து மாளவ மன்னர் கையில் மாறிற்று. மாளவ மன்னர், அதன் அருமையையும் அபார சக்தியையும் உணர்ந்து அதைப் பூஜித்து வந்ததாகச் சரித்திரமுண்டு. மேலே நாம் கூறிய விஷயங்களையும் பேபர் சக்கரவர்த்தி காலம் முதல், தொடர்ச்சியாய் ஏற்பட்டுள்ள சரித்திரங்களையும் ஒத்து நோக்கும்போது, கோஹினூர் பாரத யுத்தம் நடந்த காலத்திற்கு முன்னே நமது தேசத்திலே கண்டெடுக்கப்பட்ட அருமணியென்பதும் சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதென்பதும் நன்கு புலப்படும். மேலும் அது தோன்றிய காலம் முதல், பாஞ்சால தேசத்தின் சிங்கமென்று புகழ்பெற்ற ரஞ்சித் ஸிங்கு என்னும் அரசன் காலம் வரையில் பெரும்பாலும் இந்தியாவில் பற்பல மன்னர் கையிலும், சில காலம் பாரஸீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலும் தங்கி யிருந்ததென்றும், கடைசியில் இங்கிலாந்திற்குச் சென்று மகாராணி விக்டோரியாவின் திருக்கரங்களை யடைந்ததென்றும் தெரியவரும்.

மாந்தரைப் போலவே இராஜ்ஜியங்களும் அழிவது இயல்பு. குப்த பரம்பரை அழிந்து போனபின் பற்பல வேறு பரம்பரைகள் தோன்றி நமது தேசத்தில் அரசு செலுத்தி வந்தன. அப்பால் அநேக வருஷங்களுக்குப் பின்னர் ஒரு மகமதிய அரசபரம்பரை தோன்றிற்று. அதற்கு கில்ஜி பரம்பரை என்று பெயர். அப் பரம்பரையில் முதல் அரசனுக்கு அல்லா உத்தீன் என்று பெயர். அவன் கி. பி. 1296 முதல் கி. பி. 1316 வரையிலும் அரசு செலுத்தினான். அவன் மாளவ தேசத்து மன்னனுடன் யுத்தம் செய்தான். எட்வின் ஸ்ரீட்டர் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறுகின்றார்:—

"மொகலாய இராஜ்ஜியத்தை முதல் முதல் இந்தியாவில் ஸ்தாபித்தவர் பேபர் என்பவர். அவருடைய காலம் முதல் கோஹினூரைப்பற்றி தொடர்ச்சியான நம்பப்படக்கூடிய சரித்திரம் தக்க ஆதாரங்களோடு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆதலின் அச்சரித்திரத்தை நாம் முற்றிலும் உண்மையென்று கொள்ளலாம். ஆயினும் மற்றொரு சரித்திர ஆசிரியர் கோஹினூரை அல்லா உத்தீன் தன் காலத்தில் கைப்பற்றினனென்று கூறுகின்றது. அவன் மாளவ தேசத்து அரசனோடு கி. பி 1304 இல் யுத்தம் செய்தான். அந்த யுத்தத்தில் தோல்வி யடைந்தான். அப்பொழுது அவனிடத்தி லிருந்த கோஹினூர் அல்லா உத்தீனை அடைந்தது.

இவ்வாறு பேராசிரியர் ஸ்ரீட்டர் கூறுவதை நோக்கும்போது அவ்வைரம் அல்லா உத்தீன் கையிலும் அகப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால் கோஹினூர் பேபர் காலத்திற்கு சுமார் 850 வருஷங்களுக்கு முன்னும் இருந்ததென்பதற்குத் தக்க சரித்திர ஆதாரமுண்டு. அல்லாஉத்தீனுக்கும் மாளவ தேசத்து மன்னனுக்கும் நடந்த யுத்தம், மாளவ அரசன் அவனுக்கு அடங்கிக் கப்பம் கட்டாமையால் நிகழ்ந்தது. அல்லாஉத்தீனுக்கு வேண்டியது திரவியம் ஒன்றே. யுத்தம் முடிந்த பின் மாளவமன்னன் அவனுக்கு வேண்டிய

திரவியம் கொடுத்து அவனுடன் சமாதானம் செய்துகொண்டான். அவனுக்குக் கோஹினூரின் அருமையும் அதன் மதிப்பும் தெரியாது. ஆகையால் அவன் கோஹினூரை மாளவமன்னனுக்கோ அல்லது யுத்தத்தில் அம்மன்னனுக்கு உதவியாக வந்த குவாலியர் அரசனுக்கோ மீண்டும் கொடுத்து விட்டான். இந்துதேச சரித்திரத்தை ஆராயுமிடத்து அக்காலத்தில் மாளவ அரசனே குவாலியரிலும் உஜ்ஜினியிலும் அரசு செலுத்தினதாகத் தோன்றுகிறது.

அப்பால் பேபர் கி. பி. 1526 ஆம் வூ இந்தியாவின் மீது படையெடுத்துவந்து மொகலாய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தபோது கோஹினூர் குவாலியர் அரசனிடத்தில் குடும்ப சொத்தாய் இருந்துவந்ததென்பது பேபர் அக்காலத்தில் எழுதி வைத்த குறிப்பினால் தெரிகிறது. பேபர் கி. பி 1526-ஆம் வூ பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:—

"விக்கிரமாதித்தன் என்கிற இந்த அரசனும் அவனுடைய சந்ததியாரும் ஏறக்குறைய நூறுவருஷங்களுக்கு மேற்பட குவாலியர் நாட்டில் அரசு செலுத்திக்கொண்டு வந்தார்கள். 1526-ஆம் வூ எப்பிரல் மீ 21-ஆம் தேதி நடந்த பனிப்பட்டு யுத்தத்தில் நான் இப்றஹிம் லோடி என்கிற அரசனைத் தோற்கடித்து அவனை நரகத்திற்கு அனுப்பினேன். அப்பால் அவனுக்கு உதவி செய்த குவாலியர் அரசனைக் கொன்று அவனுடைய இராஜ்ஜியத்தைக் கைப்பற்றினேன். அவனுக்கு விக்கிரமசித் என்று பெயர். அப்பொழுது அவனுடைய குடும்பத்தார்களும், பந்துக்கள் பலரும் ஆக்ரா நகரில் இருந்தார்கள். அவர்கள் தப்பி ஓடிவிடாமல் தடுப்பதற்காக நான் எனது குமாரன் உமாயூனை அவ்விடத்திற்கு அனுப்பினேன். உமாயூன் அவர்களைக் கைது செய்து சிறையிலடைத்து வைத்தான். நமது சேனுவீரர் அவர்களுடைய பொருள்களைக் கொள்ளையடிக்க எத்தனித்தார்கள். உமாயூன் அதற்கு உடன்படவில்லை. ஆயினும் அவர்கள் அச்சமயத்தில் உமாயூனுக்குச சில விலையேறப்பெற்ற ஆபரணங்களையும் இரத்தினங்களையும் இனுமாகக் கொடுத்து அவனுடைய தயவைச் சம்பாதித்துக் கொண்டார்கள். அவற்றுள் சுல்தான் அல்லா உத்தீனிடத்திலிருந்த மிக்க பிரசித்திபெற்ற வைரமொன்றிருந்தது. அது சுமார் எட்டு மிஷ்கேல் எடையுள்ளது. சில நாட்கள் சென்றபின் நான் ஆக்ராவுக்குச் சென்றேன். உமாயூன் அந்த வைரத்தை எனக்கு இனுமாகக் கொடுத்தான். நான் அதை மீண்டும் உமாயூனுக்கே இனுமாகக் கொடுத்துவிட்டேன்."

இக் குறிப்பை நோக்கும்போது கோஹினூர் மொகலாய மன்னரிடத்தில் சேர்ந்ததென்று தெளிவாய்த் தெரிகிறது. பேபர் இறந்தபின் அக்கல் அவருடைய குமாரன் உமாயூன் கையிலும் பின்னால் அவருடைய சந்ததியாரிடத்திலும் மாறிற்று. ஆயினும் அவர் பண்டைக் காலத்திலிருந்த இந்த அரசரைப்போல் எவ்வித சுகத்தையும் அடையாமல் வெகு கஷ்டத்தை அனுபவித்து இறுதியில் இறந்தொழிந்தாரென்று ஸ்ரீட்டர் கூறுகின்றார். உமாயூனுக்குப் பின் வந்த அக்பர் சக்கரவர்த்தி காலத்திலும், ஜிஹாங்கீர் காலத்திலும் கோஹினூரின் பிரஸ்தாபம் ஒன்றுமில்லை. ஆயினும் அது அவர்களிடத்தில் இருந்ததென்பதற்குப் போதிய ஆதாரமுண்டு. ஜிஹான்கீயருடைய குமாரன் ஷாஜிஹான் காலத்தில் அந்தக் கல்லைப்பற்றிய குறிப்புகள் பலவுண்டு. கோஹினூர் புராதனமான வைரம் என்பதும், அது தெய்வத்தன்மையுடைய

தென்பதும் அவருக்குத் தெரியும். ஆகையால் அவர் அதை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்தார்.

ஷாஜிஹானுடைய குமாரன் ஔரங்கஸிப் அவரைச் சிறையிலடைத்துத் தன் சகோதரரைக் குரூரமாய்க் கொன்று தானே அரசனானன். ஷாஜிஹான் சிறைச்சாலையிலிருந்து வெகு துன்பப்பட்டார். அப்பொழுது அவருடன் கூடவிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தவள் அவருடைய குமாரத்தியாகிய ஜிஹானீரா என்பவளே. அவர் அக்காலத்தில் தன் மகளைக் கூப்பிட்டு, "அம்மா, உன் சகோதரன் ஔரங்கஸிப் என்னைச் சிறையிலடைத்து ஹிம்சை செய்கிற மகா பாதகன். ஆகையால் என்னிடத்திலுள்ள உயர்ந்த இரத்தினங்களையெல்லாம் பொடியாக்கி விடுகிறேன்" என்றார். அப்பெண்ணரசி அவ்வாறு செய்யாது அவரைத் தடுத்து இரத்தினங்களையெல்லாம் காப்பாற்றினன்.

ஷாஜிஹான் இறந்தபின் ஔரங்கஸீப் ஆக்ராவுக்குச் சென்று துக்கம் விசாரிக்கும்போது ஜிஹானீரா ஷாஜிஹானிடத்தி லிருந்த இரத்தினங்களை ஒரு பெரிய பொற்கிண்ணத்திலிட்டு ஔரங்கஸீப்புக்குக் கொடுத்தாள். அவற்றுள் கோஹினூர் என்னும் வைரமணி ஒன்று. இவ்வாறு கோஹினூர் ஔரங்கஸீப்பிடத்தில் சேர்ந்தது.

ஔரங்கஸீப் இறந்தபின் அக்கல் அவனுக்குப் பின் வந்த மொகலாய மன்னர் ஒவ்வொருவர் கையிலும் மாறிக் கடைசியில் கி. பி. 1719-ம் வருஷம் பட்டத்திற்கு வந்த மகம்மது ஷா என்னும் மொகலாய சக்கரவர்த்தி கையில் அகப்பட்டது. அவனுடைய காலத்தில் நாதர் ஷா என்னும் பாரஸீக மன்னன் இந்தியாமீது படையெடுத்து வந்து டில்லியைக் கொள்ளையடித்து பல அருமையான பொருள்களை அபகரித்தான். அவன் கோஹினூரைப்பற்றிக் கேள்விப்பட்டு, அதை எப்படியாவது பெறவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தான். இதையறிந்த மகம்மது ஷா அதைத் தன் தலைப்பாகையில் மறைத்து வைத்திருந்தான். நாதர்ஷா அதை வெகு சாதுரியமாய்க் கைப்பற்றிக்கொண்டு பாரஸீகம் சென்றான்.

கி. பி. 1747-ம் வருஷம் நாதர்ஷா இறந்தான். ஆகையால் கோஹினூர் அவனுடைய குமாரனாகிய ஷாரேக் கையிலகப்பட்டது. ஆயினும் மீயர் ஆலம்கான் என்று மற்றொரு பெயருள்ள ஆகா மகம்மது, அவனை நாட்டைவிட்டு மெஷ்டு என்கிற கிராமத்துக்கு அனுப்பிவிட்டு அவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். ஷாரேக் கோஹினூரையும் வேறு உயர்ந்த வைரங்களையும் எடுத்துக்கொண்டு மெஷ்டு என்னுமிடத்திற்குச் சென்றான். அங்கு ஆகா மகம்மது அவனைப் பலவகையாய் ஹிம்சை செய்தான். அவனுடைய தலையை முற்றிலும் க்ஷவரம் செய்து, அதன் மேற்புறத்தில், பசையினால் ஒரு கிண்ணத்தைச் செய்து வைத்து, கொதிக்கிற எண்ணெயை அவனுடைய சிரசினூற்றி, கோஹினூரைக் கொடுக்கும்படி பலவந்தம் செய்தான். ஆயினும் ஷாரேக் அதைக் கொடுக்கவில்லை; இவ்விதமான சித்திரவதை செய்யுமுன் ஆமெட்ஷா என்னும் ஆப்கானிய அரசன் ஷாரேக்குடன் சமாதானம் செய்து கொண்டு கோஹினூரை வாங்கிக்கொண்டு போய்விட்டான். ஷாரேக் சித்திரவதை காரணமாக இறந்தான். இவ்வாறு கோஹினூர் பாரசீகத்தைவிட்டு ஆப்கானிஸ்தானம் சென்றது.

கோஹினூர் ஆப்கானிஸ்தானத்தில் பல அரசர் கையில் மாறிற்று. ஆயினும் அவர்கள் ஒவ்வொருவரும் அது காரணமாகக் கண்களை இழக்க நேரிட்டது. கடைசியாக அக்கல் ஷாஷுஜா என்னும் ஆப்கானிய அரசன் கையில் அகப்பட்டது. அவனை ஷா மகம்மது என்னும் அவனுடைய சகோதரன் சிம்மாசனத்தை விட்டு நீக்கிக் கண்களிரண்டையும் பிடுங்கிக் குருடாக்கி விட்டுத் தானே அரசனானான். ஷாஷுஜா அவன் செய்த அக்கிரமங்களைச் சகிக்க முடியாமல், முன் இக்கல் காரணமாகத் தன்னால் குருடனாக்கப்பட்ட ஷாஷுமான் என்னும் பழைய ஆப்கானிய அரசனையும் தன்னுடன் கூட அழைத்துக் கொண்டு இந்தியாவிற்குச் சென்று ரஞ்சித் ஸிங்கு என்னும் சீக்கியர் அரசனிடத்தில் சரணாகதி யடைந்தான். அவன் அவர்களுக்கென்று தனியாய் விடுதியமைத்துச் சிலகாலம் அவர்களை ராஜமரியாதையோடு விருந்தாளிகளாக வைத்திருந்தான். ஆயினும் அவன் ஷாஷுஜாவிடத்தில் கோஹினூர் இருப்பது தெரிந்துகொண்டு அதை அபகரிப்பதற்காக அவனைப் பலவகையாய் ஹிம்சித்து அதை அபகரித்துக் கொண்டான். அப்பால் ரஞ்சித் ஸிங்கு அவனுக்கு 1,25,000 ரூபாய் கொடுத்து அவனுக்கு நன்றி கூறினான்.

கோஹினூர் 1813-ஆம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி ரஞ்சித் ஸிங்குக்குக் கிடைத்தது. அவன் அதை ஒரு கங்கணத்திற் பதித்து எப்பொழுதும் அதை வலக்கரத்தில் அணிந்திருந்தான். அவன் 1839-ஆம் வருஷம் இறந்தான். அவன் இறந்த பின் அவனுடைய இராஜ்ஜியத்தில் பல குழப்பங்களும் கலகங்களும் நிகழ்ந்தன. அவற்றை அடக்க எவராலும் முடியவில்லை. ஆகையால் ஆங்கிலேயர் பாஞ்சால நாட்டைத் தங்களுடைய நாடுகளோடு சேர்த்துக் கொண்டார்கள். அப்பொழுது ரஞ்சித் ஸிங்குடைய பொக்கிஷசாலையிலிருந்த கோஹினூர், அக்காலத்தில் இராஜப்பிரதிநிதியாயிருந்த லார்ட் டால்ஹௌஸி கையில் அகப்பட்டது. அதனுடைய அருமையும் மகத்துவமும் அவருக்குத் தெரியும். ஆகையால் அவர் அவ்வரிய மணி மகாராணி விக்டோரியாவுக்கே ஏற்றதெனக் கருதி அதை இரண்டு ஆங்கிலேய உத்யோகஸ்தர் கையில் கொடுத்து மகாராணிக்கு அனுப்பினார்.

பூவுலகெங்கணும் புகழ் பெற்றதும் பற்பல இந்து மன்னர்களிடத்திலும், மொகலாய மன்னரிடத்திலும் இராஜ சின்னமாய் விளங்கியதுமான கோஹினூர் 1850-ஆம் வருஷம் ஜூன் மாதம் மூன்றாம் தேதி மகாராணி அவர்களின் திருக்கரங்களை அடைந்தது. அப்பொழுது அதன் எடை $186\frac{1}{16}$ காரெட் ஆகும். மகாராணியும் அவருடைய கணவரும் அதில் பல தோஷங்களிருப்பது தெரிந்து அதை நுட்பமாய் ஆராயவேண்டுமென்று தீர்மானித்தனர். ஆகையால் அவர்கள் அக்கல்லை இரத்தின நிபுணரான ஸர். டேவிட் புரூஸ்டர் என்பவருக்குக் காண்பித்து அக்கல்லை எவ்வாறு இன்னும் அதிக பிரகாசமுடையதாய்ச் செய்யலாமென்றும், அதில் பழுதுகள் இருந்தால் அவற்றை எவ்வாறு போக்கலாமென்றும் ஆலோசனை செய்தனர். அவர் அக்கல்லை நன்றாய்ப் பரிசோதித்து, அது வெகுகாலத்திற்கு முன்னே இந்தியாவில் பட்டை தீர்த்து மெருகேற்றப்பட்ட பழைய கல்லென்றும், அக்காலத்தில் இந்திய தொழிலாளர்கள் மெருகேற்றும் தொழிலை நன்குணராதிருந்தனரென்றும், அக்கல்லில் சில தோஷங்கள் இருக்கின்றனவென்றும், தொழிலை நன்றாய்த் தெரிந்தவர்களைக் கொண்டு மீண்டும் பட்டை தீர்த்து மெருகேற்றினால் அது மிகுந்த பிரகாசத்தைத் தருமென்றும் கூறினார். இன்னும் அவர் ஒல்லாந்து

தேசத்திலுள்ள தொழிலாளர்களே பட்டை தீர்க்கும் வேலையில் கைதேர்ந்தவர்களென்றும் அங்குள்ள கோஸ்டர் என்னும் தொழிலாளி அவ்வேலையைப் பூரணமாய்ச் செய்து நிறைவேற்றக்கூடியவரென்றும் யோசனை கூறினார். அவ்வண்ணமே கோஸ்டரை இங்கிலாந்திற்கு வரவழைத்து அவ்வேலையை அவரிடத்தில் ஒப்புவித்தனர். கோஸ்டர் தம்முடைய தொழிற்சாலையில் இவ்விதமான வேலையில் நிபுணரெனப் பெயர்பெற்ற வோர்ஸாங்கர் என்னும் தொழிலாளியைக் கொண்டு கோஹினூரை மீண்டும் தேய்த்துப் பட்டை தீர்த்து சுமார் 40 நாட்கள் தொடர்ச்சியாய் வேலை செய்து அவ்வேலையைப் பூர்த்திசெய்தார். அதன் பின்னர் கோஹினூர் ஜகஜோதியாய்ப் பிரகாசித்தது.

வேலை முடிந்தபின் அவ்வைரமணியில் 80 காரெட் வரையில் தேய்ந்து வியர்த்தமாய்ப் போயிற்று. இந்த வேலையினால் மகாராணிக்கு நேர்ந்த செலவு 8000 பவுன் என்று கூறப்படுகிறது. இவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்ததனால் அக்கல் முன்னிலும் அதிக பிரகாசமடைந்து மகாராணியும் அக்கல்லைத் தமது கிரீடத்தில் பதித்து அணிந்து கொண்டார்கள். அக்கிரீடம் இப்பொழுது உவின்ஸர் மாளிகையில் நமது சக்கரவர்த்தி ஆதீனத்தில் இருக்கிறது. அதன் விலை 1,40,000 பவுன் என்று மதிப்பிடப்படுகிறது.

தர்க்கம் வேண்டாம்; கடமையைச் செய்.

பத்மா! மாம்பழம் தின்னு என்று நான் கூறுகிறேன்; தோட்டத்திலே எத்தனை மரங்களுள்ளனவென்றும், மரத்துக்கு எத்தனை கிளைகள் உண்டென்றும், அவற்றில் எத்தனை இலைகள் உண்டென்றும், மற்றும் பலவிதமாகவும் எண்ணுவதினால் யாது பயன்? நீ இங்கு மாம்பழம் தின்ன வந்திருக்கிறாய். மாம்பழம் தின்றுவிட்டுப் போ. நீ சாதனங்கள் செய்து ஈசவரனை யடையவேண்டுமென்ற நோக்கத்துடனே மனுஷியராசியாக இவ்வுலகிலே வந்திருக்கிறாய். உன் கடமை பக்தியை யடைவதற்கு உன்னாலானமட்டும் முயற்சிப்பதேயாம். அநாவசியமான தர்க்கங்களினாலே ஏன் உன்னை நீயே துன்புறுத்திக்கொள்கிறாய்? தத்துவஞான தர்க்கங்கள் உனது வாழ்க்கையை மாற்றிவிடுமோ? நான்கு அவுன்ஸ் சாராயம் உனக்கு மயக்கத்தை உண்டுபண்ணப் போதுமானதாயிருக்கும் போது அதைப் பருகுவதை விட்டுச் சாராயக் கடையில் எத்தனை பீப்பாய்களிலே சாராயம் இருக்கின்றது என்று நீ கணக்குப் பார்ப்பதினால் யாது பயன்? உனக்குத் தெரியவில்லையா?

எங்கே போனாலும் துக்கம் தரும் பாட்டு

"பண்டித மோதிலால்" என்ற பாட்டைக் கேட்டுக் கேட்டு ஒரு மனிதன் படும் அவஸ்தையைக் கவனியுங்கள்.

சத்தியவாதி சாக்கிரட்டீஸ்

(திரு. க. கோவிந்தராஜன்.)

தோற்றுவாய்

இந்நில வுலகின்கண் பற்பல தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திலும் அறிஞர்கள் தோன்றி, அஞ்ஞானத்திலும், அடிமைக் குழியிலும் ஆழ்ந்து கிடக்கும் மக்களை உய்வித்து வருதல் கண்கூடு. அவர்களில், இரவும், பகலும் இடையறாது, உரிமையின் பொருட்டு உழைத்து இவ்வுலக வாழ்வை நீத்த பெரியோர்களின் சரிதங்கள் பலவுள. இது காலை, தமிழ் நாடு சமய வெறியையும், வீண் ஆடம்பர வாழ்க்கையையுமே விரும்புகிறது. மனச் சாட்சிக்கும், சத்தியத்திற்கும் விரோத வாழ்க்கையை நடத்துபவர்களின் தொகையே மலிந்து கிடக்கின்றது. உண்மைக்கும், உரிமைக்கும் போராடுபவர்கள் பல இன்னல்களுக்குள்ளாகியும் கொலையுண்டும் வருகிறார்கள். தமிழ் நாட்டில் வீரமும், தீரமும் குன்றியிருக்கும் இஞ்ஞான்று, பகுத்தறிவு உரிமைக்குப் போராடி, உயிர்த்தியாகஞ் செய்த சத்திய வீரன் 'சாக்கிரடீஸின்' வாழ்க்கையும், அவரது அறவுரைகளும் தமிழ் நாட்டவர்க்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிப்பனவாகலின், அன்னார் வாழ்க்கையின் சுருக்கத்தையும், அவரது போதனைகளையும் ஈண்டு வரைவது அத்தியாவசியம். அப்பேரறிஞர் வசித்த நாடு எது? அந்நாட்டின் சிறப்பென்னை? என்பனவைகளை நோக்குவோம்.

கிரீஸ் தேசத்தின் தோன்மையும் அதன் சிறப்பும்

ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ் தேசம், சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர், செல்வத்திலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கியது. அத்தேசம் தத்துவ ஞானிகளையும், சிற்பிகளையும், கலைவாணர்களையும், கவிகளையும், நடிகர்களையும், நீதிமான்களையும் உலகிற்கு அளித்தது. இத்துணைச் சிறப்பினை வாய்ந்த இத்தேசத்தில், 'ஏதன்ஸ்' என்றொரு நகரம் உளது. இந் நகரத்தில்தான் பற்பல அறிஞர்கள் தோன்றினர். அவர்களின் பெயர் உலகெங்கும் பரவக்காணோம். ஆனால், இந்நகரில் பிறந்த 'சாக்கிரடீஸின்' பெருமை மட்டும் உலக மக்களனைவராலும் மெச்சப்படுகிறது. உலகம் இவரைப் புகழ்தற்குக் காரணங்கள் எண்ணிறந்தன வாகலின் அவைகளைப் பின்னர் கூறுவோம். அவருடைய இளம் பிராயம் கழிந்த வரலாற்றைத் தமிழர் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

பிறப்பும் இளம்பிராயமும்

சாக்கிரடீஸ் இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரத்து முந்நூறாண்டுகட்கு முன்பு ஒரு உருவச்சிலை செய்பவர்க்கும் மருத்துவச்சிக்கும் பிறந்தவர். இளமையில் அவர் தம் தந்தையாரின் வேலையையே திறம்படச் செய்து வந்தார். உருவச் சிலை செய்பவர்களெல்லோரும் இயற்கையின் இயல்பை நன்கறிந்தவர்கள் ; பெரும்பாலும் நன்னடக்கையும், சாந்தமும், திட சரீரமும் அவர்கள் பால் உண்டு. சாக்கிரடீஸ் கல்லூரிப் படிப்பை வெறுத்தார். அவர் உடலோம்பலைப்போற்றி உருண்டு திரண்ட கட்டு வாய்ந்த உடலைப்பெற்றிருந்தார். பார்வைக்கு அழகு வாய்ந்த முகத்தைப் பெற்றிலாததின் அவரைப் பலர் பரிகசித்தனர். எக் காரியத்தையும் எளிதில் செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்; இன்னல்கள் மலைபோன்று வரினும் அவைகளுக்கு ஒரு சிறிதும் அஞ்சாது சகித்துக் கொள்வார். பொறை, அன்பு, சாந்தம், தயை அவரிடம் இருந்தமையால், ஏதன்ஸ் நகரவாசிகளனைவரும் அவரைப் போற்றினர். அவர் சிறிது காலம் ராணுவப் படையில் ஓர் போர்வீரனாக விருந்து தம் கடனைச் செவ்வனே ஆற்றி வந்தார்; அரசாங்கத்தின் சார்பாகப் பல போர்களுக்குச் சென்று, போராடி, கீர்த்தியையும் பரிசில்களையும் பெற்றார்; பின்னர், தேச பரிபாலன சேவையிலும் கலந்து கொண்டார். அவருடைய மிக வெளிய வாழ்க்கையைக் கண்டு எல்லோரும் வியந்தனர். ஐந்நூறு நியாயவாதிகளடங்கிய ஓர் பேரவையிலும் அங்கத்தினராக விருந்து அரசாங்கத்திற்குத் தொண்டாற்றி வந்தார். நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்படாமல் நடக்க வேண்டிய தருணம் வாய்த்தபோது அவர் அப்பேரவையினின்றும் விலகினார். ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பற்றிக்கொள்ளப் பெரும் போர் செய்வது சாக்கிரடீஸுக்கு நியாயமெனத் தோன்றவில்லை. மற்று, போரில் மக்கள் மடிதல் அவர் மனதைப் புண்படுத்திற்று. ஆகலான், அவர் ராணுவப் படையினின்றும் விலகினார். பின்னர், 'இவ் வாழ்க்கையின் நோக்கமென்னை? என்று அவர் ஆழ்ந்து சிந்தனை செய்து வந்தார். அவர் கல்லூரிப் படிப்பை வெறுத்தாரென்று கூறினோம். அதற்குக் காரணங்கள் பலபடக் கிடக்கின்றன. ஆயினும் இன்றியமையாத சிற்சில வற்றையாதல் ஈண்டு வரைதலவசியம்.

அவர்தம் கல்வி முறை

ஏதன்ஸ் நகரில் அரும்பெரும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் அநேகமிருந்தன. அக் கல்லூரிகளில் கல்வி பயின்று வந்த மாணவர்களின் நோக்கம் பெரும்பாலும் உடலோம்பலாகிய அவ்வளவிலேயே அமைந்து கிடந்தது. அறிவு விளக்கத்தின் பொருட்டு மாணவர்கள் கல்லூரிக்குச் சென்றில்லை. கல்லூரிகளிளெல்லாம் ஏட்டுக் கல்வி யொன்றே பெரிதும் கவனிக்கப்பட்டு வந்தது. இயற்கைக் கல்வியை விடுத்துச் 'செயற்கைக் கல்வி'யே போதிக்கப்பட்டது. இவ்வாறு கல்வி பயின்றால் மாணவர்கள் எவ்வாறு தங்களைத் தாங்களறிய வியலும்? இளைஞர்கள் தமது வாணாளை வீணாகக் கழிக்கின்றனரே? இவ்விளஞ்சிறார்கள் உய்வதெங்ஙனம்? என்று சாக்கிரடீஸ் வருந்தினார். கட்டுப்பாட்டையும், அடிமைப் புத்தியையும் வளர்க்கும் கல்லூரிப் படிப்பை ஒழிக்க அடிகோலினார் சாக்கிரடீஸ். அதற்கென அவர் தம் உடல், பொருள், ஆவியையும் துறக்கத் துணிந்தார். 'ஏதன்ஸ் நகர வாசிகள்

சொற்பொழி வாற்றுதலிலும், விதண்டாவாதஞ் செய்தலிலும், ஆடம்பர வாழ்வை நடாத்துதலிலும் மோகங்கொண் டிருந்தனர். இவைகளையெல்லாம் கண்ணுற்ற சாக்கிரடீஸ் இளைஞர்களிடையே போந்து, அறிவு சம்பந்தமான விடயங்களையும், ஆன்ம ஞான விடயங்களையும், வினா விடை வாயிலாகப் போதித்து வரலாயினார். அவர் கடைத் தெருக்களிலும், தொழிற்சாலைகளிலும், தினே தினே சென்று சிறுவரிடத்தும், இளைஞரிடத்தும், பெரியோரிடத்தும், கடவுள், மெய்ம்மை, அறிவு, நீதி, பணி, கடமை இன்னோரன்ன சிரிய விடயங்களை எல்லோரும் எளிதில் அறியும் வண்ணம், நகைச்சுவையுடன் பேசி வரலாயினார். 'அவர் தம்மை யடுத்தோரையெல்லாம் தம்மைப் போலவே ஒழுகப் பயிற்றுவித்தனர்'; விதண்டா வாதம் புரிதலை வெறுத்தார்; அறிவைப் பெருக்குதற்கும், ஆன்மஞானத்தை யறிவதற்கும் மாபெருங் கல்லூரிகளோ பாடசாலைகளோ அமைத்தாரில்லை. அவர் பார்வைக்கு அழகுடன் கூடிய முகத்தைப் பெற்றிலராயினும், சிறுவர்களிடத்து அன்புடன் கலந்து உரையாடி வந்தமையினாலும், சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகினமையினாலும் அவரை அனைவரும் விரும்பினர். 'ஒவ்வொருவரும் தம்மைத் தாம் உய்த்துணரல் வேண்டும்' என்பதே அவரது போதவாகும்.

உலகாயதத்தில் உழன்று சகல போகங்களையும் அனுபவித்து வந்தவரும், சாக்கிரடீஸின் உயிர்த்தோழரும், அவரது சீடர்களில் ஒருவருமாகிய 'ஆல்சிபியாடேஸ்,' "சாக்கிரடீஸ் பேசும்போது என் இதயம் துடிக்கின்றது; கண்களினின்றும் நீர் பெருகுகின்றது; என்னுடைய வாழ்க்கை பயனிலாததென்றறிகிறேன்; அவர் முன் நிற்க எனக்கு வெட்கமாக விருக்கின்றதே" என வருந்திக் கூறியது, சாக்கிரடீஸ் மக்களிடத்துக்கொண்டிருந்த ஆன்ம நேயம், உண்மை, பேச்சுத்திறமை, வசீகரத்தன்மை இன்ன பிறவற்றைத் தெள்ளிதில் புலப்படுத்துகிறது. மனச்சாட்சிக்கும், சத்தியத்திற்கும் தவறாது உழைத்து வந்த சாக்கிரடீஸைப் போற்றினர் பலர்; தூற்றினோரும் இல்லாமலில்லை. எந்நாட்டிலும் அறிவிலிகள் அறிஞர்களைத் தூற்றி வருதல் வெள்ளிடைமலை. அவர் தம் இல்லக்கிழத்தியாரே தன் கணவரை எதிர்த்து வந்தார். ஏனெனின், அவர் தமக்கென உழைத்து நிதியஞ் சேர்க்காது பிறர் நலம் பேணி வாழ்க்கையை நடாத்தினமையே என்க. அம்மையார் தம்மீது எத்தனை வசை பாடினும் அவற்றையெல்லாம் இனிதே ஏற்றுக்கொண்டு அமைதியாகவும், பொறுமையாகவுமிருப்பது சாக்கிரடீஸின் வழக்கம். ஒரு முறை அவர் மனைவி தன் கணவர் மீது கோபங்கொண்டு கொதிநீரைக் கொட்டினார். சாந்த சொரூபியாகிய சாக்கிரடீஸ் சினந்தாரில்லை.

நிற்க, எவரெவர்க்கு எவ்வெத் துறையில் நாட்டஞ் செல்கிறதோ, அவ்வத் துறையில் அவர்களை விடுத்தல் வேண்டுமென்பதும் அறிவை வளர்ப்பதற்குப் பொருளை விரயஞ் செய்தல் கூடாதென்பதும், மக்கள் அகன்ற கல்வியையும் விரிந்த கேள்வியையும், கூரிய அறிவையும் பெற்றிருத்தல் வேண்டுமென்பதும் அவருடைய இன்றியமையாத போதனைகளாகும். ஈண்டுப் பழந்தமிழர்கள் கைக்கொண்டுவந்த முறைகளும் சாக்கிரடீஸ் வகுத்த முறைகளும் ஒன்றாயிருத்தல் காண்க. இவ்வாறு இப்பெருந்தகையார் தம் கடனை ஆற்றிவந்தபோது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் முதலிய தீக் குணங்களின்றித் தூய உள்ளமுடை

யவராய்த் தம்மைத் தூற்றினோரையும், போற்றினோரையும் ஒப்பக்கொண்டு அவர்களிடத்து அன்பு பாராட்டி அடக்கமுடையவராய்த் தமது வாணாளைக் கழித்து வரலாயினர். அவர் வகுத்த கல்வி முறை உலகத்தோரனைவராலும் போற்றப்படுகிறது. எனினும், அவர்கள் அவருடைய முறையைக் காரியாம்சத்தில் கொணராமலிருப்பதுதான் விந்தையினும் விந்தை.

சமயக்கோள்.

கிரேக்கர்கள் கடவுளைப் பேரழகாகக் கொண்டு வழிபட்டு வந்தனர். இஃதின்றி, போர், நீர், குன்று, காடு முதலியனவற்றிற்கும் முறையே ஒவ்வொரு தேவதை யுண்டென்று உறுதி கொண்டு அவைகளுக்கு வருடந்தோறும் 'டாம்பீக' 'பூசை' களியற்றினமையும், ஒலிம்பஸ் என்னும் மலையுச்சியில் தேவகணங்கள் வாசஞ்செய்து வந்தமையும் கிரேக்க புராணங்களில் பரக்கக் காணலாம். அத்தேவ கணங்களின் விபரீதச் செயல்கள் வெறுக்கக் கூடியனவாகவு மிருந்தன. கிரேக்கர்கள் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி யிருந்தனர். சாக்கிரடீஸ் தேவதைகளை நம்பி யிருந்தாராயினும், அவைகள் விபரீதச் செயல்களைச் செய்துவந்ததாகத் தம் நாட்டார் கூறிவந்ததை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. உலகத்தைத் தோற்றுவித்த ஓர் ஆண்டவன் மீது அவருக்கு நம்பிக்கையுண்டு; இவ்விறைவனிடத்துக் குலையாத, நிலைத்த, நிறைந்த உறுதிகொண்டு அவனை வழுத்தி வந்தார். மனச்சாட்சி (பகுத்தறிவு) என்பது ஒவ்வொருவருள்ளத்திலும் உண்டு என்பதையும், ஆன்மா என்றும் அழியாததென்பதையும், இக்காய மழிந்த பின் மறுபிறப்பு உண்டென்பதையும், 'மெய்ஞ்ஞான உணர்வே மேலான வின்பம்' என்பதையும் அவர் நம்பி யிருந்தார். ஆண்டவனை ஒவ்வொருவரும் ஆடம்பரமின்றி வழிபட வேண்டுமென்றே கருதினர்.

அவர் தாம் நல்லவராயும், நீதிமானாயும், உண்மையுடையவராயும் வாழ்க்கையை நடாத்த எவ்வளவு செல்வம் வேண்டுமோ அவ்வளவையே கொடுத்தருளும்படி ஆண்டவனை வேண்டுவார். சுருங்கக் கூறின், நியாயமும் சத்தியமுமே அவரது நோக்கம்.

இன்னா செய்தார்க்கும் நன்னயஞ் செய்தல்

சாக்கிரடீஸ் சன்மார்க்க நெறியை மக்களிடைப் போதித்து வந்தபோது ஏதென்ஸ் நகர வாசிகளே அவரை எதிர்த்து வந்தார்கள். எனினும் அவர் தமது கொள்கைகளை விட்டுக்கொடுத்தாரில்லை. சாக்கிரடீஸ்,

இன்னாசெய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்னுமின்னுரைகளைக் கடைப்பிடித் தொழுகினராகலின், தம்மை எவர் தூற்றினும், சாந்தத்துடன் அவைகளை ஏற்றுக்கொண்டு தமக்குத் தீமை விளைவித்தார்க்கும் நன்மையே புரிந்து வந்தார்.

"அரசாங்க விரோதி"

சிறுவர்களினுடைய இயற்கை யறிவு எத்துறையில் நாடுகிறதோ அத்துறையில் அவர்களை ஈடுபடுத்தல் வேண்டுமென்பது சாக்கிரடீஸின் சீரிய

நோக்கமென்று முன்னர்க் கூறினோம். அவ்விழுமிய போதனையை ஏதென்ஸ் நகரவாசிகள் பலர் சிறப்பாக—இளைஞர்கள்—கடைப் பிடித் தொழுகினர். அரசாங்கத்தில் உயரிய உத்தியோகத்தை வகித்து தோல் வாணிபமும் செய்து வந்த 'அனிடஸ்' என்பானுக்கு ஒரு மைந்தன் இருந்தான். அச் சிறுவன் சாக்கிரடீஸின் கொள்கைகளுக்கு உடன்பட்டிருந்தான். அவன் தந்தை தன்னுடைய மைந்தனைத் தோல் வாணிபஞ் செய்யுமாறு பணித்தான். மைந்தனோ மானுட வாழ்க்கையின் நோக்கத்தை நன்கறிந்தவனாதலின் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற உடன்பட்டிலன். அடங்காச் சினங்கொண்ட 'அனிடஸ்' என்பான் தன் மைந்தனை சாக்கிரடீஸ் கெடுத்து விட்டாரென்று பலர்க்கறிவித்தான். மற்று, அவன், நகரவாசிகள் பலரைத் தூண்டித் தன் பக்கல் சேர்த்துக்கொண்டு, சாக்கிரடீஸ் இளைஞரைக் கெடுத்து வருவதாகவும் நகர தேவதைகளை வழிபடாது தனக்கென தேவதைகளைச் சிருஷ்டித்துக் கொண்டதாகவும், எனவே, 'அரசாங்கத்திற்கு எதிராக' விருந்ததாகவும் ஐந்நூறு பேர்களடங்கிய கிரேக்க நீதிபதிகள் முன்னர், அவர் மீது குற்றஞ் சாட்டினான். அந்நீதிபதிகளில் சிலர் சாக்கிரடீஸின் 'ஜன்ம' விரோதிகளாவர்.

நீதி மன்றத்தில் அறவுரைகள்

நியாய மன்றத்தில்சாக்கிரடீஸின் உயிர்த் தோழர்களும், மாணாக்கர்களும் பல பகைவர்களும் குழுமி யிருந்தனர். எழுபதாண்டுகளெய்திய வயோதிகர் சாக்கிரடீஸ் அமைதியுடனும் புன்முறுவலுடனும் அம்மன்றத்திற்குச் சென்றார். வழக்கு விசாரிக்கப்பட்டது. உண்மை, உறுதி, அஞ்சாமைக்கு நிலைக்களனாக விளங்கிய அறிஞர் சாக்கிரடீஸ் குற்றவாளியாக்கப்பட்டு அவர்க்கு மரண தண்டனை விதித்தார்கள் நீதிபதிகள். சத்திய சீலர் சாக்கிரடீஸ் எதிர்வாதம் செய்யுமுகத்தான், நியாயவாதிகளை நோக்கி "பூரண ஆன்மஞானத்தைப் பெறுவதற்கு நீங்கள் முதன் முதல் உங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டு மென்றுதான் உங்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறேன். அதைப் பெறுவதன் முன் உங்களுடைய சரீரத்தையோ, அல்லது செல்வத்தையோ நினைத்தல் கூடாது. செல்வத்தினின்றும் நீதி நெறிகள் பிறப்பதில்லை; ஆனால், மக்கள் பெற்றிருக்கும் செல்வமோ ஏனைய மற்றச் சிறந்த பொருட்களோ, நீதி நெறிகளினின்றுந்தான் வருகின்றன; இத்தகைய போதனைகளைச் சிறுவர்களிடத்து யான் எடுத்துரைப்பது தங்கட்குக் கெடுதலாகத் தோன்றலாம். யான் அரசாங்க ராணுவப் படையிலிருந்தபோது அரசாங்கத்தின் சார்பாகப் போருக்குச்சென்று என் கடனை ஆற்றியிருக்கிறேன். எனக்கிட்ட கட்டளையைச் சிரமேற்றாங்கிச் செய்து முடித்தேன். உயிர் துறத்தற்கு ஒரு சிறிதும் அஞ்சினேனில்லை. பரிசில்களையும் நீங்கள் எனக்களித்தீர்; இதுபோது, பகுத்தறிவைப் பெருக்கற்கும், என்னையே யான் அறிந்தின்புறுதற்கும் என்னுடைய வாணாளைக் கழித்து வருஞ்சமயம் அவைகளுக்கு எதிராக என்ன இடையூறுகள் வரினும் அவைகளை யான் பொருட்படுத்தேன். மற்றுமொரு விபரீதமான குற்றத்தை என் மீது சமத்தி யிருக்கின்றீர். (ஆண்டவனைப் பற்றியதாகும்). என்மீது வழக்கைத் தொடுத்திருப்போர்களைப் போன்றே யானும் தேவதைகளை நம்புகிறேன். ஆண்டவனே தக்க தீர்ப்பையளிப்பானாதலின் அவரிடமே என்னுடைய வழக்கை விடுத்துச் செல்கிறேன். நீங்கள் என்னை விடுதலை செய்யினும் யான் என்னுடைய பணியின் முறை மாற்றிக்கொள்ளேன். ஏதென்ஸ் நகரவாசிகளே! உங்களை யான் அன்

புடன் பேசுகிறேன். ஆனால், யான் ஆண்டவனொருவனுக்கே கீழ்ப்படிந்து நடப்பேனல்லாது உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிவேனல்லேன். சீரும் சிறப்பும் வாய்ந்த அதென்ஸ் நகர மாந்தர்களே! செல்வஞ் சேர்த்தற் பொருட்டும், மதிப்பை யடைதற்பொருட்டும் உங்களது வாணாளை வீணே கழிக்கின்றீர்களே தவிர பகுத்தறிவைப் பெருக்குதற்கும், சத்தியத்திற்கும், ஆன்ம ஞானத்திற்கும் உங்கள் கவனத்தைச் செலுத்துகின்றீர்களா?

ஓ! நியாயவாதிகளே! இறத்தற்குச் சந்தோஷ மடையுங்கள் "நல்லவனுக்கு எத்தீங்கும் வாராதென்கிற உண்மையை யுணருங்கள். யான் வீரர்கள் வாழும் இடத்திற்குச் செல்கிறேன். அங்கும் அறிவைப் பெறுதற்கு உழைப்பேன்"—என்று வீரமொழிகளைப் பகர்ந்தார்.

நீதி நெறி பிறழாது மக்களுக்கு இதமே புரிந்துவந்த சாக்கிரடீஸ் நியாய மன்றத்தார் தீர்ப்புக்குச் சிறிது மஞ்சாது, முகமலர்ச்சியுடன் இணங்கினார். ஆனால், அவர் நியாயவாதிகளின் நடத்தைக்கு இரங்கினார்.

சீடர்களின் பிரிவாற்றாமை.

டீலாஸ் என்னும் தீவுக்குத் தெய்வகாரியமாகவும், திதிநிரட்டற் பொருட்டும் அனுப்பப்பட்ட கப்பலானது அதென்ஸ் நகருக்குத் திரும்புதற்கு முப்பது நாட்கள் சென்றன. அக்கப்பல் நகர்வந்து சேரும் முன்னர் யாதொரு தண்டனையையும் நிறைவேற்றுதல் கூடாதென்பது கிரேக்கர்களின் கொள்கை. ஆதலின், சாக்கிரடீஸ் முப்பது நாட்கள்வரை சிறைக்கூடத்தி லிருக்க நேர்ந்தது. அவர் சிறைச்சாலையையும் அறச்சாலையாகக்கொண்டு ஆங்குப் போந்த அவர் தம் நண்பர்களுடனும், சீடர்களுடனும் உரையாடி வந்தார். அவர்களுள் 'அறிவினது எல்லையை யெய்தி நிற்பவரென்று எத்தேயத்தாராலும் கருதப் பெறுகின்றவராகிய ப்ளேடோ என்பார் 'கிரேக்க வித்தகர்' சாக்கிரடீஸினுடைய முதற்சீடராவர். சாக்கிரடீஸின் வாழ்க்கை வரலாற்றை இவர்தாம் குறிப்பிட்டு வைத்திருக்கின்றாராகலின் இவருக்கு என்றும் நாம் பெரிதும் கடைமைப்பட்டுள்ளோம். அறிஞர் ப்ளேடோவினுடைய 'குடிவாழ்க்கை' என்னும் நூல் உலகில் மிகச் சிறந்த தொன்று. அதை அனைவரும் வாசித்தல் வேண்டும். இவரைத் தவிர கிரீடோ, பேர்டன், அப்பாலோடோரஸ் முதலியோரும் சாக்கிரடீஸின் உயிர்த் தோழரும், சீடர்களுமாவர். அவர் தம் நண்பரொருவர் சாக்கிரடீஸ் அநியாயமாக உயிர் துறக்க நேர்ந்தமைக்குக் கலுழ்ந்து நின்றபோது சாக்கிரடீஸ் அவரை நோக்கி, "அன்பா! ஆன்மா என்றும் அழியாதது, யான் இறத்தல்பற்றி வருந்த வேண்டா" என்று தேறுதல் கூறத் சற்று ஆறுதல் உற்றார். தம் ஆருயிருக்கு 'உலை'வைத்த அனிடஸ் என்பான் சாக்கிரடீஸுக்கு அருகாமையிற் சென்றபோதுங்கூட அவன் மீது யாதொரு எரியையும், பகையையுங் காட்டாது அவன் செய்கைக்கு இரங்கினார்.

சத்திய சோதனை

இங்ஙனம் இருபத்தொன்பது நாட்கள் இனிதேகின. சென்ற கப்பலும் வந்து சேர்ந்தது. முப்பதாம்நாள் உதயமாயிற்று. சாக்கிரடீஸ் நஞ்சுண்ணும் நாளும் வந்தது. அவர் தம் சீடனாகிய 'கிரிடோ' என்பான் ஆற்றொணாத் துயருடன் சாக்கிரடீஸினிடம் போந்து "கப்பல் வந்து விட்டது; சிறை காப்போனுக்கு இலஞ்சம் கொடுத்து உம்மை நாங்கள் தப்புவிக்கிறோம். வந்து விடுங்கள்" என்று மனந் துடிதுடிக்க மன்றாடினான். சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்தொழுகிய சாக்கிரடீஸுக்குச் சோதனை காலம் வந்தது போலும்! சாக்கிரடீஸ், தம்முடைய வாழ்க்கை முற்றிலும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்று போதித்து வந்ததாகவும், அவ்வாறே தாமும் நடந்து வந்ததாகவும், இப்பொழுது உயிர் துறத்தற்கு அஞ்சி சட்டத்தை உடைத்தெறிவது நியாயமன்றெனவும், தமக்கு விதித்த தண்டனையை யேற்றுத் துன்ப மனுபவிக்க விசைந்திருப்பதாகவும் மறுமொழி கூறினார்.

நஞ்சுண்டு உயிர் நீத்தல்

அற்றைய நாள்முழுதும் சாக்கிரடீஸ் தம் சீடர்களுடனும், தோழர்களுடனும் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தனர். பிரிவாற்றாமையினால் கண்ணீர் விட்டுக் கதறிக்கதறி அழுதார்கள் அவர் தம் உயிர்த்தோழர்கள். கதிரவனும் மறைந்தான். சிறை காப்போன் 'விஷபானம்' நிரம்பிய ஒரு பாத்திரத்தைக் கையிலேந்தி சாக்கிரடீஸினிடம் போந்து "பெருந்தன்மையும், பொறுமையும் வாய்ந்த தங்கட்கும் நஞ்சைக்கொடுக்க இவண் வந்துளேன்; அரசாங்கக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவனா யிருக்கிறேன்; இது என் கடனாகும்; இக்கொடுங் காரியத்திற்கு யான் காரணமன்று; என்மீது நீங்கள் சினங்கொள்ள மாட்டீர்களென்று திடமாக நம்புகின்றேன்; பொறுத்துக் கொள்ளுங்கள்" எனத் தாழ்வுடன் பேசி அப்பாத்திரத்தை அவரிடம் கொடுத்தான். ஒருவர் இன்னுயிரை இன்னொருவர் போக்கடித்தல் அதென்ஸ் நகர மாந்தரின் பழக்க மின்றாதலின், சாக்கிரடீஸ், மனங் கசிந்துருகி அழுதுகொண்டு நின்ற சிறை காப்போனிடமிருந்து அந்நஞ்சுப் பாத்திரத்தைத் தாமே பெற்றுச் சிறிதும் தயங்காது தைரியத்துடன் அதைப் பருகினார். அவருடைய தோழர்களில் சிலர், தம்முடைய உயிர்த்தோழரைப் பிரிய நேர்ந்தமைக்குப் பெரிதும் வருந்தினர். சிலர் தேம்பித் தேம்பி அழுதனர். சாக்கிரடீஸ் அவர்கள் மீது கோபித்துக்கொள்ளவே அவர்கள் வெட்க மடைந்து, தாம் கண்ணீர் விடுவதை நிறுத்திக்கொண்டனர். சிறிது நேரஞ் சென்றதும் சாக்கிரடீஸ் உயிர் துறந்தார்.

இங்ஙனம், இரவும், பகலும் இடையறாது அறிவு உரிமைக்கும், உண்மைக் கல்விக்கும், உயரிய பக்திக்கும் உழைத்து உயிர்நீத்த சத்தியாக்கிரகி சாக்கிரடீஸின் சரிதையைத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும்; அறிந்து அவர் வழி ஒழுகல் வேண்டும். இப்பெரியாரின் உடல்மறைந்து வற்றும் இவாது உண்மையும், உறுதியும், அஞ்சாமையும், உழைப்பும் நம்முன் நிலவி, நமக்கு ஊக்கமூட்டிக் கொண்டிருக்கின்றன. கொலைக்கும், பொய்மைக்கும், ஆடம்பர வாழ்க்கைக்கும் உலகம் இரையாகி வரும் இஞ்ஞான்று சத்தியவான் சாக்கிரடீஸின் அருளுரைகள் உலகில் பரவினால், நிரந்தர சமாதானமும், ஒற்றுமையும், சிறந்த கல்வியும், ஆடம்பரமற்ற கடவுட்பக்தியும், அன்பும் உண்டாகாமற் போகுமா?

பிரேமா

(தென்னாப்பிரிகா-டர்பன், சரஸ்வதி சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை அவர்கள்.)

குறிப்பு:—மானிடர் மனத்திற்கு மகத்தான எழுச்சியும் அலர்ச்சியும் கொடுப்பவை மூன்று; அவை தெய்வபக்தி, காதல், குழந்தைப் பிரேமை என்பவையாம். இவை மூன்றும் மாசற்றவை; பரிசுத்தமானவை; இம்மூன்றில் ஒன்றின் தன்மையை அறியாதார் மெய்யான உலக சுகமே இன்னதென்று அறியாதார் ஆவர். அன்னார் நிலை பரிதபிக்கத் தக்கது. இந்த மூன்றிலும் சரியானபடி பண்பட்டவர்க்கோ, இந்த ஜகவாழ்க்கை அற்புதமான ஒரு தெய்வ மாங்கனி நுகர்வதுபோல் இருக்கும். ஆனால் மூன்றில் முதலிரண்டினைவிட, மூன்றாவதாகிய குழந்தைப் பிரேமை சதாரணமாய் எவரும் எளிதில் அடையக் கூடியதாம். தெய்வபக்திப் பரவசம் குறிப்பிட்ட இஷ்ட தேவதையின் தீவிர சேவையிலேயே உண்டாகும். காதலுருக்கம் கருத்தொன்றிய காதலருக்கே சாலும். ஆனால் குழந்தைப் பிரேமையோ சாதாரணமாய் எந்தக் குழந்தையைக் கண்டாலும் எழக்கூடியது. குழந்தைகளின் மழலைகள், விளையாட்டுக்கள் முதலிய லீலைகள் சாதாரணமாய் எவர் முகத்தையும் அலரச் செய்யும். ஆனால் இந்த லீலைகளிலும் மசியாத கடு கடு விருதய சடு சடு முகத்தினரும் ஒரு சிலர் உளர். அவர்கள் இந்த உலகில் பெருத்த பாக்கிய ஹீனர்கள் என்றே சொல்லவேண்டும்.

குழந்தைகளின் லீலைகள் பலவகையின. அவை ஒவ்வொரு வயதிலும் பலப்பலவாய்ப் பரிணமிக்கும். முகம் பார்த்தல், சிரித்தல், தீபங்காணல், பால் பருகல், கையுதறல், காலுதறல், கைகளைச் சப்புதல், குப்புற விழுதல், தலைதூக்கல், அழல், உட்காரல், தவழல், பண்டங்களை இழுத்தல், எழுந்து நிற்றல், மழலை தொடங்கல் என்பவை சில. இவையும் பிறவுமாகிய லீலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழந்தையிடத்தும், ஒவ்வொரு விநுசாக விளங்கி மனதை வசிகரிக்கும்.

அடியிற் கூறிய பாட்டு எமது குழந்தை பிரேமகுமாரியின் சில லீலைகளைக் குறித்து குதூகலத்தால் பாடியது.

அன்னவெண் டாமரை வாணி—எமக்
கன்போ டளித்தபி ரேமா
வன்னச் சண்முகத்தான் பேணி—கனி
வாழ்வை வளர்க்கும்பி ரேமா

சந்திர வன்னமாம் பிரேமா—எங்கள்
சர்க்கரைக் கட்டிபி ரேமா
சந்தம் கமழும்பி ரேமா—எங்கள்
கட்டிக் கரும்புபி ரேமா
சின்னஞ் சிறியதோர் செண்டு—அதைச்
செல்லச் சிறுகையிற் கொண்டு
கன்னங்கள் உப்பப்பால் மண்டி—எங்கள்
கண்களை நோக்கிடும் பிரேமா
வண்டுகள் போலத் துலங்கும்—ஒளி
வண்ண வசிகரக் கண்முன்
பண்டம் பலகாரம் வந்தால்—மிகப்
பரபரப் பெய்துமே பிரேமா
கன்னெனுஞ் சங்கீதங் காணின்—ஒரு
கள்ள சருப்பத்தைப் போலே
மெள்ள இருசெவி மொண்டு—இசை
அள்ளிக் குடிக்கும்பி ரேமா
தத்தித் தவழ்ந்தோடி வந்து—வெகு
நாட்டிக மாய்மடி தாவி
சத்தமில் லாமலென் தொடையில்—சிரம்
சார்த்தி மகிழும்பி ரேமா
ஆம்பல் மலர்தல் போல—அலர்ந்
தாவென்று வாயைத் திறந்து
தேம்பி யழுங்குர லாலே—குழல்
தேங்கிசை கொட்டும்பி ரேமா
தாத்தத்தத் தாத்தத்தத் தாத்தா—எனத்
தங்கக் கிளிமொழி போல
எத்துந் தமிழில் மழலை—சொலி
இன்பம் பயக்கும்பி ரேமா
தேயு வெனத்துய தாகி—தெய்வத்
தேசு நிறைந்த முகத்தில்
ஆயிரம் முத்தங்கள் தந்தும்—எங்கள்
ஆசை யடங்காப்பி ரேமா
தூய்மை கொடுக்கும்பி ரேமா—அன்பின்
தோரணை காட்டும்பி ரேமா
வாய்மை பெருக்கும்பி ரேமா—எங்கள்
வாழ்வை வளர்த்திடும் பிரேமா.



நெற்றிக் குறிகளின் தத்துவம்

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

புண்ணிய பூமியாகிய நம் பாரதகண்டத்திற் பொருந்திய மதங்களுக்குள் இந்து மதக் கோட்பாடுகள் பிற மதக் கோட்பாடுகளிற் பெரும்பாலும் மாறுபட்டனவா யிருக்கக் காண்கின்றோம். அம்மாறுபாடும் சிறப்பியல்புகளில் மாத்திரமிருப்பனவே யன்றி யாண்டும் பொதுவியல்புகளிற் காணக் கிடைத்தலில்லை.

சிறப்பியல்புகள் இடத்தையும் காலத்தையு மொட்டி யுண்டானவையே யென்பது செவ்விதி னாராய்வோர்க்குத் தெளிவாம். அம்மாறுபாடுகள் பல. அவற்றுள் நெற்றிக்குறியு மொன்றாம். அன்றியும் சிறப்பியல்புகள் புறத்தைப் பற்றியவை யென்பதும் பொதுவியல்புகள் அகத்தைப் பற்றியவை யென்பதும் கண்டறியத் தக்கனவாம்.

இந்து மதம் நெற்றிக் குறியை இன்றியமையாததென வற்புறுத்துகின்றது. நமது தேசத்தில் மிகப் பிராபல்யமாகவுள்ள மகம்மதிய கிறிஸ்தவ மதங்களால் மிகவும் வெறுக்கப்படுகின்ற இந் நெற்றிக் குறிகள் இந்து மதத்தில் ஒரேவிதமாகவிராமல் பலதிறப்பட்டனவாயு மிருக்கின்றன.

இதற்குக் காரணம் இந்து மதம் பல பிரிவுகளையுடையதா யிருத்தலே யாமென்பது சொல்லாமலே விளங்கும். எனினும் வடநாட்டில் இவை அவ்வளவு முக்கியமானவையெனக் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. அத்தென்னாட்டிற்றான் இவை பெரு மதிப்புற்றுப் பிறங்குகின்றன.

இவை எத்தனையோ பிரிவுகளாயிருக்கின்றன? சில முக்கியமான பிரிவுகளை மாத்திரம் காட்டுவோம். திருநீறு, திருமண், சந்தனம் இம்மூன்று பிரிவுகளே பெரும்பாலும் வழங்கப்பட்டு வருகின்றன. சந்தனப் பொட்டிடுதல் சில விடங்களில் விபூதி யணிதலோடு சம்பந்தப்பட்டிருக்கும். சிலவிடங்களில் கருஞ்சாந்திடப்படுதலு முண்டு. வடக்கே திருநீறும் திருமண்ணும் வழக்காற்றிலில்லை. மஞ்சள் நிறமான கோபியை வழங்கி வருகின்றனர். இவையே முக்கியமான பிரிவுகள். இவற்றுள்,

தென்னாட்டில் வழங்கப்படுவனவாகவுள்ள திருநீறும் திருமண்ணும் ஒன்றற்கொன்று விரோதத் தன்மையை யுள்ளனவாக அவற்றைத் தரிப்போரால்

கருதப்படுகின்றன. விபூதி அல்லது திருநீறு தரிப்போராகிய சைவர் திருமண்ணை வெறுப்பர். திருமண்ணிடுவோரைப் பாவிகளெனவும் பாவிப்பர். திருநீறணிவோர்க்கே கடவுளனுக்கிரகமும் வீடுபேறும் எய்துமென்றும் இயம்புவர். அவ்வாறே திருமண்ணிடுவோராகிய வைணவரும் திருநீற்றைச் சுடுகாட்டுச் சாம்பலெனத் தாழ்த்திப் பேசுவர். திருநீறிடுவோரைப் பாஷாண்டிகளென்று பழித்துக் கூறுவர். திருமண் தரிப்போர்க்கே ஈசுவரானுக்கிரகமும் பரமபதமும் பாங்குடன் கிடைக்குமெனப் பகர்வர். எனவே விபூதிக்கும் நாமத்திற்கும் ஜன்மப் பகையுண்டென்பது வெளிப்படை. இனி,

நாமத்திலும் தென்கலை வடகலை இரண்டு பிரிவுகளுண்டு. பாதத்துடனிடப்படுவது தென்கலை யெனவும் பாதமின்றி யிருப்பது வடகலை யெனவும் வழங்கப்பெறும். விபூதிக்கும் நாமத்திற்கு முள்ள பகையிலும் அந் நாமத்தினுட் பிரிவுகளாகிய தென்கலைக்கும் வடகலைக்குமுள்ள பகை மிகக் கடுமையானதாகும். ஒவ்வொருவரும் தாந்தாமிடும் குறியே ஏனையவற்றினும் ஏற்றமுடையதென்பதற்குப் பல சுருதிகளையும் ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டே வாதாடுகின்றனர். எல்லோரும் சிறந்த ஆதாரங்களைக் கொண்டிருப்பின் அவற்றுள் இது உயர்ந்தது; இது தாழ்ந்தது'' எனக் கூறுவதெங்ஙனமோ? அங்ஙனம் அறைவதாயின் அனைத்தும் உயர்ந்தனவே யன்றோ? அல்லது அனைத்தும் தாழ்ந்தனவேயென்றோ இயம்புவதையன்றி வேறு நெறியொன்று மின்றாம். இத்தீர்ப்பு எழிலற்றதாகச் சிலர்க்குத் தோன்றலாம். எவர்க்கு எவ்வாறு தோன்றினும் சரி; இதுவே சரியான முடிவாகும். திருநீறே சிறந்ததெனச் சிவாகமங் கூறுகின்றது.

ஆழியுடன் சங்கமங்க மெலாந் தரித்தே
　　ஆறிரண்டு திருநாமம் அழகாய் இட்டு
வாழிடசி வயிணவருக் கிச்சை செய்து
　　மன்னுதிரு விலச்சினையே குறியாக்கொண்டு
ஏழுறசா தியரேனும் அவர் தமக்குச்
　　செங்கராய் நீறிடும்பா சண்டரான
பாழரையும் அணுகாப்பா கவதர்க்கன்றோ
　　பரமபதம் கிடைப்பது மற்றவர்கட் குண்டோ

என காரணன் மதநூல் கவில்கின்றது. இவற்றுள் கொள்ளத் தக்கதெது? தள்ளத்தக்கதெது? கொள்ளுவதாயின் இரண்டினையும் கொள்ளுதல் வேண்டும்; தள்ளுவதாயின் இரண்டினையும் தள்ளுதல் வேண்டும். நிற்க

திருநீற்றையும் திருமண்ணையும் நெற்றியிற் றீட்டிக்கொள்ளுதலாலுள்ளதாம் பயன் யாது? என்று சிலர் வினவலாம். இதற்குத் திட்டமான ஒரேயொரு விடையிறுத்தலியலாது. ஒன்றற்கொன்று மாறுபாடாகவுள்ள இரு விடைகள் தரவேண்டிய தத்தியாவசிய மாகின்றது. மேலே காட்டிய முடிவை யொட்டியே இவ்விடைகளெழுகின்றன. என்னை?

மேற்கூறியாங்கு, சைவன், விபூதியால் தீவினைகளெல்லாம் தொலையும்; சகல பேறுகளுமுண்டாகும்; சிவலோகமுஞ் சித்திக்கும் என்று இயம்புவான்; அதற்காதாரமாக ஆகமங்களைக் காட்டுவான். அவ்வண்ணமே வைணவன்

நாமத்தாலுண்டாகும் பல நலங்களையும் பகர்வான். இது ஒரு விடை. சைவன் நாமம் பயனற்றதெனவும் வைணவன் விபூதி வீணானதெனவும் இவ்விரு பகுப்பிலும் சேராத ஏனையோர் இரண்டும் பயனற்றனவெனவும் கூறுப. இது மற்றொரு வகை விடையாம். இனி நமது ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

தற்காலம் சைவரும் வைணவரும் கொண்டுள்ளவாறு முறையே திருநீறும் திருமண்ணும் ஆண்டவனருளை யடைவிக்கும் அருநெறியாகா. திருநீறிட்டாலுந் திருமண் தீட்டினாலும், தென்கலைநாமம் திவ்வியமாய்த் தரித்தாலும், வடகலை நாமம் வாகாய்ப் புனையினும், வேறெவ்வகைக் குறியை விசித்திரமா யணியினும் இவற்றாலெல்லாம் ஈசுவரனருளில் இலேசமாத்திரமும் எய்தப்பெறோம். ஆகவே, மேற் கூறியவாறு நாமமே சிறந்தது. நீறே நேரிது, வடகலையே மாண்புடையது, தென்கலையே தீவினை தீய்ப்பது என வாதாடி ஒருவரை யொருவர் நிந்தித்துச் சண்டை யிட்டுத் திரிவது நிஷ்பிரயோசனமான காரியமே யாகும். அச்சங்கொள்ளா தறைய வேண்டின் அறியாமையே யென்றுங் கூறலாம். அன்றியும்,

தற்காலம் விபூதி திருநாமங்களைத் தரிப்போரின் தவறான கொள்கையின் காரணமாகப் பல தீமைகளே யுண்டாகின்றனவெனக் கூறற்கும் இடமுண்டு. எவ்வாறெனின், முதலாவது: பகைமை யதிகரிக்கின்றது. இதன் காரணமாக நாட்டில் ஒற்றுமை குன்றிப் பிளவுகளுண்டாவதால் நாட்டின் நலம் நாச முறுகின்றது. சைவ வைணவச் சண்டைகளைப் பற்றியும் வடகலை தென்கலைச் சண்டைகளைப் பற்றியும் நாம் அதிகமாகக் கூறவேண்டிய அவசியமில்லை. "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்னும் பழமொழியின்படி, இச் சண்டைகளால் அன்னியரின் ஆதிக்கம் வன்மையுறுவதற் கிடமாகின்றது. இது ஒரு பெருந்தீமை யென்பதைப் பேசவும் வேண்டுமோ?

இரண்டாவது: இப் பகைமையின் காரணமாக குரோதம் கோபம் பொறாமை முதலிய துர்க்குணங்கள் வந்து சேர்ந்து கொள்ளுகின்றன. இத் தீக்குணங்களைக் கொண் டிருப்போன் கதி யாதாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவனுக்கு எல்லா நரகங்களும் சொந்தமாய் விடும். இது "குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளும்" கதையோ டொத்திருக்கின்றதன்றோ?

இனி, மற்றொரு தீமையு முண்டு. அதாவது: சைவன் விபூதி தரித்தல் மாத்திரத்தாலே தனது சகல பாவங்களும் நசிக்குமென்றெண்ணிக் கொள்ளுகின்றான். அப்படியே வைணவனும் திருமண் அணிந்துகொள்வதனால் தீவினைகளெல்லாம் தீரும் என்றெண்ணிக்கொள்ளுகின்றான். இவ் வெண்ணம் யாதொரு பயனையும் பயவாதொழிதலோடு மேல் செய்யவேண்டிய நற்காரியங்களையும் செய்ய வொட்டாமல் தடை செய்யவும் காரணமாகின்றது. இவ்வளவேயோ? அவற்றைத் தரிப்பதனால் தாம் செய்யும் பாவங்களெல்லாம் பறக்குமென்னும் கருத்தினால் பாவஞ் செய்ய அஞ்சாமலிருக்கும் தன்மையும் அதிகமாகின்றது.

ஆனால், இவற்றை யணிதலால் உண்டாம் பயன் இத் தீமைகளேயோ? இத் தீமைகளின் பொருட்டோ இவை யுண்டாக்கப் பட்டன? இவை யாரால்

உண்டாக்கப்பட்டிருப்பினும் இவற்றை யுண்டாக்கினோர் அறிவிற் சிறந்த ஆன்றோரென்பதில் ஐயுறவின்றே? தீமை பயப்பனவாகிய இவற்றை அவ் வான்றோர் நியமித்ததேன்? இவற்றால் உளதாம் பயன் ஒரு சிறிதுமின்றோ? என்பன போன்ற வினாக்களுக்கு விடை தரல் வேண்டுமே.

இவற்றை ஏற்படுத்தினோர் அறிவிற் சிறந்த ஆன்றோ ரென்பதும், ஏனையோர்மாட்டவர் கொண்டிருந்த பெருங்கருணையாலே நன்மை நல்குவனவாய இவற்றைக் கண்டு அருளிச்செய்தன ரென்பதும் மறக்க முடியாத உண்மைகள். ஆனால், பிற்காலத்தார் அவற்றை யனுஷ்டிக்கும் முறையில் பெருந் தவறான கொள்கையைக் கொண்டு விட்டதனாலே நன்மைக்கு மாறாக மேற்கண்ட தீமைகளுளவாயினவெனக் கூறலே ஏற்ற விடையாகும். இனி, அவற்றால் நாம் அடையத் தக்க பயன் யாது என்பதைக் குறித்தும் சிறிது ஆராய்வோம்.

ஒவ்வொரு மதமும் ஈஸ்வரத் தியானத்தையே அதிகமாக வற்புறுத்தினும் அவ்வீஸ்வரத் தியானத்திற்கு மனோ சாந்தி இன்றியமையாததாகும். சிறிது நேரம் தனித்தவோரிடத்திலோ அல்லது ஆலயத்தில் ஈசுவர சன்னிதானத்திலோ அமைதியாயிருந்து தியானஞ் செய்யலாமென்னிலோ, மனம் அவ்வளவு நேரம் அமைதியுற்றிருத்தல் அசாத்தியம். கிரியைகளைச் செய்வதிலேயே மிகவும் பழகியிருக்கும் மனம் கிரியை விட்டு அமைதியோடிருக்க இலேசில் உடன்படாது. ஆதலின், தியான நிலை பொருந்தாது. ஆகவே, மனத்தின் வசப்பட்ட மனிதன் உடனே வெளிப்பட்டு ஓடி விடுவான். ஆகவே, அத்தகைய நிலைமையிலுள்ளோர்க்குப் பகவத் சம்பந்தமான கிரியைகளையே நியமிப்பின் அவற்றைச் செய்து முடிக்கும் வரை ஈசுவர நாமத்தை உச்சரித்துக்கொண்டே யிருக்கப் பழகப் பழகக் காலக்கிரமத்தில் மனவமைதி சிறிது சிறிதாகக் கைகூடி வருவது சாத்தியமாகும். அம்முறையில் காலையில் நீராடினவுடன் திருமண் காப்பிட வேண்டும் என்னும் நியதி யிருத்தலின் அதை யிடுவோன் இட்டு முடியும் வரையிலாவது ஈசுவர நாமத்தை யுச்சரித்துக் கொண்டே யிருப்பான். அதன் பிறகு ஈசுவர ஆராதனை செய்ய ஆரம்பிப்பதற்குள் மனத்தின் பகிர் முக வோட்டம் சிறிது குறைந்து ஆராதனைக் காலத்தில் நொடி நேரமேனும் ஓர் நிலையில் நிற்பது சாத்தியமாகலாம். விபூதி யிடுவோர்க்கும் இதுவே பயனாகும். அன்றியும், சிலர்க்கு வீடுகளில் ஈசுவராராதனை செய்யச் சமயம் வாய்ப்பதில்லை. எனினும், அவர்கள் திருநீறோ திருமண்ணோ தரிக்கத் தவறமாட்டார்கள். அத்தகையோர் அவசரமாகத் திருநீற்றை யள்ளித் தரிக்கும்போதேனும் 'சிவா' என்று சொல்லியே இடுவார்களாகலின், ஈசுவர நாமத்தை யுச்சரித்தற்குப் பெரிய சந்தர்ப்பத்தைத் தருகின்றது. விபூதி பன்முறையும் தரிக்கப்படத் தக்கதாயின் பல முறையும் ஈசுவரனை நினைப்பதற்கு இட முண்டாக்குவதா யிருக்கின்றது. இனி,

நீறும் நாமமும் முறையே சாம்பலாகவும் மண்ணாகவும் இருந்த பின் அவற்றைத் தரிப்போர் தரிக்கும்போதெல்லாம் என்றேனும் ஒரு நாளில் சாம்பலாகவோ மண்ணாகவோ போவது திண்ணம் என்பதை நினைத்துக்கொள்ளுவராயின் அதனாலுண்டாகும் நன்மைகளனந்தம்.

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்த

படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவன்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே"

என்று பட்டினத்தடிகள் கூறியதொப்பத் தமது நிலையை நினைவுறுத்திக்கொண்டே இட்டுக் கொள்வதால் மிக்க பயனுண்டாகு மென்பதில் தடையில்லை. "எவனொருவன் தனது மரணத்தை மறவாமல் இருக்கின்றானோ அவன் எத்தகைய தீத்தொழிலிலும் மனஞ் செலுத்தத் துணிவு கொள்ளான்" என்பது ஆன்றோரின் அனுபவ மொழியாம்.

"இறப்பெனும் மெய்ம்மையை இம்மையாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடுமற்றுண்டோ?"

எனக் கம்பநாடர் கழறியிருத்தலையும் காண்க. அன்றியும், விபூதியைப் பொறுத்தமட்டில் மற்றொரு முக்கியமான இரகசியார்த்த முண்டு.

விபூதி ஆவின் மலத்தை (பசுவின் சாணத்தை)த் தகித்துச் சாம்பராக்குவதாலுண்டாவதாம். 'ஆவின் மலம்' என்பதற்கு மற்றொரு பொருளுண்டு. 'ஆ' என்பதற்குப் பசுக்கள் என்பது பொருளாம். பசுக்கள் என்னும் பதம் இங்கு ஜீவர்களைக் குறித்து நிற்கும். பதி பசு பாசம் என்ற விடத்துக் காண்க. மலம் என்றது அப்பசுக்களி (ஜீவர்களி)டத்துள்ள ஆணவ மலம் கன்ம மலம் மாயாமலம் என்னும் மும்மலங்களாம்.

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி"

என்றபடி, ஆன்மாவினிடத்துச் செம்பிற் களிம்புபோற் சேர்ந்துள்ள இம்மும் மலங்களும் ஒழியப்பெற்றால், அந்த சீவாத்மா, களிம்பு நீங்கினவுடனே செம்பு தங்கமாதல் போல, பரிசுத்தத்தன்மை எய்தி சிவசொரூப ம[illegible]கின்றது. ஆகவே, ஒவ்வொரு சைவனும் தன்னிடத்துள்ள மும்மலங்களையும் நீறாக்குதல் வேண்டும். அவ்வாறு மும்மலங்களையும் நீறாக்கினதற்கோ அல்லது ஆக்குவதற்கோ அடையாளமாகப் பசுவின் மலத்தை நீறாக்கினதாலுண்டான விபூதியை யணிதல் வேண்டும். அங்ஙன மணிந்தவன் என்னிடத்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் நீறாக்கவேண்டு மென்று அதற்கான நெறியில் முயலல்வேண்டும். அவ்வாறு மும்மலங்களையு மழித்தலே எல்லாச் செல்வங்களினும் மேலான செல்வமாம். அதுவே விபூதி. (வி=மேலான, பூதி=செல்வம்.) மேலான செல்வம் என்பதே விபூதி என்னும் பதத்தின் பொருளாம். "பூதியே......செல்வம்" என்னும் நிகண்டையும் காண்க. விபூதியானது இந்த மேலான பொருளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. இவ்வுண்மையை யறியாவிடத்து விபூதியால் யாதொரு பயனுமுண்டாதலில்லை. எனினும், விபூதிதாரணத்தால் சுகாதார சம்பந்தமான நன்மையும் ஒன்றுண்டு. அதனையுங் காண்பாம்.

ஆதித்தனாட்சி யதிகரித்துள்ள நமது நாட்டில் சைவ மதமோ விஷ்ணு மதமோ இந்து மதத்தைச் சேர்ந்த வேறெந்த மதமோ தேக சுத்தத்தையும் தன்னுள் ஒரு பகுதியாகக் கொண்டிருத்தல் அனைவரும் அறிந்ததோருண்மையாகும். ஆலயத்திற்குச் செல்லல்வேண்டும்; விரத மனுஷ்டித்தல்வேண்டும். முதல் வேலை நீராட்டம். உடற் சுத்தம். பிற மதங்கள் இவற்றைக் கட்டாயமாகக் கொள்ளுதலில்லை; "நீராடாமல் கோயிலுக்குப் போனாலென்ன?"

என்று கேட்டுவிட்டுச் சும்மா இருந்துவிடும். "புறத்தூய்மை செய்யான் அகத்தூய்மை செய்யவல்லவனாத லெவ்வாறு?" என்பது இந்து மதத்தின் ஆரம்பக் கேள்வி. நிற்க,

நித்திய நீராட்டத்தை நிர்ப்பந்தமாகக் கூறும் இந்து மதம் அவ்வளவோடமையாது சூரியோதயத்திற்கு முன்பே நீராடவேண்டுமென்றும், அதிலும், குளிர்ந்த நீரிலேதான் ஸ்நானம் செய்தல்வேண்டு மென்றும் வற்புறுத்துகின்றது. இம்மட்டோ! கண்ட ஸ்நானம் (தலைக்கு ஜலம் விடாமல் உடலை மாத்திரம் நீரில் நனைத்துக் கழுத்தளவு குளித்தல்) கண்டிக்கப்படுகின்றது. ஆகவே, அவ்வாறு வைகறையில் குளிர்ந்த நீரில் தலை நனைத்து ஸ்நானம் செய்தலத்தியாவசியமாகின்றது. அவ்வாறு செய்யுங்கால் ஒருகால் ஜலத்தின் வேறுபாடுகளால் ஜல தோஷம் உண்டாகாமல் தடுப்பபற்குத் திருநீறு வெகுதூரம் பயன்படுவதாகின்றது. நீராடிவிட்டுக் கரையேறிய வுடனே நீற்றை நெற்றி நிறையப் பூசுவதாலும் மார்பிலும் கழுத்திலும் பூசிக்கொள்வதாலும் சீதள சம்பந்தமான வியாதிகளாகிய தலைவலி ஜுரம் முதலியவை யுண்டாகா. திருநீற்றினிடத்தே நீரினை இழுக்குந்தன்மை யிருக்கின்றதென்பது கண்கூடாக அனைவரும் அறிந்த விஷயமாம். இது விபூதியாலுண்டாகும் சரீரசுக சம்பந்தமான பெரிய நன்மையாகுமல்லவா? தலைவலி உண்டாகுங் காலத்துத் தலைவலி மருந்து நெற்றியில் எவ்விடத்தே பூசப்படுகின்றதோ அவ்விடத்தேதான் திருநீறும் தரிக்கப்படுகின்றதை யூன்றிக் கவனிக்கின் இவ்வுண்மை இனிது விளங்குவதாகும். இனி,

திருமண்ணினாலுண்டாம் பயனையுமாராய்வோம். திருமண் வெறும் மண்ணேயன்றி வேறன்று. மண்ணிற்குச் சில வியாதிகளைப் போக்கும் குணமுண்டு. வயிற்றுநோய்க்கு வயிற்றிலும் தலை நோய்க்குத் தலையிலும் களிமண் வைத்துக் கட்டினால் குணமுண்டாம். கைகால்கள் முறிந்துபோனால் செம்மண் வைத்துக் கட்டுகின்றார்கள். கிராமவாசிகளிற் பலர் எண்ணெய் தேய்த்துக் கொண்டபின் களிமண் கொண்டு தலை கசக்குவதை இன்னுங் காணலாம். அதனால் கண்ணிற்கு மிகுந்த குளிர்ச்சியுண்டாகி எரிச்சல் நீங்கும். உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தி யடிகள் இம்மண் மருத்துவ முறையைப் பல படித்தாக விரித்துரைத்திருக்கின்றதோடு தாமும் பலமுறைகளிற் கையாண்டும் வருகின்றனர். சமீபத்தில் இருபத்தொரு நாள் உண்ணாவிரத முடிவில், அதாவது மேமதி இருபத்தொன்பதாந் தேதி உபவாச பூர்த்தி காலத்தில், தலையில் மண்ணைப் பற்றிட்டுக் கொண்டிருந்ததாகப் பத்திரிகைகளின் வாயிலாகப் பார்த்தோமன்றோ! ஆகவே, அத்தகைய மண்ணை நெற்றியில் நாடோறுமிடுவதால் பயன் பல வுண்டாமென்பது பகராமலே விளங்கும்.

நரம்புகளிலிருக்கும் தூர்நீரை யீர்க்குந் தன்மை நாமத்திற்குண்டு. ஓர் வகை வியாதியால் கண்கள் சிவந்துவிடுமாயின் நாமத்தைக் குழைத்துக் கண்ணைச் சுற்றிலும் தடவுகின்றார்கள். ஆகவே, கண்ணோடு சம்பந்தப்படுமாறு நாமமிடுவது நேத்திரரோக நிவாரணத்திற் கேதுவாகின்றது. அன்றியும் நாமமிடும் ஸ்தானத்தில் இடைகலை பிங்கலை என்னும் இரு நாடிகளிருக்கின்றன. மேலே நாமமிடுவதால் அந்நாடிகள் சுத்தப்படுகின்றன. அதனால் சத்துவ குணமிருக்கின்றது. புத்தியின் ஸ்தானம் நெற்றி என்பது கண்டறியத்தக்க

நாம். ஆகவே காமமின்றேல் சரீர சுகத்திற்கும் ஆன்ம லாபத்திற்கும் உதவா தென்றது.

இனி, ஞானிகளாயினும் யோகிகளாயினும் ஈஸ்வரத் தியானம் செய்வதற்காகத் தங்கள் மனத்தை ஏகாக்ரப்படுத்துதற்குரிய ஸ்தானம் புருவ மத்திய ஸ்தானமேயாகும்.

“ஓம் என்கிற பெயரையுடைய பராபரமான இந்தத் தேவன் எவனோ அவன் சப்தமற்றவனும் ரூபமற்றவனு மிருக்கிறான். அவனை மூர்த்த ஸ்தானத்தில் (இதயம் அல்லது புருவத்தின் மத்தியில்) தியானிக்க வேண்டியது” என்று சுருதி சொல்லியது (மைத்திராயண்ணி யுபநிஷத்.)

இடைகலை பிங்கலைகளுக் கிடையேயுள்ள சுஷும்னையின் ஸ்தானமிதுதான். இதுதான் உபய காவேரிக் கிடையேயுள்ள திருவரங்கமென்னும் திவ்ய தலமாகும். ஸ்ரீரங்கநாதன் சயனித்திருக்குந் தானம் இதுவே யாம். பரஞ்சோதி சுவரூபபரமாத்மாவை தரிசிக்கு மிடமிதுவே. திருச்சுண்ணம் அல்லது ஸ்ரீசூர்ணம் இதனையேகுறிப்பதாகும். திருச்சுண்ணம் விளக்கொளி போல் அடிபருத்தும் நுனி சிறுத்து மிருக்குமாறு இடப் படுவதுங் காண்க. சிவபெருமான் இந்தஸ்தானத்தில்தான் அக்கினிக் கண்ணுடையவராகக் குறிக்கப்படுகிறார். அந்நெற்றிக்கண் ஏனைய கண்கள்போல் இன்றி மேல் நோக்கியே யிருப்பதாகும். அதுவே ஞானநேத்திரம். அக்கினி யெனப்படுவது ஞானக்கினியை யென்க. அந்த ஞானக்கினியே காமனை யெரித்தது.

“ஒருங்குமனமோ டிளையசிவ யோகசமாதி சுவதிங்கள்
திரம்பவிருந்த காலத்து நெற்றி மிசையில் பரஞ்சோதி.”

எனப் பிரபுலிங்க லீலை கூறுவதுங் காண்க.

ஆகவே, நெற்றியிலிடப்படுங் குறிகளான சந்தனமோ சாந்தோ வேறெதுவாயினும் இவ்வுண்மையையும் தத்துவத்தையுமே காட்டுவதா மென்க.

தலையைக் குளிர்ச்சியாகவும் கால்களைச் சூடாகவும் வைத்துக்கொண் டிருத்தல் வேண்டுமென்பது வைத்திய நூற்கொள்கை. ஞானம் சாந்தாகாரம். ஜோதி சுவரூபம் சிவபெருமான் தலையில் கங்கையையும் சந்திரனையும் அணிந்திருக்கின்றா னென்பதன் பொருளிதுவே, சந்தனம் சாந்தத்தையும் குறிப்பதாகும்.

அன்பர்களே! மேற்காட்டிய தத்துவங்களை யுணர்ந்து இடப்படுமாயின் நெற்றிக்குறிகள் நற்பய னளிப்பனவேயா மென்பதில் ஐயமில்லை. விரிவஞ்சிச் சுருங்கக் கூறினோம். அவற்றை யமைத்தோரின் கருத்து இதுவோ வெனச் சிலர் சந்தேகிக்கலாம். அன்னார் கருத்து யாதாயினு மாகுக. அவற்றின் தத்துவம் மேலேகாட்டியவையும் இவைபோன்ற பிறவுமே யாம்.

இனியேனும் நம்மனோர், நம்முன்னோர் கண்டவற்றை அவை மூடத்தனம் என்றிகழாமலும் பொருளறியாமல் மூடமாய்ப் பயன் படுத்தாமலும் உண்மையறிந்து கடைப்பிடித் தொழுகி நலனுற முயல்வாராக.

வேண்டா மண விபரீதம்

(புதுவை ஆர். எஸ். ராஜலக்ஷ்மி.)

எங்கு நோக்கினும் மெல்லிளந் தென்றல்தான்
இன்ப மாகவந் தெழில்பெற வீசிட
மங்க ளாகர மாக விளங்கிய
மலர்கள் யாவும் மலர்ந்து திகழ்ந்திட
இங்கிதம் பொங்கு சோலையிலேயொரு
இனிய மங்கை யொருதனி யாகவே
இங்கு மங்குமாய் நின்றனள் துன்பமே
எந்தும் வடிவுகொண் டிருக்கின்ற தன்மையாள் (1)

நொந்து போனதன் உள்ளத்தில் ஏதேதோ
நொய்ய காட்சிகள் காண்கிறாள் பேதைப்பெண்
“தந்தை தாய்க்கும் தயவென்ப தில்லையேல்
தரணிமீதெனைச் சார்தலை ஐயையோ!

அந்த நம்பிக்கும் என்றன் உயிர்க்கள்வன்
சோம நாதனை யன்றி ஒருவனை
இந்த ஜன்மத்தில் கைதொடேன் சத்தியம்
மண வாழ்க்கையை நான்வேண்டேன்'' என்றங்கே

கண்ணை மீட்டு வருந்தி இருக்கையில்
எதிரிலேயொரு மனிதனும் தோன்றினன்
கண்ணி யேயவ னுக்குவ யதுமோர்
நாற்பத் தெட்டுக்கு மேலே இருக்கலாம்
கண்ணிற் கண்ட வுடனந்த மங்கையாள்
கலங்கி யேமனம் நடுங்கிவிட்டாள் பாவம்!
வண்ண மனிதன் வந்த விவரத்தை
வாழும அன்னைக்கு வருத்திடச் சென்றனள்.

"அம்மா! பாருங்க அந்த மனிதனை
அந்தோ என்கிட்ட ஆவலாய் வந்திட்டான்!
பொய்ம்மை வார்த்தைகள் என் உண்மை சொல்லம்மா!
பொறுக்க வில்லை என்றன் மன'' தென்றுள்.
"வெம்மை கொண்ட விளங்கிழை பேயகேள்
வீறு கொண்ட தனவந்தர் நல்லவர்
நம்மை வாழ்விக்க வந்தவர் நாணமேன்?
நாடிப் பேசு'' என்றனள் அன்னையே.

என்ற அன்னையின் வார்த்தை கேட்டந்தப்பெண்
ஏங்கிமிக்க மனந்தடு மாறியே
"அன்று நீங்கள் கொடுத்ததோர் வாக்கினை-
அம்ம! மாற்றிடல் ஆகுமோ? பாதகம்!
பொன்று கின்ற கிழட்டுப் பிணத்துக்குப்
போக்கறும் மணம் செய்திடல் நீதியோ?
கொன்று போடுங்கள் சம்மதம்! சந்தோஷம்!
கூறவேனிதைத் தந்தைக்'' கென்றேகினள். (5)

ஏகித் தந்தை யிடத்தினி லேயந்த
ஏழைப் பெண்ணும் முறையிட்டுக் கூறுவாள்!
"சாகும் கிழவனுக்கோ என்றன் தந்தையே
சம்பந்தம் செய்யச் சாதித்தீர் என்னையே
ஆகும் என் எண்ணம் என்னென் றறிவீரோ?
ஆரே செய்வரில் வாகாத காரியம்?
வேகும் வேகும் என் னுள்ளம் தந்தையே
வேண்டாம் வேண்டாமிவ் வீண் செயல் என்றனள்''
வாகு வீங்கிய தந்தையும் கோபித்தே
வாய்க்கு வந்த வசையள்ளி வீசினர். (6)

“போடி என்னெதி ரேநிற்க வேண்டாம்நீ
பொங்கு மென்குடி அழிக்கப் பிறந்தனை!
நாடி யேவரும் செல்வக் கடவுளை
நாசகாலியே நண்ணாமல் ஓட்டினாய்
ஓடு! ஓடென் முகத்தில் விழிக்காதே
உன்னையும் மொரு பெண்ணாகப் பெற்றேனே
பேடிச் சோமனும் நீயுமிப் பூமியில்
பேணி வாழ விடுவேனோ” என்றனன். (7)



சீறு தந்தையின் வார்த்தை சகியாளாய்ச்
சிந்தை நொந்து வருந்தினள் மாமயில்;
“மாறு கொண்ட வாழ்க்கை இனிக்குமா?
மானங் கெட்டு வாழ்ந்திடல் எற்றுக்கு?
வீறு கொண்ட காதல் இழக்கும் நான்
வேண்டிச் சாதலே மேன்மை”யென் றெண்ணினள்
ஏறு மானத்தால் என்னதான் செய்தாளோ
ஈசனே யறிவான் செத்து மாண்டனள். (8)

“ஏன் குமுறுகிறாய்?”

(ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை)

பேதை நெஞ்சே! ஏன் குமுறுகிறாய்? ‘நினைந்து உருகும் அடியாரை நையவைப்ப’தைத் தனது அகத்திற்கு உகந்த திருவிளையாடலாகக் கொள்ளும் இறைவன் விளைவிக்கும் வேதனை மிகுந்த சோதனைகளைக் கண்டு ஏன் கலங்குகிறாய்? உன்னை அடையும் துன்பங்களைக் கண்டு உறுதி தளர்ந்து சோர்வுறுவதேன்? இறைவனது இன்னருட்பெருக்கை உன்னி உன்னி விழிகளினின்றும் இன்பக்கண்ணீரால் நனைக்கப்பட வேண்டிய கன்னங்களிலே, துன்பக் கண்ணீர் இழிவதேன்? உனது பகவத்-பக்தியின் உறுதியைச் சோதிக்கவரும் துன்பங்களைக்கண்டு, நீ கேவலம் ஒரு கோழையைப் போலும் நடுங்குவதேன்? பொய்ந்நட்பினரின் நன்றி யறிவற்ற நயவஞ்சகக் கொடுமைகளை உணர்ந்துகொண்டு விடக்கூடிய வேளை நேர்ந்தபோது, ஏமாந்து ஏங்கிக் கண்ணீர் சொரிந்து கலங்கி நிற்பதேன்? ஆசைப்பேயினால் ஆட்டிவைக்கப்படுவோர் செய்யும் மோசங்களை நினைத்து நினைத்துப் பதைத்து நிற்பதேன்? மாயையினால் மதி மயங்கி உழல்பவர்களின் கொடுவினைகளைக்கண்டு, குமுறி நிற்பதேன்?

ஏ நெஞ்சமே! ‘நீ யார்’ என்பதை மறந்து விட்டாயா? ‘உனது கடமை என்ன’ என்பதை மறந்து விட்டாயா? ‘உனது தலைவன் எவன்’ என்பதை மறந்து விட்டாயா? இன்னருளையே தன்னுருவாகக் கொண்ட இறைவன் ஒருவனுக்கே நீ அடிமைப்பட்டவன் என்பதை என்றும் மறந்து விடாதே! அவ்வருளாளனது கருணைக்கு உரியவனாக உன்னைப் பண்படுத்திக் கொள்ளவே, இவ்வுலகவாழ்வு உனக்கு உதவப்பட்டிருக்கிறது என்பதை எதனாலும் மறந்து விடாதே! பக்தியிலும் திடநம்பிக்கையிலும் தளராதிருக்கும் கடைசிக் கணம் வரையில், உன்னைக் கைவிட்டுவிடாமல் காத்து நிற்கக்கூடிய ஒப்புயர்வற்ற பேராற்றல் உடையவன் உனது தலைவன் என்பதை எந்நிலையிலும் மறந்து விடாதே!

ஏ மனமே! இம்மாய உலகம் முழுவதும் ஓய்வற்ற—நீடித்த—பலவகைப்பட்ட பேர்கள் நடிக்கும் ஒரு பெரும் நாடக மேடையே என்பதை உணர்ந்து கொள். உலகம் யாவையும் படைத்துக் காத்து அழிக்கும் ஓய்விலாத திருவிளையாட்டுடைய ஒருவனே, உன்னை இப்போர்க்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள சேனைத்தலைவன் என்பதைத் தெரிந்துகொள். அத்தனிப்பெருந் தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே நீ இப்போர்க்களத்தை அடைந்திருக்கின்றாய் என்பதை அறிந்துகொள். உனது கடமையை நிறைவேற்றுவதற்கு நீ உரியவனேயன்றி, அதன் பலனில் பற்றுக்கொள்ள நீ உரியவனன்று. உனது தலைவனுக்கு, கேவலம் நீ ஒரு போர்க்

கருவியைப் போன்றவனே! உனக்கு உரிய உண்மை மகிழ்ச்சி, உனது பெருந் தலைவனது திருவருளுக்கு உன்னை உரியவனாக்கிக் கொள்வதொன்றே. இப்போர்க்களத்தில் நீ மேற்கொள்வதற்கு உரிய பெருவீரம், பகவத்—யில் என்றும்—எதனாலும்—எந்நிலையிலும் சிறிதும் தளராத உறுதியாக நிற்பதே. நீ அணிந்து கொள்வதற்குத் தகுந்த சிறந்த கவசம், இறைவனது திருவருளில் கொள்ளும் இடையறாத சீரிய நம்பிக்கையே.

ஏ உள்ளமே! இப்போர்க்களத்தில் ஆரவாரித்து நிற்கும் பகைவர்களைக்கண்டு ஏன் அயர்வடைகிறாய்? ஒருகணம் அயர்ந்து நின்றாலும், பலரும் பார்த்து நகைக்குமாறு உன்னைத் தனக்கு அடிமைப்படுத்திக் கொண்டு தான் விரும்பியவாறெல்லாம் ஆட்டிவைக்கக்கூடிய காமனுக்கு உனது உயர்வு தெரியலாமா? ஒரு கணம் மறந்து நின்றாலும்—பிறர் உன்னைக் கண்டு கைகொட்டிச் சிரிக்குமாறு உன்னைச் சண்டாளனாக்கி-மிருகமாக்கி—உனது நல்வினைப் பயன்களை யெல்லாம் ஒரு கணத்தில் ஒழித்துவிடக்கூடிய கோபனுக்கு உனது சோர்வு தெரியலாமா? ஒரு கணம் சோர்ந்து நின்றாலும், உனது வீரத்தை அழித்து ஆற்றலை ஒழித்து பார்ப்போர் அனைவரும் பரிகசிக்குமாறு உன்னைக் கோழையாக்கி பெரிதும் அவமானப்படுத்திவிடக்கூடிய அச்சனுக்கு உனது உயர்வு தெரியலாமா? ஒரு கணம் கலங்கி நின்றாலும், இறைவனது இணையடிகளில் அணிவதற்கு உரியதாக மார்பில் ஒளிரும் 'நம்பிக்கை' எனும் ஒப்பற்ற அற்புத மாணிக்கத்தைக் கவர்ந்து கொள்ள முயலும் சந்தேகனுக்கு உனது கலக்கம் தெரியலாமா?

அட பேதை நெஞ்சே! உனக்கேன் இத்தகைய கலக்கம்? உனக்கேன் இத்தகைய மயக்கம்? உனது பகைவர்களது செருக்கை அடக்குவதற்கு உரிய துணையாக, கேவலம் உனது சிறு வலிமையை மட்டுமோ நம்பியிருக்கிறாய்? 'இப் பகைவர்களை எதிர்த்து நிற்கப் போதிய சக்தி எனக்கு இல்லையே' என்று ஏன் கலங்குகிறாய்? இக் கொடியவர்களின் கொடுமைகளை எண்ணி ஏன் குமுறுகிறாய்? "தோல்வியுற்ற வாழ்வு வாழ்வதைக் காட்டிலும், போர்க்களத்தில் வீர மரணம் அடைவது மேலாகும். ஆயுள் உள்ளவரையில் நம்முடைய விரோதிகளுடன் தைரியமாகவே போர்புரியவேண்டும். நம்முடைய விரோதி எவனும் வெளியில் இல்லை; நம்முள்ளிருக்கும் ஆசைகளே உண்மையான விரோதிகள். ஆதலால், அவைகளை வெற்றிகொள். வாழ்க்கை என்பது ஒரு இடைவிடாத போராட்டம்; இங்கு இளைப்பாறும் இடத்தை எதிர்பார்க்கக்கூடாது. முன்னே நடந்து செல்- பலஹீனத்திற்கும் மனத் தளர்ச்சிக்கும் இடம் கொடுத்துவிடாதே. கஷ்டம் நன்மையை விளைக்கக்கூடியது; அது ஒரு பெரிய குருவாகும்"—என்று ஒரு பெரியார் அறிவுறுத்தியிருப்பதை உனக்கு எடுத்துக் கூறுகின்றேன். இம் மணிமொழிகளை என்றென்றும் மறந்துவிடாது நடந்துகொள்வதே, மனித வாழ்க்கையின் பயனை எளிதில் எய்துவிப்பதாகும்.

ஏ! மனமே! முதலில் அமுதம்போன்று தோன்றி முடிவில் கொடிய நஞ்சமாக மாறும் இயல்புடைய அற்ப சுகங்களைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகிற நீ, தொடக்கத்தில் விடம்போன்று தோன்றினும் இறுதியில் இன்னமுதமாக மாறும் சோதனைகளைக் கண்டு ஏன் நடுங்குகிறாய்? 'ஒரு கணப்பொழுது இந்திரிய சுகம், ஒரு ஆயுள் முழுவதுங்கூட துக்கத்தை அளிக்கிறது'—என்கிறார் பெரியார். முடிவில் துன்பத்தை விளைவிக்கும் அந்த கணப்பொழுது சுகத்தினால் என்ன பயன்? மெய்யறிவை மயக்கி அல்லற்படுத்தும் அற்ப சுகங்களை அனுபவிக்க அனுபவிக்க உனது ஆசை மேன்மேலும் வளர்ந்துகொண்டே போகுமேயன்றி, அவ்வற்ப சுகங்களை அனுபவிப்பதால் உனக்கு எப்பொழுதேனும் 'திருப்தி' கிடைக்கக்கூடுமா? ஆசைப்பேய்க்கு உன்னை நீ அடிமைப்படுத்திக்கொண்டுவிட்டால், பின்னர் நீ என்றேனும் 'விடுதலை இன்ப'த்தைக் காண முடியுமா? திருப்தியில்லாத - அமைதியற்ற-அற்பசுக வாழ்வைக்காட்டிலும், எப்பொழுதும் இறைவனைத் துதித்து நிற்கச் செய்விக்கும் துக்கங்கள் நிரம்பிய வாழ்வு எவ்வளவோ சிறந்ததல்லவா? ஆசைப்பேய்க்கு உன்னை அடிமைப்படுத்தும் அற்ப சுகங்களைக் காட்டிலும், எப்பொழுதும் ஆண்டவன் ஒருவனையே வேண்டி நிற்கச் செய்விக்கும் துக்கங்கள் எவ்வளவோ சிறந்தனவல்லவா? இவ்விஷயத்தை ஆழ்ந்து கூர்ந்து சிந்தித்து உண்மை தெளிவாயானால், உன்னைப் பீடித்த சோர்வுப் பேயும் அச்சப் பிசாசும் கலக்கப் பூதமும் உன்னை விட்டுவிட்டு ஓடிப்போய்விடும் என்பதை உணர்ந்துகொள்.

இன்னருள் வடிவினனும் இறைவன் எனக்கு அளித்தருளிய இன்னுயிர்த் தோழனுமாகிய நெஞ்சமே! இன்பப்போர்வை போர்த்திக்கொண்டு உன்னை மயக்கவரும் உலக சுகங்கள் யாவும், முடிவில் உன்னைக் கரையேற முடியாத கொடிய துன்பக் குழியிலேயே தள்ளிவிடுவனவாகும் என்பதை உணர்ந்துகொண்டு, என்றும்—எப்பொழுதும்—எந்நிலையிலும் அவற்றின் பொய்த் தோற்றத்தில் மயங்கிவிடாமல் எச்சரிக்கையாகவே இரு. அப்பகைவர்கள் நீ எச்சரிக்கையாக இருப்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால், உன்னை நெருங்கவும் அஞ்சி அகன்றுவிடுவர்.

"நம்மைச்சுற்றிலும் யாவும் இன்பகரமாகவும் சுலபமாகவும் இருக்கும் சமயத்தில் நாம் இறைவனை மறந்துவிடுகிறோம். ஆதலின், 'துக்கம்' என்னும் குருவானவர் நம்முடைய கடமைகளை நமக்குத் தெரியப்படுத்துவது நமது அதிருஷ்டமேயாகும்"—என்றார் சுவாமி பரமானந்தர். ஆதலால், எப்பொழுதும் உன்னை இறைவனைத் துதித்து நிற்கச் செய்விப்பனவாகிய துக்கங்களைக் கண்டு நீ அஞ்சுவது அறியாமையே யன்றோ! அருளே உருவாம் ஆண்டவன் உனது உறுதிநிலையைச் சோதித்தற் பொருட்டு விளைவிக்கின்ற துன்பங்களைக் கண்டு நீ சிறிதும் குமுறாதே! அதற்குப் பதிலாக, அத்துன்பத்தை நோக்கி, "வருக! துன்பமே! வருக! எப்பொழுதும் இறைவனைத் துதித்து நிற்கச் செய்விக்கும் இன்னுயிர்த் தோழனே! வருக!! பலவகைப்பட்ட படிப்பினைகளையும் புகட்டி அறியாமைக் குழியில் விழுந்துவிடாதவாறு அவ்வப்போது என்னை எச்சரித்துவரும் பாசம் மிகுந்த நேசனே! வருக!! நில்லாதவற்றை நிலை யென்று எண்ணி மயங்கும் புல்லறிவைப் போக்கும் பாங்கனே! வருக!! எளியோர்மீது இரக்கங்கொண்டு நடக்கச் செய்யும் அன்பனே! வருக!! தூற்றத்தக்க கோழைமையை நீக்கி, போற்றத் தக்க வீர உணர்ச்சியை எழுப்பும் தூய நண்பனே! வருக!! இகழத் தக்க சினத்தை ஒழித்து, புகழத் தக்க பொறுமையைப் பெறுவிக்கும் புனிதத் துணைவனே! வருக!!"—என்று குதூகலத்துடன் வரவேற்பாயாக! "பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்—!" என்று இறைவனைப் போற்றுவாயாக! "இன்பத்துள் இன்பம் விழையாதான்—துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்"—என்ற பொய்யா மொழி

வின் பொருளைச் சிந்தித்து சிந்தித்து, வாழ்வு வந்தவிடத்து ஆண் மறந்து களிப்பில் ஆழ்ந்து செருக்கிக் கிடப்பதும், தாழ்வு வந்த இறைவனைப் பழித்துக் கவலையில் ஆழ்ந்து குமுறித் திகைப்பதுமின்றி என்றும்—எப்பொழுதும்—எந்நிலையிலும் இறைவனது இணையடிகளை வாது உண்மைப் பேரன்புடன் போற்றி நிற்பாயாக!

ஏ! பேதை மனமே! இறைவனைப் பற்றிய நினைவேயின்றி, தீவினை புரியச் சிறிதும் அஞ்சாத—அன்பின் பசையும் இல்லாத—அறத்தில் பற்றுக் கொள்ளாத அகத்தினர் பலரும் கவலையற்றுக் களித்து வாழ்ந்திருக்கவும், இரவும் பகலும் இறைவனின் நினைவே கொண்டிருந்தும் பலவகைத் துன்பங்களும் பகவத்—பக்தர்களை இடையறாது தொடர்வதை எண்ணி எண்ணி ஏன் குமுறுகிறாய்? மெய்யறிவை மயக்கி—பொய்யின்பப் பொருள்களில் ஆசையைப் பெருக்கி—அன்பையும் அமைதியையும் அகற்றி—இறைவனையும் மறக்கச் செய்துவிடும் அற்ப சுகவாழ்வைக் காட்டிலும் உலக மாயையை உணர்த்தி—உண்மை இன்பத்தைப் பெற்று உய்யும் சீரிய நன்னெறியில் உன்னைச் செலுத்தி—அன்பையும் பொறுமையையும் வளர்த்து—எப்பொழுதும் கருணைக் கடலாகிய இறைவனது அருள் விளையாட்டையும் திருவருளையும் சிந்திக்கச் செய்விக்கும் சோதனைகள் சூழ்ந்த வாழ்வு எவ்வளவோ சிறந்ததல்லவா? அற்ப சுகங்களில் ஆனந்தப்பட்டுக்கொண்டிருப்போர் யாவரும் மேன் மேலும் வினைப் பயன்களை ஆர்வத்தோடு வாரிவாரி மூட்டை கட்டிக்கொள்வோரே ஆவர்; ஆனால், பலவகைத் துக்கங்களையும் அனுபவிக்கும் நீயோ, கர்ம பலன்களை சிறிது சிறிதாக இங்கேயே கழித்துவிடுகிறாய்! பேதை நெஞ்சே! அவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளாமல், வினைச் சுமையைக் கழித்து விடுவதற்காக நீ வருந்துவாயானால், நீ எத்தகைய முழு மூடனாவாய்! உனது உரிமையைப் பறித்து—உனது சக்தியை அழித்து—உன்னைத் தனக்கு உரிய அடிமையாக்கிக்கொள்ள மாயையானவள் உனக்குப் பூட்டிய கர்ம விலங்குகள், பொன் விலங்குகளானால் என்ன? இரும்பு விலங்குகளானால் என்ன? மெய்யுணர்வாகிய இன்ப சுதந்தரத்தை எய்தாவாறு, அவ்விருவகை விலங்குகளும் உன்னைப் பிணிப்பனவே யன்றோ? ஆதலின், அற்ப சுகங்களைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுதலும் துக்கங்களைக் கண்டு பெரிதும் சோர்ந்து குமுறி நிற்பதும், அஞ்ஞான மயக்கமே என்னும் உண்மையை நன்கு உணர்ந்து கொள்ளக் கடவாயாக.

மண்ணுலகில் பிறந்தபொழுதே மற்றவர்களைப் பற்றுவதுபோல் தன்னையும் பற்றவந்த மாயையாம் சடத்தை வெருட்டி ஓட்டிவரும், புளிய மரத்தடியையன்றி வேறு எவ்விடத்தையும் கண்டறியாதவரும், பிறந்தநாள் தொட்டே சீரிய மெய்ஞ்ஞானியாய் சிறந்து விளங்கியவருமான நம்மாழ்வாரே,

"நவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன்கொல்?
தாவி வையம் கொண்ட எந்தாய்! தாமோதரா! என்றென்று
கூவிக் கூவி நெஞ்சு உருகிக் கண்பனி சோர நின்றால்,
'பாவி நீ'—என்று ஒன்று சொல்லாய் பாவியேன் காணவந்தே"

என்று இறைவனை நோக்கிக் கதறி அழுதிருக்கின்றாரன்றோ! வேத முதல்வனது பாதங்களிலன்றி வேறு எதிலும் பற்றுக் கொள்ளாத இதயத்தினராகிய அவ்வாழ்வாரே அவ்வாறு ஆண்டவனை நோக்கி முறையிட நேர்ந்திருக்கும்

போல்
பிராரப்தகைப்பற்றிலிருந்து இன்னும் முற்றிலும் விடுதலை பெறாத உனக்கு, இவ்வுலகில் இறைவனது ஆன்னருள் கிட்டியதற்கு உரிய நற்பணியை உற்சாகத்துடன் செய்து கிடப்பதே உனது கடமையாயிருக்க, 'அப்பணியின் பயன் தாமதவில் கிட்ட வில்லையே' என்னும் ஆத்திரம் எதற்காக?

ஏ! நெஞ்சே! வாழ்க்கையாகிய பாதையிலே, ஆசைக் கள்வர்களால் நேரும் கவலையும் துன்ப விலங்குகளால் விளையும் அச்சமும் சிறிதளவும் கொள்ளாது இறைவனது திருவருளில் இடையறாத இறுதியான நம்பிக்கையுடனும் அவனது வைபவங்களைச் சிந்தித்து சிந்தித்து மகிழ்வதால் விளையும் உற்சாகத்துடனும் நடந்து செல்வதே உனது கடமையாகும் என்பதை என்றும் மறந்துவிடாதே! அவ்வாறு நடந்து செல்லும்போது, நீ தூக்கிச் செல்ல வேண்டியிருக்கும் வினை மூட்டையின் சுமை, உனக்கு சகித்தற்கரிய கொடிய வேதனையாகத் தோன்றலாம்; ஆனால், நீ சுமந்தே தீரவேண்டிய அச் சுமையை, உன் மீது இரக்கங்கொண்டு அகற்றி விடுவது இனனும் அருமையல்லவா?

அட! மட மனமே!' அருட்பெருஞ்சோதித் தனிபெருங் கருணையாளனாகிய ஆண்டவன், தன்னையே தஞ்சமாக நம்பிநிற்கும் மெய்யன்பரிடம் சிறி

தும் அநுதாபம் காட்டாமல் மிகவும் கொடுமைபாக வாட்டும் கடுமனம் படைத்தவன்' என்று கருதுகின்றாயா? இரவும் பகலும் தன்னையே நினைந்து நினைந்து உருகி, 'என்றேனும் ஒரு நாள் தன்னை அடைந்து விடலாம்' என்னும் உறுதியான நன்னம்பிக்கையினால் ஊசலாடிக்கொண்டிருந்த உயிரை உடலை விட்

லுப் பிரித்து விடாதவாறு தடுத்து நிறுத்திக்கொண் டிருந்தவளே தருமபத்தினி என்பதை நன்கு உணர்ந்திருந்தும், இராம பிரா[ன்] சீ[தையை] எரியில் மூழ்கிவருமாறு கூறியது, அன்பரிடம் அருளில்லாத [தன்மையை]ப் பான்மையினாலேயே என்று கருதுகின்றாயா? கண்ணன் கழலி[ணைக்குப்] பேரன்பு பூண்ட பாஞ்சாலி, விராட நகரத்தில் உபகீசகர்களால் பழி[க்கப்பட்டு] பழி வாங்கும் நோக்கத்துடன் கீசகனது சவத்தோடு சேர்த்து எரித்து[விடுவ]தற்காக சுடுகாட்டுக்கு வலிந்து பற்றி இழுத்துக்கொண்டு போகப்படுமளவும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது, கண்ணபிரானது கருணையற்ற கடு மனப்பான்மையைக் காட்டுவதாகும் என்று கருதுகின்றாயா? ஏ பேதை நெஞ்சே! சிறிது சிந்தித்துப் பார்! சகித்தற்கரிய கொடிய மொழிகளைக் கூறினாலும், சாந்தத்தின் அவதாரமாகிய சீதை என்னை வெறுத்துச் சினந்து கொள்வாளா என்பதைச் சோதிப்பதற்காகவும், பழி சொல்ல அஞ்சாத உலகினர், தனது உத்தம பத்தினியையும் பழிக்கத் துணிந்துவிடுவரோ எனும் அச்சத்தினாலுமே யன்றோ இராமன் தனது காதலியின் பொறுமையைச் சோதிக்க மனங் கொண்டார்! சகித்தற்கரிய கொடிய சோதனைக்கு உட்பட நேர்ந்தாலும், தன்மீது சீற்றங்கொண்டு தூற்றாதிருக்கக்கூடிய மன உறுதி பெற்றிருக்கின்றாளா என்பதைச் சோதிக்கவே யன்றோ பாஞ்சாலி மயானத்திற்கு இழுத்துச் செல்லும்வரையில் கண்ணபிரான் அவளுக்கு எவ்வித உதவியும் கிடைக்காதவாறு செய்விக்கவும் திருவுள்ளம் கொண்டார்! இறுதியில், எரியில் மூழ்கிய சீதை இறந்தொழிந்தாளோ? ஏ! மட நெஞ்சே! அத்தகைய கொடிய சோதனைகளுக்கு உட்பட நேர்ந்தபோதும், மன உறுதியில் சிறிதும் குன்றாதிருந்த—பகவத் பக்தியில் சிறிதும் தளராதிருந்த வீரப் பெண் தெய்வங்களின் வரலாறுகளை உணர்ந்திருந்தும், உன்னைச் சூழும் சோதனைகளைக் கண்டு என் குமுறுகிறாய்?

ஆருயிர்க் காதலர் ஐவரும் அடிமைகளாகி உதவி செய்வதற்கு இயலாமல் தலை குனிந்து நின்ற காலத்திலே—அரசனுக்கு அஞ்சிய அவையோர் அக்கிரமச் செயலைத் தடுப்பதற்குப் போதிய துணிவின்றி வாளா இருந்த வேளையிலே—தன்னாலும் தனது மானத்தைக் காத்துக்கொள்ள இயலாமற்போன கணத்திலே—தனது மானத்தைக் காத்தருளுமாறு இருகரங்களையும் சிரத்தின்மேல் கூப்பித் துதித்து நின்ற பாஞ்சாலியை, கண்ணபிரான் கைவிட்டுவிட்டானோ? எந்த தருணத்தில், தன் மெய்யன்பரைக் காக்கவேண்டும் என்பதை இறைவனே அறிவான். ஆதலால், "நெஞ்சே! உனது உறுதி நிலை குன்றாதிருக்கும் வரையில்—உனது சீரிய நன்னம்பிக்கை தளராதிருக்கும் வரையில்—உனது பகவத்-பக்தி சலியாதிருக்கும் வரையில்—'ஆண்டவன் உன்னைக் கைவிட்டு விடுவான்' என்னும் அச்சம் உனக்கு வேண்டுவதில்லை.

இனிய பாலூட்டி மடியில் வைத்துச் சீராட்டித் தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டித் தூங்கச் செய்ய முயன்றாலும் அழுகையை நிறுத்தாத குழந்தையிடம் அஞ்சினம் கொண்டு அன்னை அகன்றுபோய்விட்டாலும், அவ்வன்னையை யன்றி அக்குழந்தைக்கு வேறு கதி எது? ஊழ்வினைப் பயனால், ஏனையோர் எள்ளி நகையாடுமாறு தன் கணவன் தன்னைப் பெரிதும் வருத்தி நிற்கச் செய்தாலும், அக்கணவனையன்றி அக்குல மகளுக்கு வேறு புகல் எது? எவராலும் தடுக்கப்படமுடியாத தனது அதிகாரத்தைக் கொண்டு வேந்தன் தனது குடிகளை பலதிறப்பட்ட வரிகள் முதலியவற்றால் வாட்டினாலும், தாய்

இலாத எளிய குடிகளுக்கு தங்கள் அரசனது அவையையன்றி வேறு தனது கருவிற்கக்கூடிய இடம் எது? கொடிய புண்ணை வாளால் அறுத்து தீயப்பால் சுட்டாலும், மரணத்தினின்றும் தப்பித்துக் கொள்ளப் பெரிதும் விரும்பும் பிணியாளன், மருத்துவனை வெறுத்து இகழ்ந்துபேசத் துணிவானோ? கருங்கடலில் சென்று கொண்டிருக்கும் கப்பலின் உச்சியிலிருக்கும் பறவைக்கு, அவ்வுச்சியையன்றி ஆறுதல் அளிக்கக்கூடிய இடம் வேறு எது?

திரௌபதைக்குக் கண்ணன் அருள்புரிதல்.

தெண்ணீர்க் குளத்தில் சிறந்து விளங்கும் செந்தாமரை மலர், செங்கதிரோன் வெப்பத்தால் அலர்வதல்லால் செந்தழலின் வெப்பத்தால் அலர்வது உண்டோ? மழையின்மையால் வாடி வதங்கிய பசும் பயிர்கள், கருமுகில்களின் கருணைக்கு இலக்கான பின்னரே யன்றோ தான்சாய்ந்த தலை வணங்கி ஆனந்தமாக ஆடிக்கொண்டிருக்கின்றன! ஏ! நெஞ்சே! அவ்வண்ணம் தாயையன்றி வேறு புகலறியாச் சேயைப் போன்றும், கணவனை யல்லால் பிறிதொரு துணையறியாத குலமகளைப் போன்றும், கொற்றவனது கோல்நோக்கி வாழும் குடிகளைப் போன்றும், மருத்துவனை வெறுக்காது விரும்பும் பிணியாளனைப் போன்றும், கப்பலுச்சியையே கதியாகக் கொள்ளும் பறவையைப்போன்றும், செங்கதிரோனையே சிரித்து வரவேற்கும் செங்கமல மலரைப்போன்றும், கருமுகில்களையே காதலோடு நோக்கி நிற்கும் பயிர்களைப்போன்றும் என்றும்—எப்பொழுதும்—எந்நிலையிலும் அருளாளனாகிய ஆண்டவன் ஒருவனது திருவருளையே எதிர்பார்த்து நிற்பாயாக.

ஏ! மனமே! உனக்கு இவ்வுடலிலே எத்தகைய சுதந்திரமு[illegible] என்பதை உணர்ந்து கொள்வாயாக. நீயும் உயிராகிய நானும் [illegible]வுடல், இறைவன் மகிழ்ந்து உறையும் திருக்கோயில் என்பதை ம[illegible] விடாதே! நாம் இருவரும் ஆண்டவன் ஒருவனுக்கே அடிமைப்பட்டவர்களாவோம் என்பதை மறந்து விடாதே!! ஆதலின், நீ இன்னருள் வடிவினனாகிய இறைவனை நோக்கி, "ஆண்டவனே! நீ ஊட்டுகின்றாய்; சிறியேன் உண்கின்றேன். நீ உறங்கச் செய்கின்றாய்; பேதையேன் உறங்குகின்றேன். நீ காட்டுகின்றாய்; அடியேன் காண்கின்றேன். நீ இன்பூட்டுகின்றாய்; வினையேன் இன்புறுகின்றேன். நீ வாட்டுகின்றாய்; கொடியேன் வாடுகின்றேன். நீ ஆட்டுகின்றாய்; தமியேன் ஆடுகின்றேன். என் செயலாவது யாதொன்றுமில்லை; அனைத்தும் நின் திருவருட் செயல்களேயாம் என்பதை உணர்ந்து கொண்டேன். இறைவனே! உனக்கே அர்ப்பிக்கப்பட்டுவிட்ட உனது உடைமையாகிய இவ்வுடலை—நீ மகிழ்ந்து உறையும் ஆலயமாகிய இவ்வுடலை—உன்னால் கருணைகூர்ந்து உதவப்பெற்ற இவ்வுடலை—உனது திருவருளைப் பெறுவதற்கே பயன்படுத்திக்கொள்ளும் நல்லறிவை, அடியேற்கு அளித்தருள்வாயாக; உன் உடைமைகளாகிய இவ்வுடலையும் உள்ளமாகிய என்னையும் உயிரையும் நீ விரும்பியவாறெல்லாம் துன்புறுத்தவோ இன்புறுத்தவோ உனக்கே பூரண சுதந்திரம் இருக்கும்போது, 'என்னைப்பற்றிய கவலை எனக்கேன்'? என்று நான் உனக்கே உரிய அடிமை என்பதை உணர்ந்துகொண்டு விட்டேனோ, அன்று தொட்டு இன்றளவும் ஒருநாளும் உன்னை மறந்தறியேன். எனது அபசாரங்களைக்கண்டு வெறுத்து, நீ என்னை மறந்து விடுவாயோ? அருட்பெருங் கடலாகிய நீயே சிறியேனை மறந்து விடுவாயானால், ஏழையேன் என்ன செய்வேன்? வேறு எவரைத் தஞ்சமாக அடைவேன்? எவரை நோக்கி இருவிழிகளிலும் நீர்பெருகி வழியக் குழைந்து நின்று அடியேனை மன்னித்தருளுமாறு மன்றாடி நிற்பேன்? பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிவுடைய பரமனே! ஒருகால் அடியேனை நீ மறந்துவிடினும், நின் திருவருள் என்னை மறந்து விடாது என்னும் உறுதியான பெருநம்பிக்கையினாலேயே இன்னும் இவ்வுடலில் தரித்திருக்கின்றேன். உனது அடிமையாகிய எனக்கு நீ விளைவிக்கும் சோதனைகளைக்கண்டு, நான் ஏன் குமுறி நிற்கவேண்டும்? உனது திருவடிகளில் என்றும் அன்பு குன்றாத என்னை, உனது திருவருள் ஒருபோதும் கைவிட்டு விடாது என்று உறுதியான பெரிய நம்பிக்கை எனக்கு இருக்கும்போது, என்னைச் சூழும் துக்கங்களைக் கண்டு நான் ஏன் குமுறி நிற்கவேண்டும்? ஒப்புயர்வற்ற தனிப்பெருந்துணைவனான உனது துணை இருக்கும்போது, அடியேன் எதற்காக அஞ்சவேண்டும்!" என்று விண்ணப்பம் செய்து நிற்பாயாக.

ஏ! மனமே! உன்னைக் கள் குடித்துப் பித்து பிடித்துக் கண்ட விடமெல்லாம் ஓடி ஆடி அலையும் ஈனக் குரங்கோடு ஒப்பிட்டுப் பலரும் தூற்றுகின்றனர். உனக்கு மானமில்லையா? நீ ஏன் அவ்விழிமொழிக்கு ஆளாகவேண்டும்? இறைவனது திருவருளாகிய இன்னமுதத்தையே பருக விரும்பும் சிறிய அன்னமாகச் சிறந்து விளங்குவதில் உனக்கு ஆசையில்லையா? நீ ஆண்டவனது திருவருளுக்கு உரிமை பூண்ட உண்மை அன்பனாகச் சிறந்து விளங்க வேண்டாமா? உன்னைத் தனது இன்னருளுக்கு உரியவனாகுமாறு செவ்விதிற் பண்படுத்துவதற்காக, இறைவன் தோற்றுவிக்கும் சோதனைகளைக் கண்டு நீ ஏன் குமுறு[illegible]து இணையடிகளை இறுகப்பற்றிக்கொண்டிருக்கும் வரையில் [illegible] போலத் தளர[illegible] வேண்டும்? நீ வாழும் உடலுக்குள்ளேயே ஒளிந்திருந்து பிராட்டியாருக்[illegible]லத்திற்குப் பெருங்கேடு சூழ முயலும் உனது உட் பகை இலாது எதிர்நுமாறு எச்சரிக்கக் கடவாயாக. கைம்மாறு கருதாத தனிப் தனது கருத்தனாகிய ஆண்டவன், அப்பகைவர்களது மாயவலையில் சிக்[illegible] தாயன்புகொண்டு தடுத்தாட்கொண்டருளி தனது இன்னருளுக்கு இலக்காக்கி அருமன-வாளுக.

பெற்ற கோபம் எனும் புலைப்பயலே! காம வலைப்பயலே!
கொடுமோகக் கடைப்பயலே! குறும்பு மதப் பயலே!
தாப உலோபப் பயலே! மாற்சரியப் பயலே!
தயவுடன் இக்(கு) இசைக்கின்றேன்; தாழ்ந்திருக்காதீர் காண்!
நீபமெலாம் கடந்து இருள்சேர் நிலம் சாரப் போவீர்!
சிறிது பொழுது இருந்தாலும் இன்னம் இங்கே அழிவீர்!
சாபம் உறுமுன்னம் அறிந்து ஓடுமினோ, என்னைத்
தானறியீர்; தனித்தலைவன் தலைப்பிள்ளை நானே!"

அடிமைச் சங்கிலி

———:o:———

முன்னாட்களிலே ஜயபுரத்துக் கோவிந்தஸ்வமி க்ஷேத்திரத்துக் குருக்கள்மார்கள் ஒருபொழுதும் விவாகம் செய்து கொள்வதில்லை. அவர்கள் மகா ஆத்மீக பலம் வாய்ந்தவர்களாயிருந்தார்கள். ஒரு சமயத்திலே அரசன் அவர்களை யிட்டு வரும்படி ஆளனுப்பினான்; ஆனால் அவர்கள் போகாமல் "அரசனை எங்களிடம் வரச்சொல்" என்று அந்த ஆளிடம் சொல்லிவிட்டார்கள். பின்னர் அவர்களுக்கு விவாகமாயிற்று. அதன்மேல் அவர்களை இட்டுவரும்படி ஆளனுப்பவேண்டிய அவசியமே அரசனுக்கு ஏற்படவில்லை. அவர்கள் தாங்களாகவே அரசனிடம் சென்று "மகாராஜரே! நாங்கள் உங்களுக்கு ஆசிகூற வந்திருக்கிறோம். இதோ, க்ஷேத்திரத்திலிருந்து பிரசாதங்கள் கொண்டுவந்திருக்கிறோம், தயவுசெய்து இவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று மற்றும் சில வார்த்தைகளும் கூற ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. ஐயோ பாபம்! என்ன செய்வார்கள்! வீடு கட்ட வேண்டி வந்தது; அன்னப் பிராசனச் சடங்கு நடத்தவேண்டி வந்தது; தங்கள் பெண்களை விவாகம் செய்து கொடுக்க வேண்டி வந்தது. இவற்றிற்கெல்லாம் பணம் வேண்டுமே; என்ன செய்வார்கள்! இக்காரணங்களாலேயே அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

மாதர் உலகம்

பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

"வார்த்தை என் வந்தனை" எனப் பிராட்டியார் புகன்ற வேக வசனத்தின் குறிப்பு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. ஒன்று கருதி வந்த அநுமான் மற்றொன்று செய்ததைப் பிராட்டியார் விரும்பவில்லை. அவ்வாறு செய்வது அறிவுடையோர் செய்கையுமன்று. அநுமான் பேரறிவுடையராயினும் இனத்தியற்கையாகிய குணம் தலைகாட்டாதொழியக் கூடியதன்றென்பதை ஏற்கவே வேண்டும். அன்றியும் நைட்டிக பிரமசரியத்தை அநுஷ்டித்தவர்களின் வீர உணர்ச்சியையும், அமானுஷ்யமான தீரத்தினையும் கட்டுக் கடங்கியதாக அணை கோலுவது முடியாத காரியமென்பதையும் இயற்கை நியதியை உணர்ந்தோர் மறப்பதற்கில்லை. முதலில் தான் நாடி வந்த தேவியாரைக் கண்டு பேசியும் கையுறை பெற்றும் திருப்தியடையாமல் தான் கொண்ட சந்தோஷத்தினால் பிராட்டியாரையே கொண்டுசெல்ல எண்ணினார். அதனைப் பிராட்டியார் தடுக்கவே வேறு வழியில்லாமல் தனது வீரச்செய்கையைக் காட்டியாவது ஆறுதல் பெற்ற பின்பே செல்ல விழைந்தார். இராமன் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு கற்பமாகக் கருதிக் கவலையுடன் தனது வருகையை எதிர்பார்த்திருப்பதை இவர் அறிந்தவரே. எனினும் அதை யெண்ணி விரைந்து அவர்பால் ஏகுதல் தனது தலைக் கடமையென்று கொள்ளாமல் சண்டு வலியப்போர் விளைவித்துக் காலதாமதம் செய்வதை ஏற்றதாக எண்ணினார். மேலே குறித்த விலங்கினத்தியற்கையும் பிரமசரிய வுணர்ச்சியும் இவ்வுதாரணங்களினால் விளக்கமுறுகின்றன. அநுமான் முதன்மையாகத் தனது கோபத்தைத் தணித்துக்கொள்வதையும் தோள்வலியைக் காட்டி அரக்கரை அச்சுறுவிப்பதையும் நோக்கமாகக்கொண்டு பொழில் இறுக்கத் துணிந்தாராயினும் அதனால் நேர்ந்த ஆபத்துகள் எவ்வளவு? அநுமான் பிணிப்புண்டான் எனவும் வாலில் அனல் மூட்டப்பெற்றான் எனவும், கேட்க நேர்ந்தபோது பிராட்டியார் அடைந்த துயரம் எவ்வளவு? "அழிகாட்டி என் ஆருயிர் காட்டிய நீ உன்வரைப் புயப்பாழிகாட்டி அரும்பழி காட்டினாய்" என்றும்

"கண்டுபோயினை நீநெறி காட்டிட
மண்டுபோரின் அரக்கரை மாய்த்தெனைக்
கொண்டு மன்னவன் போமெனுங் கொள்கையைத்
தண்டினாயெனக் காருயிர் தந்த நீ"

என்றும், துன்புற்றுத் தன்னுயிர் தேயக் கன்று பிடியுறத் தீக்குறு, தாயைப்

போலத் தளர்ந்தும் அயர்ந்தனள் என்றும் கவி வேந்தர் கட்டுரைத்துள்ளார். பிராட்டியாருக்கு அநுமான் வரவினால் பெருகி வளர்ந்த மகிழ்ச்சி உடனே இவரது எதிர்பாராத செய்கையினால் மாய்ந்து இத்தகைய விபரீதத்தினை தனது கருத்தையு மீறித் தேடிக்கொண்ட அநுமான் மீது பிராட்டியார் தாயன்புகொண்டு தளர்ந்தாராயினும் சினங்கொள்ளாமலிருக்க முடியுமோ? அநுமனது செயல் காலம் இடம் கருதாது விளையாற்றும் சிறு பிள்ளைகளின் இயற்கையை ஒத்திருப்பதாகப் பிராட்டியார் கருதினர் என்பதைக் கன்று பிடியுறத் தீக்குறு தாயைப்போலத் தளர்ந்தனர் என்று உவமையாலும் சுட்டினர் கவி. தவிரவும் பிராட்டியார் தனது பெண்மைக்கியல்பாகிய சமயோசிதமான விடையையும் அநுமன்பாலுள்ள அன்பினால் பகர்கின்றார். அசோக வனத்தினை அழித்த மாருதியைக் கண்டு அஞ்சிய அரக்கிமார்கள் பிராட்டியை அணுகி அம்மா, இது என்னே? இது யார்? நீ அறிவாயோ? என்று கேட்டபொழுது பிராட்டியார்

"தீயவர் தீய செய்தல் தீயவர் தெரியின் அல்லால்
தூயவர் துணிதலுண்டோ, நும்முடைச் சூழல் எல்லாம்
ஆயமானெய்த வம்மான் இளையவன் அரக்கர் செய்த
மாயமென் றுரைக்கவேயு மெய்யென மையல் கொண்டேன்"

என ஏதும் அறியாதவர் போலப் பேசியதும், அதை அவ்வரக்கியர்கள் நம்புவதற்காக முன்னால் மாயமானை மெய்ம்மானென்று உரியார் சொல்லியும் கேளாது மயங்கிய தனது அறியாமையை நினைவூட்டியும் உறுதிப் படுத்திய திறம் மதிவல்லோர் எவர்க்கும் வழிகாட்டுவதாகும். உண்மையில் இது பொய்மொழியே. அதனைப் பொய் என்று தள்ளி மெய்ம்மொழி புகன்றிருப்பாராயின் அதன் விளைவு யாதாகும்? இது குறித்தே யன்றோ நமது பொய்யாமொழிப் புலவரும்

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்"

என்றருளிச் செய்தனர். எனினும் ஆண்பாலார் இத்தகைய சந்தர்ப்பங்களில் சிறிது சிந்தித்தே (முடிவு செய்து) புகல முடியும்.

பெண்பாலார் சிந்தியாமலே மிகப் பொருத்தமான முறையில் பிறர் நம்புமாறு புகலுதல் எளிதாகும். இதுபோன்ற சாதுரியங்களில் பெண்கள் ஆடவர்களிலும் திறமை வாய்ந்தவர்கள் என்பது தெளிவு. இவ்வுண்மையையும் கம்பநாடர் பிராட்டியாராகிய பெண்தெய்வத்தின் வாயிலாக வெளியிடத் தவறவில்லை.

கிட்கிந்தா காண்டத்தில் இராமன் சுக்கிரீவனுக்கு முடி புனைவித்து அரசியல் நீதி புகட்டியதாக வரும் செய்யுள்கள் ஒன்றில்

"புகையுடைத் தென்னின் உண்டு பொங்கனல் அங்கென் றுன்னும்
மிகையுடைத் துலகம் நூலோர் வினையமும் வேண்டற்பாற்றே"

எனக் கவி பகசர் இராம வாசகமாக வலியுறுத்திக் காட்டியுள்ளார். எதையும் பட்டவர்த்தனமாகப் புகலுவது அறிவுடைமையன்றென்பதும் அதன் விளைவு தீமையே பயக்குமென்பதும் நூலோர் கூறியபடி சமயோசித வினயமும் வேண்டற்பாற்றே என்பதும் கவி [illegible] உடன்பாடென்பதை உய்த்துணர்தல் வேண்டும். [illegible] மட்டும்

பூர்த்தியான மனிதனாக மாட்டான் வினயமும் கூடி யிருந்தால்தான் பூர்ணத் தன்மையை யடைவான் என்னும் கருத்தினைக்கொண்டே வித்துவான் விநயஸம்பன்னன் என்ற மொழி வழக்கும் நம் நாட்டில் நிலவி வருவது கண் கூடு. ஆதலின் பிராட்டியார் மேற்கொண்ட முறை அறிவுடைமையே யென்று சொல்லல் வேண்டும். இத்தகைய சான்று மேலும் பல இராம காவியத்தில் காணலாம். பிராட்டியை நாடி வந்த மாருதி இராவணன் அவையில் அவனால் யார் என வினவப்பட்டபோது தான் சுக்ரீவனால் அனுப்பப் பட்ட தூதுவன் என்றும், பரதாரத்தை விரும்புவதன் இழிவையும் அதனால் எய்தும் கேட்டையும், அறிவுறுத்தி இராகவன் தேவியை விட்டு இராமனைச் சரண புகுமாறு அவன் தெரிவித்ததாகவும், புகன்றதாக அறிகிறோம். இதுவும் உண்மையல்ல. இவ்வாறு கூறியதனால் விளையக்கூடிய தீங்குமில்லை. ஒருகால் பரதார விருப்பனை வாலியின் வதத்தை யுணர்ந்து பிராட்டியை அரக்கன் விட்டு விடவும் கூடும் என்பதே அநுமான் நோக்கம். ஆதலின் இதுவும் சமயோசித யுக்தியே யாகும். எது யுக்தமோ (உசிதமோ) அதுவே யுக்தி எனப் பொருள் படுகின்றது. இனிப் பிராட்டியார் கால தாமதமும், விபரீத வலையும் விளைவித்து சத்துருக்கள் கைகளிலிருந்து மீட்சி பெற்ற அஞ்சனை குமரனைக் கண்களாற் கண்டு உள்ளமும் உடலும் குளிர்ந்தனர். ஆயினும் அவரது அசந்தர்ப்பமான தலையீட்டைத் தான் கண்டித்த குறிப்பை யுணர்த்தவேண்டி, மைந்தனின் சிறு குறும்புகளைக் கேட்டு மனத்தே மகிழ்ந்தும் புறத்தே அதட்டி உரிமையிற் கண்டிக்கும் மாதாவைப் போலவே நமது அரசியரும்,

"வார்த்தை யேன் வந்தனை"

எனப் பிறர் காணு முன்னம் பெயர்த்திடுதி என வைகின்றார். அநுமானைச் சந்தித்தபோது முதலில் "என் பெரிய பேதமை சின்மதிப் பெண்மையால் உரியதன்றென ஓர்கின்றனன் எனத் தன்னை மிகத் தாழ்வுப் படுத்திக் கூறிய பிராட்டியாரே ஈண்டு இறுதியில் அப் பேதைமைப் போர்வையை களைந்தெறிந்து அறிவுறுத்தும் ஆசானைப்போல் அதிகார முறையில் இன்னும் இங்கு பேச்சென்ன? ஏன் வந்தனை? செல்லுதி என்று இடித்துரைக்கின்றார். இஃதொன்றே பேதைமை என்பது மாதர்க்கணிகலம் என்பதற்குத் தக்க உதாரணமாகும். தவிர இராவணன் சபையில் என்ன நடந்தது, நீ என்ன கூறினாய் அவன் யாது புகன்றான் என்பவைகளைக் கூட அநுமானைக் கண்டக்கால் வினவப் பிராட்டியார் விரும்பவில்லை. இஃது பிராட்டியாரின் கண்ணியமான மனோ திடத்தைக் காட்டுகின்றது. பெண்மையியல்புக்கு அவ்வாறு வினவுவது பொருத்தமான தொன்றே என்றாலும் இராமனால் தான் விடுதலை பெறுவதையே பிராட்டி விழைந்தவர் ஆதலால் அநுமானைப் போன்ற எவர் முயற்சியையும் விரும்பினாரில்லை. தன்னால் விரும்பப் படாத ஒரு துறையில் தலையிட்ட அநுமான் செயலைப் பொருட் படுத்தாதவர் போலவே அலட்சியமாக "வார்த்தை யேன் வந்தனை என்று கடிந்தனர் என்றும் கொள்ளுதல் தகுதி. இது பெண்மையிற்றிகழும் ஆண்மை இயல்பே யாகும்.

இதனை ஆராய்வோர் பெண்பாலாரிடம் பெண்மைக் குணமே நிரம்பியிருக்க வேண்டுமென்று கொள்ளாமல் பெரும்பான்மை பெண்மைத் தன்மையில் ஆண்மைத் தன்மையும் விரவி நிற்றலே சிறப்பெனக் கொள்ளல் வேண்டும். அவ்வாறே பெரும்பாலும் ஆண்மைக் குணமே நிரம்பிய ஆடவனிடமும் சிறுபான்மை பெண்ணீர்மை விரவியே நிற்ப தியற்கை. அவ்வாறு

அமையாமல் முழுப்பெண்ணீர்மை வாய்ந்த பெண்ணும் முழு ஆணீர்மை வாய்ந்த ஆணும் சுவையிலும் இழிந் தொதுக்கத் தக்கவர்களே யாவர். இது பற்றியே ஓதுணர்ந்த நமது மூதாட்டியாரும்,

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் எழிலும் புவிப்பொறையும்—வன்ன[illegible]
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசில் இவை யுடையாள் பெண்"

என அன்னை, அடியாள், பொன், புவி, வேசி ஆகிய ஐந்து பெண்தன்மைகளையும் ஆறுவதாக விறன் மந்திரியாகிய ஒரு ஆண் தன்மையையும் விரவிப் பெற்ற அமைப்பே உத்தமமான பெண் என்பதற்கு இலக்கணமெனக் குறிப்பால் உணர்த்தியுள்ளார். இவ்வாறே ஆண்பால் அரசரைச்சிறப்பிக்க நேருமிடத்தும் மன்னுயிர்க்குத் தாய்போற் கருணையுடையவன் எனப் பெண்ணீர்மையை ஏற்றிப் புகழ்வது மரபு. ஆகவே நம் பிராட்டியார் ஈண்டு காட்டிய ஆண் நீர்மை தோன்றும் சொல்லின் கடுப்பு போற்றற் குரியதே. பெண்களுக் குரிய பெண்மைக் குணங்கட் கெல்லாம் ஓர் இலக்கியமே பிராட்டியாராக உருக்கொண்டவதரித் திருப்பதால் கவியரசர் எல்லாப் பண்புகளையும் தக்க முறையில் இடம் நோக்கிப் பெய்துள்ளார். இனி நமது பிராட்டியாரைத் திருவடி தொழுத படலத்தில்தான் நாம் சந்திக்கின்றோம். அவதாரப் படல முதல் சிறுகவும் பெருகவும் தனித்தனி பரந்து ஒளிர்ந்து மலர்ந்து நின்ற குணங்களை யெல்லாம் ஒன்று திரட்டி அதற்கோர் வடிவங் கொடுத்த பான்மையில் கவி வேந்தர் அநுமன் வாயிலாகச் சில செய்யுள்களை அழகு பெற ஆங்கு அமைத்துள்ளார். அவற்றின் அமைப்பு முறைகளையும், சிறப்பு வகைகளையும், குறிப்பு நுட்பங்களையும் சிற்றறிவுடையேன் ஆராயப் புகுதல் அறிஞர் வரவேற்கத் தக்கதன்றென்பது தெளிவு. எனினும் ஆசை யென்சொல் வழி கேளா என்று ஆன்ற சான்றோர் கூறிய காரணத்தினையே கடைப்பிடித்து ஒருவாறு எனது அறிவாற்றலுக் கேற்ற அளவில் ஈடுபடுகின்றேன். அறிஞர் பொறை கூர்வாராக.

இதன் தொடக்கத்தில் அநுமான் இராகவனுக்குக் குறிப்பு வகையினாலேயே பெரு மகிழ் ஊட்டியதாகக் கவி கூறியுள்ளார். கரை கடந்த துன்பத்தில் திசைகாணு மரக்கலம் போற் றிகைத்து நிற்கும் தனது தகப்பனாகிய இராமனது சோகக்கனலை அணைக்க அநுமான் செய்த குறிப்பு சாலச் சிறந்ததாகும். இதனைக் கவிச் சக்கரவர்த்தியார்,

"எய்தினன் அநுமனும் எய்தி ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகந்தழீஇ நெடிதிறைஞ்சி வாழ்த்தினான்."

என்ற செய்யுளிற் சித்திரித்துள்ளார். இராமன் தனது தூதுவனால் கேட்கக் கூடிய செய்தி எத்தகையதாக விருக்குமோ? என்கிற தீவிரமான எண்ணத்துடன் இருத்தல் இயல்பாதலினால் அவரை நெருங்கிச் சொற்களால் சுபச் செய்தியை உணர்த்துவதற்கும் ஒரு கண முன்னதாக அவர்க்குள்ள கவலையை நீக்கிக் களிப்பூட்ட எண்ணிய அநுமான் தனது மரபுப்படி தலைவனை வணங்காமல் பிராட்டியார் இருந்த தென்றிசை நோக்கித் திருவுருவம் படியிற் றோயுமாறு வீழ்ந்து வணங்கி வாழ்த்தியதாகக் கவி விளக்குகின்றார். இதனைக்

கண்ட தாசரதி, இவன் தேவியைக் கண்டவனே, கற்புக்கும் பழுதின்று, சுகமே யுறைகின்றாள்போலும் எனக் குறிப்பினால் உணர்ந்து உள்ளம் பூரித்தான். பிராட்டியைக் காணும்வரையில் இராமன் திருப்பெயரையே ஓதி ஓதி காத்தமும்பெறிய தூதுவன் திரும்பிவந்த மும்மூர்த்தி சொரூபமுடைய அவ்விராமனைக் கண்டபோது அவர்க்கு வழிபாடியற்றாமல் பிராட்டியார் இருந்த திசை நோக்கி வணங்கினர். இதன் உட் குறிப்பு வெளிப்படையாக மேலே காட்டியபடி சீதையின் க்ஷேமத்தை நெருங்கி அறிந்து கூறுதற்கு முன்னதாகவே உணர்த்தவேண்டு மென்பதுதான். எனினும் ஸ்திரீ புத்தி பிரளயாந்த என்னும் பழமொழிப்படி மாயமானை அறிஞனும் ஆப்தனும் இளவலுமாகிய இலக்குவன் தடுத்தும் கேளாது காதற்குரிய காயகியின் கருத்துக் கிசைந்து தொடர்ந்து சென்று பிரியையின் கண்ணீரைத் துடைப்பதொன்றையே பெரிதெனக் கருதி ஆண்மையின் பெருமைக்குக் குறைவைத் தேடிக்கொண்ட பிழை இராமனைவிட்டு விலகக்கூடியதல்ல. இது இழுக்கென்னும் குறிப்பு வெளிப்படவே.

சடாயு சிறகொடிந்து மரணத்தருவாயிலிருக்கும்போது இராம இலக்குவர்களின் வரவைக் கண்டதும்,

“அஞ்சொல் மயிலை யருந்ததியை நீங்கினிரோ
எஞ்சலிலா வாற்றல் இருவீரும்”

என்று வினவியிருக்கின்றார். மனைவி சிறு பெண், பின்னைமை நீங்காப் பிராயத்தினள் அவள் ஒன்று வேண்டிப் பிணங்கினள். அது தகுதியா? அன்றா? என்பதையும் ஆண் மகன் ஆராய்ந்து முடிவு காண்பது கடனாயிருக்க அக்கடமையிற் றவறியது தலைமகன் தவறே யென்பது குறிப்பு. மூவரும் ஒருவராய மூர்த்தியாகிய இராமன் தவறிழைக்க முடியுமோ என்றும் கடா நிகழலாம். தவறிழைப்பது கடவுட்டன்மைக்குப் பொருந்தாததேயாகும். பிழையிலான் கடவுளன்றிப் பின்னையோர் மாந்தரில்லை என்னும் தொன்மை முடிவிற்கும் முரண்பாடுறும். இதற்குச் சமாதானமாகக் கம்பநாடர் அதே சடாயுவின் கூற்றாக,

“அதிசய மொருவரால் அமைக்கலாகுமோ
துதியுறு பிறவியின் இன்பதுன்பங்கள்
விதிவய மென்பதை மேற்கொளாவிடின்
மதிவலியான் விதிவெல்ல வல்லமோ?”

என்னும் செய்யுளைக் கூறி விதியின் வன்மையால் மதிகெடும் என்பதை ஏற்றல்வேண்டும், இன்றேல் வேறு வழியில்லை என்று அதற்குச் சான்றாகப் பற்பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். முதலிற் கைகேசியின் சூழ்வினையும், பிராட்டியின் பிடிவாதமும் லாகவமும், இராமனின் மன நெகிழ்ச்சியும் தேவர் மாயையும் விதிவலியுமென்றே பின்வரும் நிகழ்ச்சிகளால் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் இதனைத் தருக்க நூலோர் ஏற்காரென்பது வெள்ளிடையே. தக்க குணநலம் நிரம்பிய நல்லோர் பால் நிகழும் பிழைகள் விதிவலியால் போந்தவைகளெனக் கொள்ளுவதாயின், குணநலம் அமையாத் தீயோரும் தத்தம் பிழைகட்கெல்லாம் அதே விதிவலி யென்னும் காரணங்காட்ட முந்துவர். ஆதலின் நீதி முறையில் ஆராயுமிடத்து மனிதராய்ப் பிறந்தவர் எவராயினும் தவறு செய்தல் இயற்கை, தீயோர் பல பல பிழைகள் செய்வரேல் உத்தமர் ஒன்றிரண்டாயினும் செய்வர். இயற்கை நிய

தியை மாற்ற எவர்க்கும் முடியாததாகும். வினையும் குற்றங்களெல்லாம் விதியினால் என்று கொள்வதாயின், நீதி நூல்களே தோன்றியிரா வென்பதை மறப்பதற்கில்லை. அதே சடாயு முன்னர் இராமனை ஆற்று முகத்தால் விதி வலி தென்று கூறியிருப்பினும் இராமன் இராவணன் தேவியை வஞ்சித்துக் கவர்ந்தகினான் என்ற உண்மையைக் கேட்டு ஏழேழு உலகங்களையும் மாய்ப்பேன் என்று கோடங்கொண்ட தறிந்து உடனே,

“வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக்கொண்டீர்
அம்பிழை வரிவிற் செங்கை யையன்மீர் ஆயுங்காலை
உம்பிழை யென்பதல்லால் உலகஞ் செய் பிழையுமுண்டோ?”

ஆதலால் முனிவாயல்லை இவர்தம் என்றும் பிழையை எடுத்துக்காட்டியதாகக் கவி கூறியுள்ளார். இக்குறிப்பினை அநுமான் நோக்கும்போது இராமனை வணங்குவதைவிடப் பிராட்டியை வணங்கியது அறமேயாகும். தவிரப் பிராட்டியார்தான் ஆடவர் புத்திமதியைக் கேளாமல் இத்தகைய விபரீதத்தை விளைவித்துக் கொண்டதற்காகத் தன்னையே தான் நொந்து நொந்து தவமியற்றுகின்றார். தவிரத் தன் மொழி கேட்டதனால் தலைவனுக்கு நேர்ந்த பழிமொழியைத் தானே துடைக்கவேண்டுமென்னும் எண்ணத்தையும் உட்கொண்டு பிறரால் விடுதலையை விரும்பாமல் துன்பக் கனலிற் றோய்ந்து மெலிகின்றார். இராமன் வில்லிற்குப் பழுதுவராமல் தான் காத்துக்கொள்ளும் உறுதியில் நிலைபெறாய் நிற்கின்றார். அன்றியும் அவரது கற்புக்கனலினாலேயே தன்னையனலும் சுடவில்லை. அவர் ஆசி மொழியினாலேயே அரக்கரால் தனக்கு நேர்ந்த இடையூறுகளிலிருந்தும் தான் மீண்டுவந்து இராமன்கழலிணைகளைக் காண்பதும், என்பனவாதி எண்ணங்களினால் விழுங்கப்பட்ட மனமுடையவராயிருந்ததும் திசை நோக்கி வழிபாடியற்றியதற்குக் காரணமாகக் கொள்ளலாம். இவ்வாறு தனது வெற்றியையும் பிராட்டியின் நலத்தையும் குறிப்பாலுணர்த்திய மாருதி இராமனை நோக்கிப் பின்வருமாறு,

“சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மையறிந்து.”

என்றபடி கூறுகின்றார். நற்செய்தியைப் புகல முற்படுவோர் எவரும் அடி முதல் இறுதிவரையில் தொடர்ச்சியாக நிகழ்ந்ததுபோல் கூறமாட்டார். அங்ஙனம் புகல்வோர் அறிவிலிகளே யாவர். ஆகவே இத்தகைய முக்கிய சந்தர்ப்பத்தில் ஆதி கவியாகிய வான்மீகி முனிவரும் “கண்டேன் சீதையை” என்று பொருள்படும் “திருஷ்டுவாது ஸீதா” என்று ஆரம்பித்ததாகத் தெரிகிறது. இதனால் பயனிலையாகிய கண்டேன் என்பதை முதலிலும் ஸீதா என்கிற எழுவாயைப் பின்னும் அமைத்து இராகவன் உள்ளப் புழுக்கத்தை எவ்வளவு விரைவாகப் போக்க முடியுமோ? அவ்வளவு விரைவாகப் போக்க முயன்றிருக்கின்றார். அன்றியும் பிராட்டியாருக்குப் பல நாமங்கள் இருப்பினும் ஸீதா என்னும் நாமமாகிய காரண விடுகுறிப் பெயரினையே முனிவர் உபயோகித்த நுட்பம் தன்னை நல்கிய பூமிதேவியின் பொறுமையைத் தானும் வகித்து சகிப்புத்தன்மையிற் றலைசிறந்து விளங்குகின்றார். தன்னை ஒறுப்பவர்களைக் கற்புக்கனலால் எரிக்க முடியுமாயினும் தண்டிக்கும் கடமை தனக்குரிய தலைவருக்கேயுரியதெனக் கருதிக் கரை கடவாத கடல்போல் மறுகி நிற்கின்றார் என்பதும் குறிப்பால் உணர்த்தியதாகும்.

அநாதை.

(பண்டிதை-ரா. ரங்கநாயகி)

உஷ்ணமான காற்று வீசிக்கொண்டே யிருந்ததால் கொஞ்சநேரம் காவிரிக் கரைப்பக்கம் போய் வரலாமென்று புறப்பட்டேன். வீடுகளில்லாத வெளியிடத்திலிருந்தாலும் சிறிது ஆறுதலா யிருக்கும். நாள் முழுதும் மோட்டார் முதலிய யந்திரங்களின் ஒலிகளைக் கேட்டுக் கேட்டு காதுகள் அடைத்துப்போய்விட்டன. சிறிது நேரமாவது நிம்மதியா யிருக்கலாமென்றெண்ணி ஆற்று மணலில் உட்கார்ந்தேன். ஆனால் அங்கும் என் எண்ணம் ஈடேறவில்லை. வயதானபிறகு எனக்குக் கடவுள்மேல் பக்தி வளர்ந்ததே யொழியக் கடவுளுக்கு என்மீது கொஞ்சமாவது ஈவு இரக்கம் உண்டாகவில்லை. என்ன செய்வேன்? எங்கிருந்தோ தீவிரமான பெருமூச்சு வரும் சப்தம் கேட்டது. ஆனால் மணலில் காலடிச் சப்தம் கேட்கவில்லை. யாரோ வரும் ஜாடை தெரிந்தது. திரும்பிப் பார்த்தேன். ஓர் பெண் தலை முழுவதும் முக்காடிட்டுக்கொண்டு விரைவாகப் போய்க்கொண்டிருந்தாள். அவளுடைய நிழலோ காலன்போல் அவளைப் பின் தொடர்ந்து சென்றது. சப்திக்காதிருக்க நகைகளைக் கழற்றிவிட்டாள் போலிருக்கிறது. சமீபத்தில் இருந்த என்னைப் பார்க்காமலே நதிக்கரைக்குப் போனாள். நதிநீரத்திலிருந்து காற்று ஜில்லென் றடிக்கிறதேயொழிய அவளுடைய மனதிலிருந்து வரும் பெருமூச்சின் உஷ்ணம் தணியவில்லை. கரையிலிருந்து தண்ணீரில் இறங்கினாள். காவிரி தேவி கலகல எனக் கலங்கினாள். அக் கலக்கத்திற்கு இவள் செவி சாய்க்கவில்லை. முக்காட்டை இழுத்து இடுப்பில் கட்டினாள்......... குபீர்........ ....என்றது.

தன்னி விழுந்து கண்களை மூடிக்கொண்டேன். என்ன இவ்வளவு பயங்காளித்தனம்! கடவுள் ஏதோ ஓர் உத்தேசத்தோடுதான் நம்மை இங்கு அனுப்பியிருக்கிறார்-உண்மையாக. விரைவாய் ஓடிப்போய்ப் பிடித்து இழுத்து எடுத்துக்கொண்டேன். கஷ்டப்பட்டு தூக்கிக்கொண்டுவந்து மணலில் படுக்க வைத்தேன். நல்லகாலம் சரியாய் நனைய வில்லை. தண்ணீர் சிறிதும் குடிக்க வில்லை. ஆனால் களைப்பு மாத்திரம் அதிகமாயிருந்தது. சிறிது நேரம் பேசாது உட்கார்ந்திருந்து அப்பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். இளமை ஒளியும், கள்ளம் கபடமற்ற தன்மையும் அக்கண்

களில் ஜொலித்துக்கொண்டிருந்தன. கோபமாவது பொறுமையாவது என்

கும் இருப்பதாகத் தெ[ரிய]வில்லை. அப் பெண் வாயைத் திறந்துகொண்டு பேசாமல் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

'நீ யாரம்மா?—த அநியாயத்திற்கு மனந் துணிந்துவிட்டாயே?

"ஏன் என்னைச் சாகவிடவில்லை? நீங்கள் யார்?"

"குழந்தாய்! நான் மகன். இறப்பது நம் கைகளில் இல்லை. உன்னைக் காப்பாற்றவேகடவுள் என்னை இங்கு அனுப்பினார். பயப்படாதே! என்னோடு வா" என்று அப் பெண்ணைக் கைகொடுத்து எழுப்பினேன். அவள் மறுக்கவில்லை. ஆயினும் சிறிது நேரம் யோசித்தாள்—திரும்பவும் சாவதற்கு ஏதேனும் வழி கிடைக்குமா என்று யோசித்தாள்போலும்!

"குழந்தாய்! சிறு வயதில் இறத்தல் கூடாது. பிராணத்தியாகம் செய்து கொள்பவர்கள் கொடிய நரகத்தை அடைவார்கள்" என்று இதோபதேசம் செய்துகொண்டே எப்படியோ அப் பெண்ணை வீடுகொண்டுபோய்ச் சேர்த்தேன். பதினாறு வயது மடந்தை. மெல்லிய பசும் பொன்மேனி—நாற்றுக்கு ஊசலாடிக்கொண்டிருக்கிறது. கூர்மையாக இருந்த அப் பெண்ணின் மூக்கைப் பார்த்தால் முப்பது வருஷங்களுக்கு முன்பு இறந்துவிட்ட என் மகள் நினைவு வந்தது. "இந்தத் தள்ளாத பருவத்தில் இப்பெண்ணையாவது பார்த்துக்கொண்டே காலங் கழித்துவருவோம்" என்று எண்ணிக்கொண்டேன். குடைந்து குடைந்து கேட்டுக்கொண்டே யிருந்ததனால், பதினைந்து தினங்களுக்கப்பால் தன் கதை முழுவதையும் சாந்தமாகச் சொன்னாள். பெயர் சீதா. தாய்தந்தையர் சிறு வயதிலேயே இறந்துவிட்டதனால் தாய் மாமன் வீட்டில் வளர்ந்து வந்தாள். சென்ற வருஷம் அவளுடைய ஜீவியத்தில் கஷ்டம் தோன்ற ஆரம்பித்தது. ஒருநாள் ஒரு நாடகத்திற்குப் போய்த் திரும்பும்பொழுது இரண்டு போக்கிரிகள் நகைக்காக அவள்மீது விழுந்து தொந்தரவு செய்தபோது பின்புறமிருந்த ஓர் வாலிபன் இப் பெண்ணைக் காப்பாற்றினானும். அதுமுதல் அவ்வாலிபனிடம் சாதாரணமாய்ப் பேச்சுவார்த்தை வைத்துக்கொண்டிருந்தாளாம். அதன்மூலம் அவன்மீது காதல்கொள்ள இடமேற்பட்டதாம். ஆனால் நான்கு தினங்கட்கு முன்புதான் அவனுடைய ரகசியம் வெளிப்பட்டதாம். முன்னமே அவன் கலியாணமானவன், இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பன், மனமுடைந்து சீதா தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்துக்கொண்டாள்!

இக்கதை எல்லாம் சொல்லிவிட்டுப் பொங்கிவரும் துக்கத்தை அடக்கமுடியாமல் "தாத்தா! நீங்கள்தான் எனக்குக் கதி" என்று அழுதுகொண்டே என் கால்களில் வீழ்ந்து வேண்டினாள். நான் கண்ணீர் துடைத்து உட்காரவைத்து "அம்மா! அஞ்சாதே! உனக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்துகிறேன்" என்று வாக்குறுதி தந்தேன்.

நல்ல வரனுக்காகத் தேடி அலைவது மிகுந்த கஷ்டமாகத் தோன்றிற்று. அதுவும் அறுபது வயதுக் கிழம். எங்கே போய் அலைவது? சொல்லுங்கள்! அத

ஞல் 'மணமகள் தேவை' என்று பத்திரிகையில் விளம்பரப்படுத்தினேன். ஐந்தாறு கடிதங்கள் வந்தன. சீதா அவற்றில் ஒன்றைப் பொறுக்கி எனக்குக் காண்பித்தாள். வயது 25. பெயர் நாராயணன். ஓர் ஆபீஸில் 75 ரூ. சம்பளம். நன்றாகவே இருந்தது. ஆதலால் அவனை வரவழைத்தேன். இரண்டுபேரின் சம்மதத்தாலும் விவாகம் நடந்தேறியது. கணவனோடு செல்வதற்கு என் மகள் உற்சாகமாயிருந்தாலும் என் பக்கம் ஓர் அன்புப் பார்வை பார்த்தாள். முதல்நாள் பார்த்த அப் பார்வைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? காவிரிக்கரையில் மணலில் படுத்து, மரணத்திற்குத் தயாராய் இருந்த அவ்விளம்பெண்ணின் கண்களிலிருந்த அந்த அன்புமலர்ச்சி எனக்கு இப்பொழுது தோன்றவில்லை.

அடுத்த வருஷம் வெய்யிற்கால விடுமுறையில் என் மகளும், மருமகனும் என்னைப் பார்த்துப்போகலாமென வந்தார்கள். பெண் ஏழுமாதக் கர்ப்பிணி. ஒருநாள் இருவரும் சினிமாவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் ஓர் இளைஞன் நின்று இப் பெண்ணைக் கூர்ந்து பார்த்தான். அவன் முன்பு இப்பெண்ணை நேசித்தவன்தான். இவள் இன்னும் உயிரோடிருக்கிறாளா என்று ஆச்சரியமடைந்தான்போலும்!—பாப புண்ணியமறியாத இள மங்கையை களங்கமற்ற காதலுக்குப் பதிலாக காமப் படுகுழியில் வீழ்த்த நினைத்த பாவி பயல் அவனே.

என் மகள் வீட்டிற்குத் தனியாக வந்தாள். மருமகன் அதிக நேரம் கழித்து வந்தான். வந்ததிலிருந்து முணமுணத்துக்கொண்டேயிருந்தான். அதிகாலையிலேயே எழுந்து "ஆபீஸிலிருந்து உடனே வரவேண்டும் என்று கடிதம் வந்திருக்கிறது நான் போகிறேன்" என்று புறப்பட்டுவிட்டான்.

மூன்று மாதம் வரை அவன் திரும்ப வரவே இல்லை. என் மகள் ஓர் பெண் மகவைப் பெற்றாள். நான் அதிக ஆனந்தத்தோடு ஓர் கடிதம் மருமகனுக்கு எழுதினேன். அதற்குப் பதில் ஊர் பேர் இல்லாத ஓர் மொட்டைக் கடிதம் ஒன்று கிடைத்தது: அதன் விவரம் வருமாறு:—

"தங்கள் பெண்ணின் பூர்வ கதையை ஏன் எனக்கு முதலிலேயே தெரிவிக்கவில்லை. என்னை அவள் மோசம் செய்தாள்! இனி உமக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இது கடைசிக் கடிதம்," இதைப் படித்து நான் அப்பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். அவளுடைய கண்களில் முந்தின பார்வையே இருந்தது—காவிரிக் கரையில் மரணத்திற்குத் தயாராயிருந்த அந்தப் பார்வையேதான்.

உறுவிலை!

("கலாவதி")

"அஃகஞ் சுருக்கேல்."

உறுவிலையாவது உண்மையில் ஒரு பொருள் பெறுமதி ஆகும் விலையாம். பண்டமாற்று வசதிக்காகப் பொருட்களின் பெறுமதியைப் பணத்தாற் குறிக்கிறோம். இது விலை எனப்படும்.

பண்டமாற்றில் இலாபம் கிடையாது. உழைப்பினால்தான் ஊதியம் பெறலாம். பண்டமாற்றினாற் பெறப்படுவதெல்லாம் மாற்றுபவர்களுக்கு வசதியே. ஒருவன் ஒருபடி நெல்லை விதைத்து விளைவித்து இரண்டுபடி நெல் ஆக்குகிறான். இன்னொருவன் இரும்பை நிலத்திலிருந்து அகழ்ந்தெடுத்துக் காய்ச்சி அடித்து இரு மண் வெட்டிகள் ஆக்குகிறான். இது ஊதியம்.

நெல் விளைவிப்பவனுக்குக் கொத்துவதற்கு மண்வெட்டி வேண்டும். கொல்லனுக்கும் உணவுக்கு நெல்வேண்டும் இருவரும் தம் பண்டங்களை மாற்றிக்கொள்கிறார்கள். இருவருக்கும் இப்பண்டமாற்றினால் எத்தனையோ நயம் உண்டு. ஆனால் ஊதியம் இல்லை. புதிதாக எதுவும் உண்டாக்கப்படவில்லை. முன் ஆக்கப்பட்ட பொருளே இப்போது அதை உபயோகிக்கக் கூடியவரிடம் கொடுக்கப்பட்டது. பண்டமாற்றுச் செய்வதற்கு உழைப்பு வேண்டியிருந்தால் அது உண்மையில் பொருளை ஆக்கும் வேலையில் ஒரு பகுதியாய் எல்லா உழைப்பையும்போல் ஊதியம் தரும். பொருளை ஆக்கும் வேலையிலும் அப்பொருளை இடம்விட்டு இடம் பெயர்க்கும் வேலையிலும் எத்தனைபேர் உழைக்கிறார்களோ அவர்கள் எல்லாம் ஊதியத்திற் பங்கு பெறுவர். ஆனால், பொருளை ஆக்குவதோ அதனை வேறு இடத்திற்குக்கொண்டு போவதோ பண்டமாற்று ஆகாது; பண்டமாற்றில் ஊதியமும் இல்லை.

ஆனால், ஒருவன் தான் சிறிது உழைப்பினாற் பெற்ற பொருளுக்கு மாறாக இன்னொருவன் அதிக உழைப்பினாற் பெற்றதொரு பொருளை வாங்கிக் கொண்டால் அவன் ஊதியம் அடைந்ததாகக் கருதப்படுகிறது. மற்றவன் தன் உழைப்பினாற் பெற்ற பொருளின் ஒரு பகுதிக்கு மட்டுமே மாறு அளித்து விட்டு மிஞ்சிய பகுதிக்கு மாறளிக்காமலே தனதாக்கிக் கொள்ளுதல் அபகரித்தல் ஆகுமேயன்றி ஊதியம் ஆகாது. இவன் எவ்வளவு நியாயமற்ற நயம் அடைகிறானோ அவ்வளவு மற்றவன் இழக்கிறான். ஆனால் சாதாரண வழக்கில் இது 'லாபம்" எனக் கூறப்படுகிறது. எவ்வாறோ யாவரும் இவ்வாறு "லாபம்" அடைவது சாத்தியம் எனக் கருதப்படுகிறது போலும்

ஆனால், துரதிர்ஷ்ட வசமாக இவ்வுலகத்து யாவரும் இவ்வாறு "லாபம்" பெற முடியாது. ஒருபடி நெல்லை இரண்டுபடி கேழ்வரகுக்கு மாற்றும்போதே ஒருபடி நெல் இரண்டு படியாகவும் இரண்டுபடி கேழ்வரகு நாலுபடியாகவும் பெருகுமாயின் இருவரும் லாபம் பெறலாம். ஆனால், பிரபஞ்சத்துப் பொருளாக்க விதியோ இத்தகைய பெருக்கத்துக்குக் கடுகளவும் இடம் கொடுப்பதாயில்லை. ஊதியம் அல்லது பொருட்பேறு பொருளை உண்டாக்குவதால் அல்லது காடுமேடு முதலியவற்றில் தானே விளைந்ததைச் சேகரிப்பதால் மட்டும் கிடைக்கும். பண்டமாற்றில் ஒருவன் இலவசமாகப் பொருட்பேறு எய்தினால் மற்றவன் நட்டமடைவது தப்பாது.

ஆனால், இதில் இலாபங்கள் பகட்டுடையனவாய்ப் பவனி வருவதும் நட்டங்கள் ஒதுங்கி இடுகாட்டில் மறைவதும் இயற்கையானதால் பண்டமாற்றால் யாவரும் ஊதியம் பெறலாம் என்னும் தப்பெண்ணம் பரவிப் பொருளாதார விருத்தியைத் தடை செய்கின்றது.

பண்டமாற்று முறை ஊதியம் பெறக் கற்பிக்கும் வித்தையாகக் கருதுமிடத்து இன்மை காட்டும் வித்தையேயாம். ஆனால் பிறர் பொருளை அபகரிக்கும் வித்தையாகக் கருதின் இது ஏனைய கலைகளுக்கு மாறான வித்தையான சாஸ்திரமாம்.

நான் ஒரு காட்டு மனிதனிடம் ஒரு ஊசியைக் கொடுத்து வைரத்தினத்தைப் பெற்றுக்கொள்ள முடிவது, அவன், நாகரிக உலகில் வைரங்கள் எவ்வளவாக மதிக்கப்படுகின்றன என்பதை அறியாமையால் அல்லது அறிந்தும் இன்னும் விலையுயர்ந்த பொருளுக்கு மாறாக இன்னொருவனுக்கு விற்று நயம் பெறும் ஆற்றல் இல்லாதவனாக இருப்பதனாலேயே. எனக்கு இன்னும் அதிக நயமாக ஒரு காதற்ற ஊசியைக் கொடுத்து வைரத்தைப் பெற்றுக் கொண்டேனாயின், பண்டமாற்றை வியாஜமாக வைத்துக்கொண்டு அபகரித்தல் ஆகிய வித்தையிற் பூரண திறமை சித்தித்ததாகும். ஆயின், எனக்கு இப்பண்டமாற்றினால் ஏற்பட்ட நயம் எல்லாம் மற்றவனது அறியாமை, ஆற்றாமை, அல்லது கவனமின்மை ஆகியவற்றை வைத்தே; இவை இல்லாவழி நயம் பெறுவது அசாத்தியம். ஆகவே பண்டமாற்றில் ஒருவர் மட்டும் நயம் பெறுவது மற்றவர் அறிவின்மை ஆற்றலின்மைகளை வைத்தே. இவை இல்வழி ஒருவர் மட்டும் நயம் பெறுவதும் இல்லை. ஆகவே, இது, அவதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டதோர் தந்திரம்; அவிச்சையை (அறிவின்மையை) ஆதாரமாகக் கொண்டதோர் வித்தை. ஏனைக்கலைகளெல்லாம் அறியாமையை அகற்றும் நோக்கம் உடையனவாக இது மட்டும் அறியாமையை வைத்து வளர்ப்பதே தான் இறவாமல் தழைக்க வழியாக உடையது.

இருபக்கத்தாருக்கும் ஒப்ப நயம் இருப்பதே நியாயமாம். ஒரு பக்கத்தாருக்கு மட்டும் நயமாயின் மறுபக்கத்தில் குறைந்தது நட்டமில்லாமலாவது

இருத்தல் வேண்டும். இடை நின்று பண்டங்களை மாற்றி அளிக்கும் வணிகனுக்கும் அவன் செலவிடும் காலத்துக்கும் புத்திக்கும் ஏற்பக் கூலி அளிக்கவேண்டும். இரு பகுதிக்கும் உளதாம் நயமும் இடைநிற்கும் தரகன் பெறும் கூலியும் சம்பந்தப்பட்ட அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். இதுவே, நியாயமான, தார்மிகமான, தெய்விகமான பண்டமாற்று முறை. மேற்கூறியவற்றில் எதையாவது மறைத்தால்—நியாயமாக நடந்து கொள்ளுமிடத்து மறைக்க வேண்டியதில்லை—அறியாமையை ஆதாரமாக உடைய, அதர்மமான, ஆசுர முறையாம்.

நயமும் இருவகைப்படும், நமக்குத் தேவையைப் பெறுதல் ஒன்று; நம் விரும்புவதைப் பெறுவது மற்றது. உலகில் நாம் வேண்டும் பொருட்களில் முக்காற்பங்கும் விழைவுகளை ஆதாரமாக உடையன. இதனால் பொருட்களை மதிப்பிடுவது மிக்க கஷ்டமாகின்றது.

ஒரு பொருளின் விலையாவது அதைப்பெற விரும்பும் ஒருவன் அதற்கு அளிக்கும் உழைப்பின் அளவாம். இவ்விலையும் மாறுதல் அடையும் நான்கு அளவுகளைப் பொறுத்தது.

(1) குறித்த பொருளைப் பெறுவதில் கொள்வோனுக்கு உள்ள விருப்பத்தின் அளவு இதற்கு எதிராக அப்பொருளை வைத்துக்கொள்வதில் விற்பவனுக்கு உள்ள விருப்பத்தின் அளவு; (8) இப்பொருளை பெறக்கொள்வோன் கொடுக்கக்கூடிய உழைப்பின் அளவு; (4) இதற்கு எதிராக அவை வைத்திருக்க விற்போன் இழக்கக்கூடிய உழைப்பின் அளவு; இவை நான்கும் மிஞ்சிய வழியே தொழிற்படும். மிஞ்சம் அளவாவது இன்னொரு பொருளைப் பெறுவதில் உள்ள விருப்பத்திலும் இப்பொருளைப் பெறும் விழைவு மிகுந்த அளவு இன்னொரு பொருளைப் பெறக் கொடுக்கக்கூடிய உழைப்பின் அளவிலும் இப்பொருளைப் பெறக் கொடுக்கக்கூடிய உழைப்பு மிகுந்த அளவு; பிறவும் இன்ன.

இவை எல்லாவற்றையும் கணித்துப் பொருட்களின் விலையை நிச்சயிப்பது மிகச் சிக்கலானதாகும். விலையெல்லாம் ஈற்றில் உழைப்பினால் அளக்கப்படுதலின் உழைப்பு இன்னது என வரைவிலக்கணம் கூறுதல் அவசியம்.

உழைப்பு ஆவது மனிதன் வாழ்க்கை அதற்கு எதிரான நிலையுடன் போராடுவதேயாம். வாழ்க்கை என்பதில் ஆன்மா, புத்தி, உடல்வலி யாவும் அடங்கும். இவை, சாத்திய சிரமம், கல்வி, கேள்வி, பௌதிக சத்திகள் ஆகியவற்றை தம் வயப்படுத்த வேண்டும். வாழ்க்கையில் அம்சங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கு வாழ்க்கை உயர்வுறும், நல்லுழைப்பு எவ்வகையினதாயினும் உடம்பின் சக்தியை ஒழுங்காகச் செலுத்துவதற்கு வேண்டிய புத்தியும் உணர்ச்சியும் பொருந்தியதாகவே இருக்கும்.

தங்கத்தின் விலையைக் குறித்துப் பேசும்போது குறித்ததொரு மாற்று உடைய தங்கத்தின் விலையே கருதப்படுகிறது. இதுபோல, உழைப்பின் பெருமதியைக் குறித்துப் பேசும்போதும் குறித்த ஒருதரமும் பண்புமுள்ள உழைப்பே கருதப்படுகிறது.

இத்தனை கலப்பு என்றறியாத பொன்னுக்கு விலை கூற முடியாதவாறு விருப்பமின்றி அல்லது அனுபவமின்றி, அல்லது திறமையின்றிச் செய்யும் வேலைக்கும் மதிப்புக்கூற முடியாது.

உழைப்பின் பண்பும் வகையும் தரப்பட்டால் அதற்கு உண்மையான விலை நிதானித்துவிடலாம். ஏனைய மதிப்புள்ள பொருள்களின் உண்மை மதிப்புப்போலவே இதன் உண்மையான மதிப்பும் மாறுபடுவதில்லை. ஆனால் பண்டமாற்றில் வேறு பொருட்களுக்குப் பதிலாகக் கொடுக்க வேண்டிய உழைப்பின் அளவு திரிபு உறும். இத்திரிபைக் கணிக்குமிடத்து ஏனைப் பொருட்களின் விலையை உழைப்பைக்கொண்டு அளப்பதன்றி உழைப்பை ஏனைப் பொருட்களைக்கொண்டு மதிப்பிடுதல் ஆகாது.

கடுவல் நிலத்தில் ஒரு மாங்கன்று நடுவதற்கு 2 மணி நேரம் பிடிக்கும். மிருதுவான மண்ணில் நட ½ மணி நேரம் போதும். இரண்டு இடத்தும் ஒப்ப மண்ணின் தன்மை மரத்திற்கு நல்லதாயின் இரண்டு மணி நேர வேலை செய்து நட்ட மரத்தின் பெறுமதி அரைமணி நேரத்தில் நட்ட மரத்தின் பெறுமதியினும் அதிகமல்ல; ஒன்று மற்றதினும் அதிக பலன் தராது. அரைமணி நேர உழைப்பு இன்னொரு அரைமணி நேர உழைப்பினும் அதிக மதிப்புடையதல்லவாயினும் ஒரு மரத்திற்கு ஒரு பங்கு உழைப்பே செல்ல மற்ற மரத்திற்கு நாலு பங்கு உழைப்புச் சென்றது, இதைச் சரியாகக் குறிப்பது கடு நிலத்தில் உழைப்பு மலிவு என்றல்ல; மரம் ஒறுப்பு என்றே. பிறகு பண்டமாற்று விலை நிச்சயிப்பதில் இந்த அதிகப்படி உழைப்பு கணக்கில் சேரலாம். அல்லது சேராதொழியலாம், பிறர் வேண்டிய அளவு மாங்கன்று நடப்போதிய மிருதுவான நிலம் இருந்தால் மேது அதிகப்படி சிரமத்தை எவரும் பொருட்படுத்தார். கடுவல் நிலத்தில் கஷ்டப்பட்டு உண்டாக்கிய மரத்தின் பழத்திற்கும் மிருதுவான மண்ணில் உண்டாகிய பழத்திற்கும் ஒரே விலைதான் அளிக்கப்படும். ஆனால் இது கொண்டு கற்பாங்கான மண்ணுள்ள தேசத்தில் கூலி வேலை மலிவு என்று கூறிவிடுதலாகாது. அங்கு பொருட்கள் ஒறுப்பு என்றே கூற வேண்டும்.

சாதாரணமாக "மலிந்த உழைப்பு" எனப்படுவ தெல்லாம் நீக்கப்படத் தடைகள் பல இருப்பதையே குறிக்கும். சிறு காரியத்தைச் சாதிக்க அதிகம் உழைப்புத் தேவையாயிருந்தால் உழைப்பு மலிவு என்ப தெப்படி? ஆகாரத்தைத் தேடப் பத்து மணி நேரம் உழைக்க வேண்டியிருப்பதால் உழைப்பு மலிவு எனலாமாயின் அதை உண்பதற்கு வீடுசேரப் பத்துக் காதம் நடக்க வேண்டியிருந்தால் நடப்பது மலிவு எனவுங் கூறலாமன்றோ? இவ்வாறு கூறுவது பொருந்தாது. தேடப்படும் பொருள் ஒறுப்பு அல்லது மலிவு என்று கூறுவதே சரியாகும். பொருள் விலை யெல்லாம் உழைப்பினாலேயே அளக்கப்படும்.

அன்பின் பண்பு

("இளங்குமரன்")

இன்பம் நிறைந்தது இவ்வுலகு. இன்பம் பெருக அன்பு இன்றியமையாதது. அன்பாம் இன்ப வெள்ளத்தை அள்ளிப்பருகி ஆனந்தமடைய ஆசை கொள்ளாதார் யார்?

அன்பு வடிவினன் ஆண்டவன். அவன் படைத்த வுலகம் அன்பின் களஞ்சியம். அதில் வாழும் உயிர்கள் அன்பால் அளவளாவி இன்பந்துய்ப்போர். "அன்பின் வழிய துயிர்நிலை" என்ற உண்மை மொழியை ஓர்க!

அன்புடையோன் அகம் தூய்மை யடைகிறது; முகம் மலர்ந்து காண்கிறது. காண்போர் யாவரும் அம்முகமலர்ச்சியால் களிகொள்ளுகின்றனர். அவன்பால் தங்களையு மறியாமலே ஆர்வங்கொண்டு அன்பினால் உரையாட விழைகின்றனர்; இன்னுரையாடி இன்ப மடைகின்றனர். எவ்வளவு பொழுதாயினும் அவனுடன் பேசுவதில் அயர்ச்சியே தோன்றாது போவதை யுன்னி அதிசய மடைகின்றனர். நீண்டநேரகாலம் விநாடியெனக் கழிந்துவிட்டதைக் கருதி இறும்பூதெய்துகின்றனர். அவ்வன்பு முகம் தங்கள் மனத்துன்பங்களை மாய்த்து விட்டதுட னமையாது, தங்களை இன்பக்கடலில் ஆழ்த்தி விட்டதை யெண்ணி மனம்பூரிக்கின்றனர்.

அன்புடையோனுக்கு உலகமே வசியமாகிறது. காணும் மக்கள் யாவரையும் அன்பு வடிவினராய் மாற்றும் வல்லமை அவ்வன்புடையோனிடம் அமைந்து விளங்குதலை என்னென்பேம்! அவனைச் செல்வனும் பணிகின்றான்! ஏழையும் பணிகின்றான்! கற்றோனும் பணிகின்றான்! மற்றோனும் பணிகின்றான்! சாதுவும் பணிகின்றான்! கொடியனும் பணிகின்றான்! உலகமே அவனைப் பணிகிறது! அன்புக்கு அடிமையாகாதார் அவனியில் யாரே யுளர்? ஆண்டவனே அன்புவலையில் அகப்படுவோ னெனில் பிறரென் கூறு?

இச்சீரிய அன்பு வாழ்க்கையை மக்கள் யாவரும் கொண்டு நடாத்த வேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமோ? நண்பர் பலருடன் நலமுடன் அளவளாவி அன்பாம் பண்பை வளர்த்திடவேண்டும். அவ்வன்பெனும் அமிழ்தைத் தானும் பருகி நண்பர்களும் பருகும்படி வாரிப்பொழிய வேண்டும். இதில் எள்ளளவு பாடுமில்லையே! விலைகொடுத்து வாங்கவும் தேவை யில்லையே!

நினைத்தபொழுதில் நினைத்தவிடத்திலேயே இன்பத்தைக் கொள்ளையாய்க் கொழிக்கும் அன்பை அள்ளியள்ளிக் கொடுக்க இயற்கையன்னை எதிர்நின்று காத்திருக்கிறாளே!

அன்பே உயிரை வளர்க்கும் ஆணிவேர்! அன்பே வாழ்க்கை நலத்திற்கு அடிப்படை! அன்பே அனைத்தையுமறியு மளவுகோல்! அன்பே ஆண்டவன் திருவடிகளைக் காட்டும் ஒளி! அன்பே ஆண்டவன்! அன்பர்களே! அன்பாம் செல்வத்தை அடையப்பெற்றவன் இறைவனின் இன்னருளை எய்துகிறானென்றால் அது வியப்பாமோ? இதுவே மனிதவாழ்க்கையின் சிறந்த நோக்கமெனில், அன்பு வாழ்க்கையின் மேன்மையை உன்னுங்கள்! அன்பு வாழ்க்கையில் அக மகிழுங்கள்!

அன்பு வாழ்க்கையில் வெற்றிக்கொடி நாட்டினவர் காந்தியடிகள். அவரைக் காணும் எவரும் அன்புமயமாய் மாறுகின்றனர். அவரது சொல்லுக்கு அனைவரும் பணிகின்றனர். அவருடன் சில மொழிகளேனும் பேசவிழையாதார் யார்? செல்வர்முதல் ஏழைவரை காந்தியடிகளின் பெயரைக் கேட்பினும் அன்பினால் மயிர் சிலிர்க்கின்றனர் என்பது மிகையாகாது.

காந்தியடிகள் அன்பின் வலியினால் உலகையே நல்வழியில் மாற்றுகிறார். ஒருவராலும் இயலாத காரியங்களையும் ஒருநொடியில் இயற்றி விடுகிறார். பல்லாயிரக் கணக்கானவர்கள் அவர் பணியை ஏற்க ஆவல்கொண்டு நிற்கின்றனர். அன்பின் மாண்புதான் என்ன!

காந்தியடிகள் அன்பிலே இறைவனைக் கண்டார்! அவ்விறைவன் காட்டும் வழியிலேயே அவர் தன் வழியை அமைத்துக்கொண்டு நடந்து வருகிறார். அவர் செல்லும் நெறி நன்னெறியாதலால் அவர்பின் செல்ல அவனியோர் விழைவது அதிசய மாமோ?

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.



நாயனையார் கேண்மை

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில் இன்பத்தை நிறைத்தற்கும், துன்பத்தைக் குறைத்தற்கும் துணைவர் வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றார்கள். மகிழ்ச்சிக்குரிய நற்செய்தியை நண்பரிடம் பேசும்பொழுது உள்ளத்தில் உவகை பெருகுகின்றது. துன்பச்செய்தியை நண்பரிடம் பேசும்பொழுது அவரது அன்பளாவிய மொழிகளால் அத்துயரம் தேய்ந்து தேய்ந்து இற்று விடுகின்றது. இதனாலேயே நட்பு இறைவனால் மாந்தர்க்கு அருளப்பெற்ற உயரிய நலங்களுள் ஒன்றென்று உயர்ந்தோர் கூறுகின்றார்கள்.

இத்தகைய நண்பரைத் தேர்ந்து கொள்வது எளிதாகத் தோன்றினும் உண்மையில் மிக அரிதாகும். பொருளுடையாரது நட்பைப் பெரிதாகக் கருதுதலும் பொருளற்றாரது மேன்மையைப் புறக்கணித்தலும் இவ்வுலகிற் பெருவழக்காகக் காணப்படுகிறது. செல்வரது நேசத்தை விரும்பி அவரைச் சூழ்ந்து திரியும் சிறியோரை நல்வழிப்படுத்துமாறு ஆன்றோர் அருளிய அறவுரை அறிதற்குரியதாகும்.

ஒன்றும் பெறுதலிலர் எனினும்
 உற்ற பெருஞ் செல்வத்தினர் பால்
சென்று கொளும் நட்புடைய ரெனத்
 தேயம் சொலற்கே சிலர்சூழ்வார்
மன்ற என்றாயினும் ஓர்பயன்
 வழங்க லாகும் என, மூடல்
துன்று நறுநெய்க் குடத்து
 எறும்பு சூழ்தல் போலும் சிலர் சூழ்வார்.

என்று செல்வரைப் பற்றித் திரியும் பதடிகளைப் புலவர் பழித்துரைக்

கின்றார். நெய்க்குடத்தை நன்றாய் மூடி முத்திரையிட்டிருப்பினும் நெய்யின் மணத்தை யறிந்து அக்குடத்தைச் சுற்றிவரும் எறும்புபோல், பயனற்ற செல்வரது நேசத்தை விரும்பிப் புன்மக்கள் அவரை விடாது சூழ்ந்து திரிப ரென்று கவிஞர் கூறிய உவமை சால அழகியதாகும். இத்தகைய மாக்கள் நேசத்தின் நலத்தை அறியாராய், செல்வர்பால் இரந்து பணிகேட்கும் அடிமையுள்ளம் வாய்ந்தவராய் வாழ்வார்கள். இன்னும் சிலர் இவ்வுலகை வஞ்சித்துப் போலிப் பெருமை அடையக்கருதி செல்வரைச் சூழ்ந்து திரிவ ரென்று கவிஞர் கூறும் கருத்து உலகியலோடு பெரிதும் பொருந்தி நிற்கக் காணலாம். ஓர் ஊரில் வாழும் உயரிய செல்வனது நண்பன் என்ற முறையில் பிறர் தம்மை உயர்வாக மதிப்பர் என்னும் கருத்தால் அச்செல்வனைத் தொடர்ந்து எப்பொழுதும் அலைகின்ற அல்லல் மாக்களை இவ்வுலகில் காண்கின்றோம். இம்மாக்கள் போலிப் பெருமையாற் பொலிவெய்தக்கருதித் தம் உடலையும் உயிரையும் செல்வர்க்கு அடிமையாக்கு கின்றனர். ஆகவே நட்பினலாய நற்பயனை ஒருவன் அடையவேண்டுமாயின் அறிவாலும் குணத்தாலும் ஒத்தவரோடு நட்புக்கொள்ள வேண்டுமே யன்றிச் செல்வத்தால் செம்மாந்த மக்களைப் பின்பற்றி அலைதல் பேதைமை என்பது இதனால் இனிது விளங்குகின்றது.

நட்பின் இயல்பை நாயனார் எடுத்துரைக்கும் முறை நனிநயம் வாய்ந்ததாகும். ஒத்த உணர்ச்சி யுடையவரே உண்மை நண்பராய் இருத்தல் இயலுமென்று புலவர் அருளிய பொன்னுரை போற்றத் தக்கதாகும். இத்தகைய நட்பு நன்றாய் வேரூன்றி முளைத்தெழுந்து தழைத்தோங்கி இன்பக்கனி தருவதாகும். ஒருவனோடு ஒத்த உணர்ச்சியுடையார் ஒரு சிலரே உலகில் அமைவர் என்னும் உண்மை "ஊரில் ஒருவனே தோழன்" என்னும் முதுமொழியால் இனிதுணரப்படும். இவ்வாறு அமையும் தோழனே,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்னும் உயரிய வாய்மைக்கு உற்ற சான்றாய் விளங்குவான். இதற்கு மாறாக அமையும் கேண்மை, நல்வினைக்க மல்லதாய் அல்லற்படுத்தும் என்று ஆன்றோர் அருளிப் போந்தனர். ஆகவே ஒருவனது குணங்களை நன்கு ஆராய்ந்து ஒத்த உணர்ச்சி யுடையானைத் தோழனாகக் கொள்ளுதலே ஏற்றதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

இவ்வுலகியலை நன்றாய் அறிந்து தெளிவுறுத் துரைத்த நல்லோர், சிலரது நட்பு நன்றென்றும், சிலரது நட்புத் தீதென்றும் செவ்வையாய் அருளிப் போந்தார்.

"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்—யானை

அறிந் தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்"

என்று நாலடியார் கூறும் நற்கவி உலகில்வாழும் மக்களுக்கு ஒரு நல்லாறு காட்டுகின்றது. வேழம்போல் உயர்ந்தாரது நேசத்தை விரும்பாது நாய்போல் நலம்புரியும் நல்லாரது நேசத்தைப் பெறவேண்டுமென்று நாலடியார் கூறும் கருத்து நன்கு ஆராய்தற்குரியதாகும். நிலத்தில் வாழும் உயிர்களில் வேழமே பெரிதாக விளங்குகின்றது. வலிமை சான்ற உடலும், உயரிய உருவமும், விழுமிய தோற்றமும் அமைந்த வேழம் உலகில் வாழும் உயிர்களில் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இன்னும் 'வேழம் இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று உலகம் போற்றுகின்றது. இத்தகைய நலங்களெல்லாம் அமைந்திருப்பினும் வேழத்தோடு பழகுதல் ஆகாதென்று விழுமிய அறிவுடையோர் கூறுவர். உயரிய உருவும் திருவும் அமைந்திருப்பினும் அவ்விலங்கினிடம் குணநலம் காண்பதரிது. வெகுளியும் மயக்கமும் வேழத்தின் பால் இயல்பாய் அமைந்த குறைகளாம். தன் நிழலைக்கண்டு பகைவேழம் என்று வெகுண்டு சீறும் தன்மை வேழத்தின் இயல்பாகும். எழிலைப் பாலையின் பூமணத்தை மதநாற்றம் என்று மயங்கி வெகுண்டு எழுந்து அச்செடியைப் பொடிப்பொடியாக மிதித்துத் துவைத்து மீளும் தன்மை வேழத்தின் வெம்மையை நன்கு விளக்குவதாகும். ஆகவே எளிதில் வெகுளும் தன்மை வேழத்தின் இயல்பாகக் காணப்படுகின்றது. காட்டில் திரியும் யானையை நாட்டில் கொண்டுவந்து ஏற்ற முறையில் போற்றினாலும் அவ்விலங்கின் குணம் சிறிதும் மாறுபடுவதில்லை. வேழத்தின் பசி அறிந்து உணவருத்திப் பண்புறப் பாதுகாக்கும் பாகன் இறுதியில் அவ்விலங்கின் வெம்மைக்கே இரையாவான் என்று அறிவிற் சிறந்த ஆன்றோர் கூறுகின்றார்கள். பலநாட் பழகிய பாகன் என்றும் பாராது, நல்லுணவளித்த நண்பன் என்றும் கருதாது, சீற்றங்கொண்டு பாகனைச் சிதைக்கும் சிறுமை வேழத்தின் இயல்பாதலால் அத்தன்மை வாய்ந்த மாந்தரொடு பழகுதலாகாதென்று அறிவுடையோர் அருளிப் போந்தார். செல்வப் பெருக்கால் செம்மாந்து வாழும் ஒருவனுடன் அல்லும் பகலும் பழகினாலும், அவன் குறிப்பறிந்து குற்றேவல் செய்தாலும் இங்கிதம் பேசி இன்புறுத்தினாலும், குணநலமற்றசெல்வன் சீற்றங் கொண்டு அவ்வன்பனையே சிதைக்கக் கருதுவான். ஒருவன் செய்த சிறுநன்மையைப் பெரிதாகக்கொண்டு அவன் செய்யும் பல தீமைகளையும் பொறுத்தல் பண்புடையோர் செயலாகும். அவ்வாறன்றி ஒருவன் ஆற்றிய பல உதவியையும் மறந்து, ஒருதவறு கண்டவிடத்து ஒறுத்தல் இழிந்தோர் தன்மையாகும். வேழம்போன்ற விழுமிய செல்வர் நன்மையை மறந்து தீமையை நினைந்து சீற்றமுறும் இயல்பினராதலின் அவரது இணக்கம் ஆகாதென்று அறிவுடையோர் அறிவுறுத்தியுள்ளார்.

வேழத்தை உயர்வாகக் கருதும் உலகம், நாயை இழிவாகக் கருதுகின்றது. உருவத்தால் சிறியதும் உற்றாரைக் கண்டபோது உறுமும் தன்மை வாய்ந்ததும், இழிந்தபொருள்களை விரும்பி உண்பதுமாய நாயை உலகம் கடைப்பட்ட பொருளாகக் கருதுகின்றது. இதனாலேயே இழிந்த நிலை யெய்திய மாந்தரை நாயனையார் என்று கூறும் வழக்கம் இந்நாட்டிற் காணப்படுகின்றது. ஆயினும் இத்தகைய இழிந்தவிலங்கினிடம் ஓர் உயர்ந்த குணம் அமைந்திருக்கக் காணலாம். நன்றிமறவாமை என்னும் நல்லறத்தை உயிரினும் உயர்வாகப் போற்றும் பெருமை இவ்விலங்கின் பால் விளங்கக் காணலாம். நம்நாட்டில் திரிகின்ற நாய்கள் பெரும்பாலும் வீட்டினின்று வீசிய மிச்சிலையே உண்டு மகிழ்கின்றன. இவ்வாறு கழிந்த உணவை உண்டுகளிக்கும் நாய், தன்தலைவனைக் கண்டபோது வாலைக்குழைத்து, தலையை அசைத்து, அன்புடன் அருகேவரக் காணலாம். கள்வராலேனும் பகைவராலேனும் தன் தலைவனுக்குத் தீங்குநேருமாயின் அதனைத் தடுக்கும் முயற்சியில் தன் உயிரையும் கொடுக்கும் தன்மை நாயினிடம் காணப்படும். தண்ணீரில் தவறி விழுந்த தலைவனைக் கவ்வி இழுத்துக் கரைசேர்த்த நாய்களின் கதைகள் இந்நாட்டிற் பலவாய்க் காணப்படும். தன்னை ஆதரிக்கும் தலைவன் நோய்வாய்ப்பட்டு வருந்தும்பொழுது நன்றி மறவாத நாய் உண்ணவும் இசையாது, உறக்கமும் கொள்ளாது தலைவனைக் கடைக்கண்ணால் நோக்கிநோக்கிக் கண்ணீர் உகுத்தலை இன்றும் காண்கின்றோம். இவ்வாறு செய்ந்நன்றியைப் பெரிதாகக் கொள்ளும் பெற்றி வாய்ந்த நாய் தன்தலைவன் வெகுண்டபோதும் அவ்வெம்மையைத் தாங்கி மீண்டும் நன்மையே புரியும் என்று நல்லறிஞர் கருதுகின்றனர். எல்லையற்ற கோபமுற்ற தலைவன் தன் கரத்தில் அமைந்த கத்தியை நாயின்மேல் எறிந்து தீங்கிழைத்தாலும், அவ்விலங்கு தலைவனை நோக்கி இன்முகம் காட்டி வாலைக்குழைத்து மனமகிழும் என்பது உண்மையாகும். உடல் புண்ணுற்று எரியும் பொழுதும் உள்ளம் உவகையால் மலர்தலை நாயினிடம் நன்கு காணலாம். துன்புறுத்திய தலைவனைப் பகைவனென்று கருதாது, அவன் செய்த தீமையை மறந்து இன்புறும் இயல்பு சால ஏற்றமுடையதென்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே செல்வம் முதலிய நலங்கள் அமையப்பெறாது சிறியராய் வாழும் மக்களில் நாய்போன்ற சீரிய குணம் அமைந்த நல்லோரும் உண்டென்றும், அத்தகைய நல்லோர் நண்பர் இயற்றும் தீமையைப் பொறுத்து எப்பொழுதும் நலமே புரிவர் என்றும், இத்தகைய எளியார் கேண்மை எவ்வாற்றானும் கொள்ளத் தக்கதென்றும் ஆன்றோர் அருளிய உண்மையை அறிந்து ஒழுகுதலே இம்மையும் மறுமையும் இன்பம் தருவதாகும். இவ்வாறு விலங்கினத்தில் பெருமைசான்ற வேழத்தின் சிறுமையையும், சிறுமையுற்ற நாயின் பெருமையையும் அறிந்து, ஞாலத்தில் வாழும் மக்களுக்கு நல்லாறு காட்டிய நாலடியின் செம்மை நினைக்குந்தோறும் நெஞ்சை மகிழ்விப்பதாகும்.

புதிய திருவுந்தியார்

பொன்னம்பலவனர்.

வெற்றி பிறந்தது வேற்றுமை மாய்ந்தது
ஒற்றுமை வந்ததென் றுந்தீபற
வண்மை சிறந்ததென் றுந்தீபற 1.

தூக்கம் ஒழிந்தது துக்கம் பறந்தது
ஊக்கம் பிறந்ததென் றுந்தீபற
உண்மை சிறந்ததென் றுந்தீபற 2.

சத்தியம் வென்றது தர்மமே நின்றது
முத்தி யுறுதியென் றுந்தீபற
முன்னவன் அருளுமென் றுந்தீபற 3.

தாழ்வு மடிந்தது வாழ்வு பிறந்தது
தாழ்பவர் இல்லையென் றுந்தீபற
தம்மை யுணர்வரென் றுந்தீபற 4.

பிறப்போடுவந்த பெருமை சிறுமை
நிறத்தோடு மாயுமென் றுந்தீபற
நிலைப்ப தறிவென் றேயுந்தீபற 5.

அன்னை யொருத்தியின் அன்புடை மக்களாய்
மன்னிய வாழ்வுண் டென்றுந்தீபற
வாய்மதம் வீணென் றேயுந்தீபற 6.

தெய்வம் உளதொன்று தேவாலயம் பல
செய்தும் அறிவம் என்றுந்தீபற
செல்வம் பெறுவம் என்றுந்தீபற 7.

எல்லாம் வலவனும் இறைவன் திருமுன்னர்
எல்லாம் நிகராம் என்றுந்தீபற
எல்லார்க்கும் நலமுண் டென்றுந்தீபற 8.

கிருக பரண சாஸ்திரம்

(வி. சங்கரையர்.)

விவரணம்:—மாதிருத்வம், கிருக காரியம் என்ற பதங்களை சரியானபடி அடையும் பெண்களுக்குக் கற்பிக்கப்படும் சாஸ்திரம். இதில் அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் எல்லோராலும் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால் முக்கியமானவைகளையெல்லாம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். வீடு அல்லது மனை என்பதை ஆளும் பெண்ணே மனைவியாவாள். ஆகையால் ஆரோக்கியம், அழகு, பொருப்பு, முதலியவைகள் அவளைப் பொருத்தே யிருக்கிறது. சிறு பெண் தன் தாயார் முதலியவர்களிட மிருந்து வீட்டு வேலைகளை முதலிற் கற்கிறாள். பிறகு தன் கணவன் வீடு சென்றதும் மாமியாரிடமிருந்து கற்கிறாள். தற்காலம் பள்ளிக் கூடங்களிலேயே கற்பிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். 1926-ல் பம்பாய் யூனிவர்ஸிட்டியில் கிரகபரண சாஸ்திரத்தைப் பெண்கள் தங்கள் ஐச்சிக விஷயமாக (Optional subject) மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு எடுத்துக்கொள்ள சம்மதித்தார்கள். இப்பொழுது எல். டி. பரீக்ஷைக்கு ஒரு விஷயமாக சென்னையில் செய்திருக்கிறார்கள். ஆகையால் எலிமெண்டரி ஸ்கூல்களிலும் இவ்விஷயத்தைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

இந்த ஆரம்பப் பாடசாலைகளில் அடியில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் கற்பிப்பது நலமென்பதுதான் என் அபிப்பிராயம். ஆரம்பப் பாடசாலைகளில் பெண்கள் சுமார் 12-வயது வரையிலும் படிப்பார்கள். அவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறுவதற்குள் இவ் விஷயங்களில் நல்ல தேர்ச்சியடையவேண்டும்.

1. வீட்டை நன்றாகப் பெருக்கி மெழுகும் விதம், பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், மரச்சாமான்கள், கண்ணாடிச் சாமான்கள் இவைகளை அழுக்கில்லாமல் தட்டிச் சுத்தம் செய்தல்; படுக்கைகளைச் சரியானபடி சுத்தமாகப் போடவேண்டியது, கொசுவலை முதலியவைகள் கட்டும் விதம்.

2. பஞ்சிலிருந்து நூலெடுப்பது, வேஷ்டி முதலியவைகளை சுத்தமாகத் தோய்த்து உலர்த்தல்.

3. சமையல் சரியானவிதம் செய்யும் வழி; குழம்பு முதலியவைகளுக்கு வேண்டிய பொடி முதலியவை இடித்து வைத்துக்கொள்ளல், அரைத்தல்; கஞ்சி, பாயசம், பலவித கறிகள் முதலியவைகளைப் பக்குவம் செய்யல்; தோசை, இட்டலி, லாடு, அல்வா முதலிய பலகாரங்கள் செய்தல், பால் காய்ச்சுதல், காப்பி, தேயிலை முதலிய பானங்களைத் தயார் செய்தல்; முறம் பிடித்து புடைப்பது, தயிர் கடைவது, நெய் உருக்குவது, மாவு சலிப்பது, சாணம் முதலியவைகளில் உபயோக மறிந்து உபயோகித்தல்; இயந்திரம் பிடித்து மாவு முதலியவைகளை அரைப்பது.

4. ஆரோக்கிய சாஸ்திரம் கற்றறிந்து அதன்படி சுத்தமான வாயு, ஆகாரம், தேகப்பயிற்சி, இளைப்பாறுதல் இவைகளின் நன்மையை அடைதல், முதற்சிகிச்சை (First Aid) விதிகளை நன்றாகக் கற்றறிதல், தலைசீவி பின்னிக்கொள்ளல், நல்ல கோலங்கள் போடுதல்.

5. புஷ்பங்களின் உபயோகம், செடிகொடிகளின் மருத்துக் குணம், தங்கள் உபயோகத்துக்கு வேண்டிய காய்கறித் தோட்டம் தயாரித்தல்.

6. சட்டைகள், ரவிக்கைகள், பாவாடைகள், தாவணிகள், முதலியவைகளைத் தைக்கத் தெரிந்துகொள்ளல், காகிதத்தினால் புஷ்பங்கள், பூச்செடிகள் செய்தல், மாலைகட்டுதல் முதலியன.

தான் செய்யும் பதார்த்தங்களின் தன்மையும், அதற்குக் காரணமும் அறிந்திருப்பது மிகவும் நலம். வீடு முதலியவைகளின் மாதிரி அட்டைகளில் செய்வதும், அதற்கு வேண்டிய அட்டைகளை வீண் செய்யாமல் கத்தரிப்பதற்குக் கணக்கெடுக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இம்மாதிரிப் பாடங்களுக்கு தனி இடம் பாடசாலைகளிலிருப்பது நலம்.

எட்டாவது வகுப்பு வரையிலு முள்ள பாடசாலையானால் அங்கு கட்டாயம் 'மாதர் நீதி' போன்ற புஸ்தகங்களைப் பாட புத்தகமாக வைத்துக் கற்பிக்க வேண்டியது அவசியம். மாதிருத்வ விஷயமாக, பிள்ளைப் பேறு, கருப்பிணிகள் அனுசரிக்கவேண்டிய விஷயங்கள், குழந்தைகளை வளர்க்கும் விஷயம், அவைகளைக் குளிப்பாட்டுவது, உடுத்துவது, உணவளிப்பது, முதலியவைகளை நன்றாகத் தெரியும்படிக் கற்பிக்க வேண்டும்.

இம்மாதிரி பெண் குழந்தைகளுக்கு பிற்கால வாழ்க்கைக்கு உதவும் பல விஷயங்களும் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டும். இவைகளைத் தவிர வாசிப்பு (Reading), எழுத்து (Writing), கணிதம் (Arithmetic) இவைகளும் ஆரம்பப் பாடசாலைகளில் முக்கியம். சரித்திரபாடமும், சயன்ஸ் பாடமும், பூமிசாஸ்திர பாடமும் பெண்களுக்குத் தேவையில்லை என்பது என் அபிப்பிராயம். தமிழும் ஆங்கிலமும் நன்றாக எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தல், வீட்டுக்கு உபயோகப்படக் கூடிய கணிதம், கிரக பரண சாஸ்திரம், தேகப் பயிற்சி இவைகளை மாத்திரம் கற்பிப்பதுவே போதும். இவ் விஷயங்களைச் சரியாக கவனித்து பெண் பாடசாலைகளைச் சீர்திருத்தும்படியாகவும், அக் குழந்தைகளுக்கு வகுப்பு வாரியாக இவ் விஷயங்களைக் கற்பிக்க சரியான பாடத்திட்டம் தயாரிக்கும்படியாகவும், அதற்கிணங்க புத்தகங்களைப் பிரசுரிக்கும்படிக்கும் கல்வி யதிகாரிகள் செய்வதால் நாட்டில் பெண்மக்கள் கல்வி அபிவிருத்தி யடையும் என்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. இல்லறத்தைச் சரியாக நடத்துபவளே சரியான மனைவி யாவாள். சிறு வயதில் கற்றுணர்ந்தவைகள் ஒரு நாளும் மறவாது. ஆகையால் நமது பெண் பாடசாலைகளிலேயே நமது பெண் குழந்தைகள் பிற்காலத்தில் சரியான மனைவி என்று பெயர் விளங்கச் செய்வதே பெண் பள்ளிக்கூட உபாத்தியாயினிகள் கடமை என்பதை அறிந்து அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்யும்படியாக கடவுள் அருள் புரிவாராக.

"ஜாலவித்தை எங்கே"

ஜால வித்தை காண்பிப்பவர் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண் டிருக்கும் போது ஒரு எலும்புத் துண்டு தொண்டையில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப் படுகிறார்.

பட்லர்:—"என்ன சார்! நேற்று இரவு கண்ணாடித் துண்டுகளை அப்படி அப்படியே முழுசாய் விழுங்கினீர்களே! இதெல்லாம் உங்களுக்கு எம்மாத்திரம்? உங்கள் மந்திரக் கோலை எடுத்து வரட்டுமா?"

•••

"நன்றிப் பிரபு"

முதலாளி:—(மானேஜரைப் பார்த்து) "போன ஒரு வருஷத்தில் எல்லாச் செலவுகளும் நீங்கலாக நம் கம்பெனிக்கு ரூ. 12,730 லாபம் கிடைத்திருக்கிறது. முந்தின எந்த வருஷத்தையும் விட இது நான்கு பங்கு அதிகமாக யிருப்பதால் இது வெல்லாம் உம்முடைய விசேஷித்த சிரத்தையென்றறிகிறேன். ஆகையால் உமக்கு ரொக்க இனமாக ரூ. 100-க்கு ஒரு பாங்கு செக்கு எழுதி யிருக்கிறேன்."

மானேஜர்:—"தங்களுக்கு அநேக வந்தனம். நான் கம்பெனிக்கு என் கடமையையே செய்தேன்."

முதலாளி:—"இப்படியே இந்த வருஷ முடிவிலும் முந்தின வருஷம் போல் லாபம் காட்டும் பட்சத்தில் நான் இந்த பாங்கு செக்கை உமக்குக் கையொப்ப மிட்டுத் தருவேன்."

"யாருடையது குற்றம்"

கான்ஸ்டேபிள்:—'உங்களுடைய பெயரையும் விலாசத்தையும் சொல்லுங்கள்."

மோட்டார் ஓட்டுபவர்:—"நீங்கள் முழுக் குற்றத்தையும் என் பேரிலே போட்டுவிடக் கூடாது. நான் என் ஜீவ காலத்தில் இன்று தான் முதன் முதலாக ஒரு மோட்டாரை ஓட்டினேன். அந்த மனுஷன் பிறந்ததிலிருந்து இத்தனை வருஷங்களாய் ரஸ்தாவில் நடந்து பழக்க முள்ளவனாச்சதே."

•••

"ஓட்டல் வசதி"

புதிதாய் ஹோட்டலில் தங்கும்படி வந்திருப்பவர் ஹோட்டல்காரனைப் பார்த்து "இங்கே சாப்பாடு, மற்றும் வசதிகளுக்கு சார்ஜ் என்ன?" என்று கேட்கிறார்.

ஹோட்டல்காரன்:— "ஒரு நாளைக்குச் சாப்பாடு, காபி முதலியவைகள் எல்லாவற்றிற்கும் ரூ. 1. தங்கியிருக்கும் அறைக்கு, வாடகை அணா 8. வயிற்றுக் கடுப்பு மருந்து ரூ. 1.

மற்றவர்:—"அதென்ன வயிற்றுக்கடுப்பு மருந்து."

ஹோட்டல்காரன்:—"ஐயோ! இதென்ன பைத்தியக்காரத்தனம்! இவ்விடத்தில் நீங்கள் வந்து தங்கி விட்டு வயிற்றுக் கடுப்பு வராமலா போகப் போகிறீர்கள்! வேணுமென்றாலும் நீங்கள் புறப்படும்போது பாருங்கள்."

•••

கோவிந்தன்:—கிருஷ்ணா உன் மதம் என்னடா?

கிருஷ்ணன்:-என்னடா எக்காரணத்தைப்பற்றி நீ எனக்கு மதம் பிடித்து விட்டதாகக் கேட்டாய்.

கோவிந்தன்:—என்னடா கிருஷ்ணா நீ அர்த்தத்தை அனர்த்தம் செய்து விட்டாயே. நான் கேட்டது யாதெனில் நீ வைணவ மதத்தைச் சேர்ந்தவனா சைவ மதத்தைச் சேர்ந்தவனா என்பதே.

கிருஷ்ணன் எனக்கு எல்லா மதமும் ஒன்றே. மதத்தைப்பற்றி யாதொரு கவலையும் இல்லை. மதம் பிடித்தவர்கள் தான் மதத்தைப்பற்றி வாதித்துப் பேசி மண்டையை உடைத்துக் கொள்ளுவார்கள்.

"வலிக்குக் காரணம்"

தகப்பனார்:—"டாக்டர்தான் இன்று பல் பிடுங்க வேண்டாமென்று சொல்லி விட்டாரே; பின்னை ஏன் அழுகிறாய்?"

பையன்:—இனி பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொல்வீர்களல்லவா?"

***

தாயார்:— "அம்மா! பானுமதி! நம்முடைய மாடு மேய்ந்து விட்டு வராப் போலிருக்கு. சத்தம் கேட்கிறது பாரடி!"

பானு:—(சிரித்துக்கொண்டே) மாடு இல்லையம்மா! அப்பா வல்லவோ ஊதாரணையுடன் நடந்து வருகிறார்.

***

"முறை தவறாமை"

ஆபீஸ் மானேஜர்:— (குமாஸ்தாவைப் பார்த்து) "சாயங்காலம் டாம்! டாம்!! என்று மணி ஐந்து அடித்த க்ஷணத்தில் ஒரு வார்த்தையை நீர் எழுதிக்கொண்டிருந்தால், அவ்வார்த்தையை பாதி மாத்திரம் எழுதி யிருந்தாலும் பேனாவை அப்படியே வைத்து விட்டுப் புறப்பட்டு விடுகிறீராமே. அது வாஸ்தவந்தானா?"

குமாஸ்தா:—"நான் அப்படி ஒரு நாளும் செய்தது கிடையாது. மணி ஐந்தடிக்கப் போகிறதென்று தெரிந்தால் ஒரு வார்த்தையை எழுத ஆரம்பிக்கிறதே யில்லை."

***

தகப்பனார் சிகரெட் பிடித்துக்கொண்டே, மகனுக்கு திருத்தமாய்ப் படிக்கச் சொல்லிக்கொடுத்தார். 'நான் படித்தாற் போலேயே படித்துக்கொண்டிரு' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார். திரும்பி வரும்போது பையன் படிக்காம லிருந்தான். அவனைப் பார்த்து தகப்பனார் 'ஏன் படிக்கவில்லை?'

'அம்மா வெளியே சென்றிருக்கிறார்கள். சிகரெட்டுக்கு நெருப்பு இல்லை. பற்றவைத்துக் கொடுங்கள். நீங்கள் செய்தாற் போலவே செய்கிறேன்.



இந்தியாவில் சர்க்கரைத் தொழில் ஜாவாவில் நடைபெறுவதில் 6-ல் ஒருபங்கு விகிதமே நடைபெறுகின்றதாம்.

*   *   *

லண்டனில் களிமண் அஸ்திவாரத்தின்மீது ஒருமாதாகோவில் கட்டப்பட்டிருக்கிறதாம். நான்குநாள் தொடர்ந்து மழை பெய்யாதிருந்தால் அம்மாதா கோவில் சுருங்குகின்றதாம்.

*   *   *

இவ்வுலகிலுள்ள தங்கத்தில் ஆயிரங்கோடிப் பவுன்கள் வரை தனிப்பட்ட வர்த்தகர்களின் இரும்புப் பெட்டிகளிலும், பாங்கு இரும்பறைகளிலும் புதைபட்டுக் கிடக்கின்றனவாம்.

*   *   *

170 மணங்கு கனமும் 10,000 திபெத்திய புத்தகங்களும் கொண்ட 982 கட்டுக்கள் பாட்னா மியூஸியத்திற்குத் திபெத் சென்று திரும்பிய ராஜு சங்காதியா இலவசமாக அளித்துள்ளாராம்.

*   *   *

உலகிலேயே 20 அங்குல நீளமுள்ள பெரிய மீசையை யுடைய ஜப்பான் தளகர்த்தர் ஜெனரல் காஷிகா கௌகா இறந்துபோய் விட்டாராம்.

*   *   *

பாரிஸ் நகரில் 30,00,000 எலிகள் இருக்கின்றனவாம். இவ்வெலிகள் ஒவ்வோராண்டும் 20,00,000 பவுன்கள் பெறுமான உணவுப் பொருள்களை அழித்து விடுகின்றனவாம்.

*   *   *

அயர்லாந்து கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக வென்று டிவலரா 20 லக்ஷம் பவுன் கடன் கொடுத்து உதவ ஏற்பாடுசெய்து வருகின்றாராம்.

*   *   *

புடாபெஸ்டில் ஓர் வாலிபன் பல பொய்களைக் கூறி 4 மனைவிகளையும், 37 காதலிகளையும், 41 மாறு பெயர்களையும், 41 விதமான பொய் உத்தியோகங்களையும் உடையவனா யிருந்தானாம்.

*   *   *

லண்டன் கத்தோலிக்கர் மஹாநாடு ஒன்றில் 1932-ம் ஆண்டில் 18,29,410 துண்டுப் பிரசுரங்கள் விற்பனை செய்யப்பட்டனவாம்.

*   *   *

பாரிஸ் நகருக்கருகில் ஒரு பாழடைந்த கோட்டையில் இருந்த நிர்வாணிகள் கூட்டத்தில் பிரெஞ்சு பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள், சமூகத்தலைவர்கள், ஒரு புரொபெஸர், ஒரு சினிமா நடிகை ஆகியோர் இருக்கின்றனராம்.

பால் கறக்கும் மின்சாரப் பசு :—

அமெரிக்காவில் சிகாகோ கண்காட்சியில் வைப்பதற்கென ஒரு மின்சாரப் பசு நிருமாணிக்கப்பட்டிருக்கிறது. இது பார்வைக்கு உண்மைப் பசுவைப் போலவே காணப்படுகிறதாம். அதற்குள் மின்சார யந்திரம் ஒன்று வைத்து வேலை செய்யப்பட்டிருக்கிறது. உயிர்ப் பசுவின் உள் உறுப்புகளைப் போன்ற யந்திரங்கள் இதற்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மின்சார யந்திரப் பசு மூச்சு விடுகின்றது. புல்லை மென்று தின்னுகிறது. பசுவைப் போலவே கத்துகின்றது. அது ஆகாரம் தின்றவுடன் அசைபோடுகிறது. ஆகாரம் உள்ளே சென்று உள் யந்திரங்களால் பக்குவப் படுத்தப்பட்டுப் பாலாகி விடுகிறதாம். அப்பாலையும் கறக்கலாமாம். இதன் காதுகள், கண்கள், வால் முதலியன வெல்லாம் உண்மைப் பசுவுக்கிருப்பது போன்றே இருக்கின்றனவாம். இதன் விலை மூவாயிரம் டாலர்களாம்.

⁂

பிரஞ்சு வரதக்ஷிணை :—

மஹா யுத்தம் காரணமாக பிரஞ்சு நாட்டில் இன்னும் இருபது லக்ஷம் பெண்கள் கலியாண மாகாமல் அந்நம்பிக்கை கொஞ்சமுமின்றித் தவிக்கின்றனராம். இதற்கென ஏற்பட்டுள்ள அமைப்புகள் ஆண்களுக்குப் பணம் கொடுத்துப் பெண்களை மணந்துகொள்ளத் தூண்டுகின்றனவாம். இப்படிக் கலியாணமாகிக் கன்னித்தன்மை கழித்துக் கொண்டபின் அப்பெண்கள் நீதிமன்றங்கள் வாயிலாக கலியாண ரத்து செய்து கொள்ளுகின்றனராம். பிரஞ்சுக் கோர்ட்டுகளில் கலியாண ரத்து வழக்குகள் ஏராளமாகக் குவிகின்றனவாம். தொழிலாளர்களுக்குக் கலியாணச் செலவுடன் 100 பிராங்குகளும், உத்தர அந்தஸ்து உடையவர்கட்கு 50,000 பிராங்குகளிலிருந்து 700 பிராங்குகள் வரையும் வரதக்ஷிணை கொடுத்தால் கலியாணம் செய்ய இசைகிறார்களாம்.

⁂

விலங்கைத் தின்ற மனிதன் :—

ஜோஸப் வைரோ பெக் என்ற நாற்பது வயது மனிதனுக்கு அபாரமான பசி இருக்கிறதாம். ஒரு சமயம் அவனை வார்சாவில் கைது செய்தபோது கையில் விலங்கு பூட்டினார்கள். அவன் அதனை உடைத்துச் சாப்பிட்டுவிட்டான். நீதிபதிமுன் நிறுத்தி விசாரிக்கப்பட்டபோது அவன் தனக்கு நெருப்புக்கோழிக் கிருப்பது போன்ற பசி யிருப்பதாகப் பெருமை பாராட்டிக் கொண்டானாம். யுத்தத்திற்கு முன் நாணயங்களையும் சிறிய கடிகாரங்களையும் சாப்பிடுவது உண்டென்றும் புகழ்ந்து கொண்டானாம். அவனுக்கு நீதிபதி ஒரு மாதம் தண்டனை விதித்தார்.

ஆசிரியர் குறிப்புக்கள்.

வாழ்க லக்ஷ்மி—தேவதாஸ்!

சென்ற மாதம் 16-ம் தேதி புனாவிலுள்ள பர்ணக்குடியில் காந்தி யடிகளின் குமாரர் ஸ்ரீமான் தேவதாஸுக்கும் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரின் செல்வக்குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் நடைபெற்ற திருமணம் சரித்திரப் பிரசித்திபெற்றதாகும். இத்திருமணம் இந்து சமூகத்திற்கு ஒரு சிறந்த ஆதர்ஸமாக விளங்கவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் தென்னாட்டில் "மறந்தும் புறந்தொழாத வீர வைஷ்ணவ" வைதிக பிராமண பரம்பரையைச் சேர்ந்தவர். சிறந்த அரசியல் அறிஞர். தேசபக்தர். தியாகி. காந்தி யடிகள் வைஷ்ணவ சமயத்தைத் தழுவுபவராயினும் வைசிய வகுப்பைச் சேர்ந்தவர். தியாக சீலர். உலகம் போற்றும் உத்தமர். இவ்விருவரும் தம்மக்களுக்குக் கலப்புத் திருமணம் நடத்திவைத்து வாழ்த்தியதின் மூலம் இந்திய தேசிய ஒற்றுமைக்கு—ஒரே பாரத ஜாதி நிர்மாணத்திற்கு ஆக்கம் அளித்து வழிகாட்டிவிட்டார்கள் என்றே மதிக்கின்றோம். மணமகனான ஸ்ரீமான் தேவதாஸ் தந்தையின் நற்குணங்கள் பல நன்கு அமையப்பெற்றவர். தேசத் தொண்டு ஒன்றே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டவர். தேசபக்தியும் தியாக உணர்வும் நிரம்பப் பெற்றவர். மணமகளான ஸ்ரீமதி லக்ஷ்மி கல்வி, அறிவு, ஒழுக்க, அடக்கங்களிற் சிறந்தவர். குறுகிய வைதிகக் கட்டுப்பாடுகளைக் கடந்து நின்றவர். சுதந்தரத் தத்துவத்தையும் ஏழை மக்களின் கஷ்ட நஷ்டங்களையும் நன்குணர்ந்தவர். இத்தகைய அரும்பெரும் குண நலம் பொருந்திய இருவரும் மணந்துகொண்டது ஜாதித் திமிர்பிடித்த ஹிந்துக்களிடையே ஒரு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்கும் என்றே எண்ணுகின்றோம். லக்ஷ்மி தேவதாஸ் திருமணத்தின்போது காந்தியடிகள் தம்பதிகளை ஆசீர்வதித்துச் செய்த ஹிதோபதேசம் பொன்னேபோல் போற்றத்தக்கதாகும். எல்லாரும் அத்தருமோபதேசத்தைக் கடைப்பிடித் தொழுகவேண்டும் என்று விரும்புகின்றோம். எல்லாப் பேறும் பெற்று நீடூழி வாழ்க லக்ஷ்மி தேவதாஸ் தம்பதிகள் என்று பல்லாண்டு கூறுகின்றோம்.

⁂

ஆங்கில ஆட்சியில் கண்ட பலன்

கூட்டுக் கமிட்டியில் சாக்ஷி கூறும்பொருட்டு லண்டன் சென்றுள்ள தொழிலாளர் பிரதிநிதி ஸ்ரீமான் ஜோஷி இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைக் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் பிரிட்டிஷ் ஆட்சியானது இந்திய மக்களை எத்துறையிலும் முன்னேற்றவில்லை என்னும் உண்மையை நன்கு விளக்கிக் காட்டினார். "இரண்டு நூற்றாண்டுகளாக நீங்கள் இந்தியாவில் ஆட்சி புரிகிறீர்கள். இன்னும் 100-க்கு 6 பேரே எழுத்து வாசனை பெற்றிருக்கிறார்கள். இந்தியனின் சராசரி வருஷ வருமானம் 4 பவுனுக்கு மேல் உயரவில்லை. சராசரி பதினாயிரம் ஜனங்களுக்கு ஒரு வைத்தியன் வீதங்கூட இந்தியாவில் கிடைப்பதில்லை. பம்பாயில் தொழிலாளர் வசிக்கும்

இடங்களைப் போன்ற நரகங்கள் உலகில் எங்கும் காணமுடியாது. இந்நிலையில் லாபமானாலும் சரி நஷ்டமானாலும் சரி நம்முடைய தற்கால எஜமானர்களை விட்டு வேறு எஜமானர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம் என்று என் போன்றவர்கள் நினைப்பது சகஜமல்லவா?" என்று ஸ்ரீ ஜோஷி கேட்கும் கேள்விக்கு இங்கிலாந்தினால் என்ன பதில் சொல்லமுடியும் என்று கேட்கின்றோம். எந்த ஆட்சிமுறைக்கும் முக்கியமான பரீக்ஷை பொதுஜன முன்னேற்றமேயாகும். பிரிட்டிஷ் ஆட்சி இதற்குத் துணைசெய்யவில்லை என்று ஸ்ரீ ஜோஷி எடுத்துக்காட்டியது முற்றிலும் உண்மை என்பதே நமது கருத்தாகும். பிரிட்டிஷ் ஆட்சியினாலேயே இந்தியாவில் எல்லையில்லாத நன்மைகள் விளைந்திருக்கின்றன வென்றும், சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் இந்தியா அதோகதி அடைந்துவிடும் என்றும் பிதற்றிக்கொண்டிருப்பவர்கள் மிதவாதியான ஸ்ரீ ஜோஷியின் வாக்கால் உண்மையொளி பெறுவார்களாக.

தீண்டாமை விலக்குப் பாட்டும் சட்டவிரோதமா?

இதுகாறும் தேசியப் பாடல்களை மட்டும் சட்ட விரோதமானவையாக அரசாங்கத்தார் கருதி யிருக்கிறார்கள் என்று எண்ணி யிருந்தோம். சென்ற மாதம் திண்டுக்கல்லில் நடந்த வள்ளி நாடகத்தில் போலீசார் செய்த ஆர்ப்பாட்டத்தால் தீண்டாமை விலக்குப் பாட்டுகளுக்குங்கூட அக்கதி நேர்ந்து விட்டதோ என்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. ஸ்ரீமான் விசுவநாததாஸ் அன்று பிரதம நடிகர். ஸ்ரீமான் தாஸைத் தமிழ் மக்கட்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டியது அநாவசியம். அவர் சிறந்த நாடக நடிகராகவும் தேசபக்தராகவும் விளங்குகிறார். தேசிய வேட்கை மேலீட்டால் சிறையும் சென்றிருக்கிறார். இவரைப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நாடகம் நடக்குமுன் நேரில் கண்டு ஆக்ஷேபகரமான பாடல் எதையும் பாடக்கூடாது என்று வேண்டிக் கொண்டார். ஸ்ரீமான் தாஸ் அதற்குச் சம்மதித்தார். ஆனால் தீண்டாமை விலக்குப் பாட்டுக்களை மாத்திரம் பாடுவதாகத் தெரிவித்துக்கொண்டாராம். சப் இன்ஸ்பெக்டரும் சரி என்று ஒப்புக்கொண்டு போய்விட்டார் என்று தெரிகிறது. அப்படியே நாடக மத்தியில் ஸ்ரீமான் தாஸ் தீண்டாமை விலக்குப் பாடல் பாடத் தொடங்கியவுடன் அங்கிருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் என்பவர் அத்தகைய பாடல்களைப் பாடக்கூடாது என்று வாய்க்கட்டளையிட்டுத் தடை செய்துவிட்டாராம். ஸ்ரீமான் தாஸ் எழுத்து மூலமான உத்தரவு கேட்டார். அப்படிக் கொடுக்க முடியாதென்றும் தம்முடைய வாய் மொழிதான் உத்தரவு என்றும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கூறி நாடகத்தையே நிறுத்திவிட்டாராம். ஸ்ரீமான் விசுவநாத தாஸ் ராஜத்துவேஷமான பாடலைப் பாடியிருந்தால் போலீஸார் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். தீண்டாமை விலக்குப் பாட்டில் "ராஜத்துவேஷம்" புகுந்துகொண்டிருக்கிறது என்று அந்தச் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எப்படிக் கண்டுகொண்டார் என்று கேட்கின்றோம். இப்போலீஸ் இன்ஸ்பெக்டரின் பொறுப்பற்ற செய்கையால் நூற்றுக்கணக்கானவர் கைப்பொருள் இழந்தும் நாடகம் கண்டு களிக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர். இப்படியே பலவிடங்களிலும் நடக்கும் அக்கிரமச் செயல்களுக்கெல்லாம் அரசாங்கத்தார் என்ன விமோசனம் செய்யப்போகின்றனரோ தெரியவில்லை.

நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(தொகுதி 18. பகுதி 12. 959-ம் பக்கத் தொடர்ச்சி.)

6—வது அத்தியாயம்

கோரமான கொலை

அன்றிரவு எனக்குத் தூக்கமே கிடையாது. நான் கேட்ட அதிசயமான சம்பாஷணையைப் பற்றியே என் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. சாரதா என்ற பெயரையுடைய ஸ்திரீ யார்? இவளுக்காக அவ்விருவரும் பயப்படவேண்டிய காரணமென்ன? இவைகளே எனக்குப் பெருத்த யோசனையாக விருந்தது.

விடியற்காலையில் நான் தேகசுத்தி மனோசுத்தி செய்துவிட்டு காபி சாப்பிடப் போகும்போது ஹோட்டல்காரன் என்னைக் கண்டதும் "ஐயா! டாக்டர்வாள்! சமாச்சாரம் கேட்டீர்களோ?......" என வியப்போடு கூறினான். நான் என்ன சமாச்சாரம் என்று கேட்க, அவன் "ஓஹோ! உங்களுக்குத் தெரியாதுபோ லிருக்கிறது! பாவம்! நாம் நேற்று முழுவதும் யாரைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தோமோ அந்த மனிதர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்!" என்றான். நான் ஆச்சரியத்துடனும் ஒருவித அச்சத்துடனும் "கொலையா? யார் கொலை செய்யப்பட்டார்!" என்று கேட்க அவன் "அவர் தான் கோடீச்வரர் மாசிலாமணி முதலியார். அவருடைய தோட்டத்திலேயே கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்!" என்றான்.

இதைக்கேட்டதும் என் தேகம் மயிர்க்கூச்சலடைந்தது. நான் மறுபடியும் சந்தேகித்த வண்ணம் "என்ன அப்பா! தவறுதலாக உளறுதே. மாசிலாமணி முதலியாராவது கொலை செய்யப்படவாவது! நேற்று அவர் உயிருடனிருந்தாரே!" என்று கூற, அவன் இதைக்கேட்டு "ஐயா! நான் உளறுவதும் உண்மை பேசுவதும் மாசிலாமணி முதலியாரின் தோட்டத்திற்குப் போனால் தெரியும். கொலை செய்யப்பட்டு இறந்தவர் மாசிலாமணி முதலியார் என்பதில் கிஞ்சித்துங்கூட சந்தேகமில்லை. ஊரெல்லாம் அல்லோலகல்லோலப்படுகிறதே!......அவர் கொலை செய்யப்பட்டது பெருத்த மர்மமாகவேயிருக்கிறது" என்றான்.

நான்:—உண்மைதானா? பிரேதத்தை எப்பொழுது கண்டு பிடித்தார்கள்?

கந்தசாமி:—இன்று காலை 5-மணிக்கு சவம் காணப்பட்டது.

நான்:—எப்படிக் கண்டுபிடித்தார்கள்? யார் கண்டு பிடித்தார்கள்? சற்று விவரமாய்ச் சொல்.

கந்தசாமி:—போலீஸ் கான்ஸ்டேபில் பொன்னுசாமி என்பவன் சற்று முன் இங்கு வந்திருந்தான். அவன்தான் இந்த விஷயத்தைப்பற்றி எனக்குச் சொன்னான். ஒரு கூலியாள் பங்களாத்தோட்டத்தின் தென்புறமாய்ப் போய்க்கொண்டிருந்தான். தென்புறம் முள்வேலிகள் கட்டப்பட்டிருக்கின்றனவே யொழிய சுவர் கிடையாது. இதனால் தோட்டத்திற்குள்ளிருக்கும் குளக் கரையில் ஒரு மனித உருவம் அவன் கண்களுக்குத் தென்பட்டது. உடனே அவன் சுவரேறிப்பார்க்க மாசிலாமணி முதலியாரின் உடல் பாதி ஜலத்தில் அமிழ்ந்து கிடந்ததைக் கண்டான்.

நான்:—ஆனால் அவர் ஜலத்தில் அமிழ்த்தப் பட்டா உயிரிறந்தார்?

கந்தசாமி:—அல்ல! இதுதான் ஆச்சர்யமா யிருக்கிறது. அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்!

நான்:—எவ்விதமாகக் கொலை செய்யப்பட்டார்?

கந்தசாமி:—அவருடைய தலையில் நன்றாக அடிபட்டிருக்கிறதென்றும் இதனாலேயே அவர் இறந்து போயிருக்க வேண்டுமென்றும் போலீஸார் நம்புகிறார்கள். குளத்திற் கருகாமையில் மாசிலாமணி முதலியாருக்கும் கொலையாளிக்கும் மும்முரமான சண்டை நடந்திருக்க வேண்டுமென்று தரையிலுள்ள சில அடையாளங்களின் ஆதாரத்தினால் பொன்னுசாமி சொல்லுகிறான்.

நான்:—(மிக்க ஆச்சரியப்பட்டவனாய்) அந்த கூலியாள் கண்டபோது கொஞ்சங்கூட உயிரில்லை, அல்லவா? உடனே எந்த டாக்டராவது கூப்பிடப் பட்டாரோ?

கந்தசாமி:—ஆம். டாக்டர் ராமராவ் கூப்பிடப் பட்டார். அவர் வந்து பார்த்து முதலியாரவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறாரென்றும், அவ ரிறந்து வெகுநேரமா யிருக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

நான்:—கொலை செய்தவன் யாரென்று எவருக்கும் புலப்படவில்லையா?—என்று கேட்டேன்.

உண்மையைக் கூறுங்கால் சபாபதி முதலியாருக்கும் இக்கொலைக்கும் சம்பந்த மிருத்தல் வேண்டுமென்று நான் சந்தேகங் கொண்டேன்.

கந்தசாமி:—இன்னார்தான் கொலைசெய்திருக்கக் கூடுமென்று எவராலும் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் மாசிலாமணி முதலியாருக்கு விரோதிகளே கிடையாது. மேலும் ஏழைகளைக் கண்டால் அவருக்கு வெகு பிரியம். அவருடைய மனைவியைக் கண்டால் மாத்திரம் எவருக்கும் பிடிக்காது.

நான்:—பிரேதம் எங்கே காணப்பட்டதென்று சொன்னாய்?—என்று கேட்டுவிட்டு வெகு நிதானமாய் இந்தக் கொலையைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

கந்தசாமி:—ஆ! அந்த இடம் உங்களுக்குத் தெரியாது. ஏனென்றால் நீங்கள் அந்த இடத்திற்குப் போனதே கிடையாது. தோட்டத்தில் ஒரு சிறிய குளமுண்டு. குளத்தைச்சுற்றிப் பற்பல செடிகளும் அடர்ந்த மரங்களுமிருக்கின்றன. மாசிலாமணி முதலியார் யாரோ ஒருவனை முன்னிட்டு இரவில் தோட்டத்திற்கு வந்திருக்கும் சமயத்தில் வேண்டுமென்றே துவேஷத்தினால் ஒருவன் அவரை அடித்துக் கொன்றிருக்கிறான். இக்கொலை துவேஷத்

தினாலேயே நடந்திருக்க வேண்டுமே யல்லாது வேறல்ல. அந்தப் பாதகன் அடித்துக் கொன்றுவிட்டு தன்னுடைய கொடிய செய்கையை வெளிக்குக் காண்பிக்காவண்ணம் பிரேதத்தைத் தண்ணீரில் இழுத்துப் போட்டுவிட்டு போய்விட்டான். அல்லது நான் நினைக்கிறபடி யில்லாவிட்டால் மாசிலாமணி முதலியார் குளத்தின் கரையில் நடந்து கொண்டிருக்கும்பொழுது அடிபட்டுத் தவறித் தண்ணீரில் விழுந்திருக்கவேண்டும் என்றான்.

சவங்கிடந்த இவ்விடம் எனக்குத் தெரிந்திருக்கப் பிரமேயமில்லையென்று இவன் சொன்னவுடனே என்னுடைய நிலைமையை நானே அறிந்து கொண்டேன். முந்தின நாளிரவு நான் தோட்டத்திற்குச் சென்றிருந்தது ஜனங்களுக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில் என்னுடைய கதி என்னவாகும்? நிச்சயம் என்பேரில் பெருத்த சந்தேகம் பிறக்குமென்பது உங்களுக்குத்தான் தெரியும்.

தோட்டத்தில் ஜன்னலோரமாய் நான் நின்று கொண்டிருக்கும் பொழுது யாரோ இருமினதாக எனக்குக் கேட்டதென்று நான் முன்னமேயே கூறியுள்ளேனல்லவா?........இவ்விதம் இருமிக்கொண்டிருந்த மனிதனே கொலை செய்வதற்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று என்மனம் தற்சமயம் நிச்சயமாய் நம்புகின்றது.

எனக்கு இக்கொலைச் சமாச்சாரம் தெரிந்த பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு என்பவர் கொலை நடந்த விடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்க அவர் முன்னே ஜனங்கள் ஒருவர்மே லொருவர் மோதிக்கொண்டு திரளாய் நடந்து கொண்டிருந்தார்கள். ஜனங்களுடன் நானும் போய்க்கொண்டிருந்தேன். நான் டாக்டர் என்பதை இன்ஸ்பெக்டர் முகக்குறிப்பா லறிந்துகொண்டதை நான் தெரிந்துகொண்டு அவருடன் பேசி அவருடைய சிநேகிதத்தைச் சம்பாதித்துக் கொண்டேன்........கொலை நடந்த இடத்திற்கருகே ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் நின்றுகொண்டு ஜனங்களைக் கிட்டேவராமல் தடுத்தனன். ஆனால் இன்ஸ்பெக்டரவர்கள் என்னை மாத்திரம் தன் பின்னேயே அழைத்துக்கொண்டு சென்றார்........ஆங்கிருந்த போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்களும் கான்ஸ்டேபில்களும் கொலை நடந்த இடத்தையே துப்பு அறியப் பரிசோதித்துக் கொண்டிருப்பதைக் கவனித்து நானும் ஏதாவது பேசுவதற்கு ஆதாரமகப்படுமாவென்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன்.

சில துப்பறியும் உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயம் என்னவெனில் கொலைக்குக் காரணம் களவு என்பது. ஏனென்றால் மாசிலாமணி முதலியார் தன்னுடைய சட்டையில் அணிந்திருந்த விலையுயர்ந்த தங்கப் பொத்தானைக் காணோமென்று கண்டு பிடித்தார்கள். இவ்வாறு அவர்கள் தீர்மானித்தவுடனே எனக்கு இதில் கிஞ்சித்து சந்தேகம் தோன்றியபடியால் நானும் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு அவர்களின் உத்தரவின்பேரில் சவத்தின் மேலிருந்த சொக்காய்கள் முழுவதையும் சோதித்துப் பார்க்க, சொக்காய் ஜேபியில் விலை யுயர்ந்த கடியாரமொன்று வைத்தபடியே இருந்தது. இதைக் குறித்து நான் களவு காரணமல்ல என்று பேசியதோடு கூட காணாமற்போன தங்க பொத்தான் தரையில் எங்கேயாவது அகப்பட்டுப் போகுமென்று சொன்னேன். சிறிது நேரத்திற்கெல்லாம் அதுவும் அகப்பட்டுப்போனபடியால் துவேஷத்தினாலேயே கொலை நடந்திருக்கிறது என்று எல்லோரும் தீர்மானங் கொண்டார்கள்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஸ்ரீமுக௵ ஆடிமீ—கலியுகாதி 5035, சாலிவாகனம் 1856,
பசலி 1343, கோல்லமாண்டு 1108, ஹிஜரி 1352,
இங்கிலீஷ் 1933௵ ஜூலைமீ—ஆகஸ்டுமீ.

ஆடி	ஜூலை	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	16	ஞா	நவ5-58	பர47-50	சித்60	ஆடிப் பண்டிகை
2	17	திங்	தச11-20	கிரு✻54-58	ம54-58அ	கிருத்திகை, கரிநாள்
3	18	செவ்	ஏகா 17-10	ரோ60	அமி60	சர்வ, மத்வ ஏகாதசி
4	19	புத	து28-8	ரோ2-20	சித்60	சீமந்தம், சுப முகூர்த்தம்
5	20	வியா	திர28-58	மிரு9-43	மர60	மாச சிவராத்திரி
6	21	வெள்	சது34-15	திரு16-43	சித்60	வியாதியஸ்தர் குளிக்க
7	22	சனி	●அ35-5	புன28-3	சித்60	சர்வத்திர அமாவாசை
8	23	ஞா	பிர42-50	பூச28-33	சித்60	சிராவண சத்தம்
9	24	திங்	துதி45-40	ஆயி33-13	சி33-13மர	
10	25	செவ்	திரி47-30	மகம்36-55	சித்60	
11	26	புதன்	சது48-15	பூர39-28	அமி60	
12	27	வியா	பஞ்47-35	உத்40-48	ம40-48சி	
13	28	வெ	சஷ்45-45	அஸ்40-55	அ40-55சி	
14	29	சனி	சப்42-38	சித்39-45	ம39-45அ	
15	30	ஞா	அஷ்38-8	சுவா37-18	சி37-18ம	
16	31	திங்	நவ32-28	விசா33-35	ம33-35சி	
17	1	செவ்	தச25-53	அனு28-58	சி28-58ம	
18	2	புத	ஏகா18-33	கே23-40	சி23-40ம	
19	3	வியா	து10-45	மூல17-50	சித்60	
20	4	வெள்	திர2-45	பூரா11-55	பி11-55சி	வரலக்ஷ்மிவிரதம், கரிநாள்
			சது54-55			கணிதாரம்பம் செய்ய
21	1933௵ ஆகஸ்டு 5	சனி	○47-40	உத்6-10	சித்60	கிருஷ்ண புஷ்கரம், யஜுர்,
						ருக் உபா, ஆவணி அவிட்ட
22	6	ஞாய	பிர41-20	திரு1-8	அமி1-3மர	சிராவண பகுளம், காயத்ரி
				அவி56-58		ஜெபம், அவமாகம்
23	7	திங்	துதி36-15	சத54-15	சி54-15ம	பும்சவனம், சுப முகூர்த்தம்
24	8	செவ்	திரி32-45	பூர53-8	மர53-8அ	ஏற்றம் ஸ்தாபிக்க
25	9	புதன்	சது30-55	உத்53-48	சி53-48ம	சங்கட, சங்கஷ்ட சதுர்த்தி
26	10	வியா	பஞ்30-58	ரே56-18	சி56-23அ	சீமந்தம், சர்வ முகூர்த்தம்
27	11	வெள்	சஷ்32-45	அஸ்60	அமி60	வியாதியஸ்தர் குளிக்க
28	12	சனி	சப்36-10	அஸ்0-28	சித்60	தனாசப்தமி, 7க்குள் மழை
29	13	ஞா	அஷ்41-20	பர✻6-0	சித்60	கிருத்திகை, கோகுலாஷ்ட
30	14	திங்	நவ46-35	கிரு12-43	ம12-43அ	உழவு செய்ய [மி
31	15	செவ்	தச52-30	ரோ20-0	அ20-0சித்	ஆடியமுதி, மாடு வாங்க

ராகு	6-சிம்-சுக்		சூரி புதன் சுக்
	21-கன்-குரு		
	30-துலா-செ		
சனி	31-கன்-சுக்		குரு கே
			செவ்

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

பரிசு! ரூபா 50 ரொக்கப் பரிசு!!

பிரவேசக் கட்டணமே இல்லை.

முதல் பரிசு ரூ. 20. 2-வது பரிசு ரூ. 15. 3-வது பரிசு 3 ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 விதம்.

விடைகாணும் விதம்:—அடுத்த பக்கத்திலுள்ள படத்தைக் கவனியுங்கள். முதல் வரிசையில் முதல் கட்டத்திலுள்ள படம் காண்டி. இதில் முதலெழுத்தாகிய "க" என்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவது கட்டத்தில் மெல்லின மெய் "ந்" என்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். 3-வது கட்டத்தில் திருகாணி. இதில் முதலெழுத்தாகிய "தி" என்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். 4-வது கட்டத்தில் தாம்பூலம். இதில் முதலெழுத்தாகிய "தா" என்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். 5-வது கட்டத்தில் சாட்டை. முதலெழுத்தாகிய "சா" என்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வெழுத்துக்களைக் கூட்டிச் சேர்த்தால் கந்திதாசா என்னும் எழுத்து நிலை மாறிய வார்த்தை கிடைக்கும். இதன் கிரமமான நிலை தாகசாந்தி. இப்படியே மற்ற வரிசைகளிலுள்ள கிரமமான வார்த்தைகளைக் கண்டுபிடித்து அனுப்ப வேண்டும்.

முக்கிய கவனிப்பு.

போட்டியில் கலந்துகொள்ளுவோர் கீழே காணும் தனிக் கூப்பனில் முழு விலாசமும் எழுதவேண்டும். ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்; ஒவ்வொரு விடையுடனும் ஒரு தனிக் கூப்பனுவது ஒன்றரையணு தபால் தலையாவது அனுப்பவேண்டும். எனினும் ஒரு விடையாவது அச்சுக் கூபனுடன் இருக்கவேண்டும். விடைகளை ஆசிரியர் போட்டிப் பரிசு "ஆனந்தபோதினி" காரியாலயம், நெ. 6, லாயர் சின்னத்தம்பி முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை என்ற விலாசத்திற்கு ஆடிமாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும். சரியான பரிசுபெற்றவர்களின் விவரம் அடுத்த இதழில் வெளியிடப்படும். ஆசிரியரிடம் உள்ள விடையுடன் எழுத்துக்கு எழுத்துப் பொருந்தும் விடையே சரியானதாகும்.

குறிப்பு:—விலாசக் கூப்பனையும் விடைகளையும் தனித்தனி வைக்காமல் ஒட்டியோ குண்டூசியால் சேர்த்தோ அனுப்புக.

கூப்பன்.

இப் போட்டியில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானதென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

கையெழுத்து..

விலாசம்..

....

எழுத்து நிலைமாற்றுப் போட்டிப் பந்தயம்

தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபாஸகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரித்திரத்தை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுமுண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

சேம்பூர் வித்வான்-வி. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந் நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல் களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்க

ப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந் நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந் நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந் நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாலடியில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-33 வரை விலை ரூ. 1—12—0

நாகரீகம்?

இரண்டாம் பதிப்பு.

சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஜ., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியா எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்ற அரும் பெரும் நீதி அடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்ரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-33 வரை விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 187, மதராஸ்.

சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, டார்பிடோப் படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீன நாகரீகப் போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடை மலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-38 வரை விலை ரூ. 1—4—0.

விக்கிரமாதித்தன் கதை

ஆண், பெண், பாலர், பாலிகைகள் யாவரும் எளிதில் வாசிக்கும்பொருட்டு இதேமாதிரியான பெரிய எழுத்தில் 628-பக்கங்கள் 48-ஐதீகப் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன.

இது பூர்வத்தில் மகா பிரக்கியாதிபெற்று, நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாதனத்தில் வேதாளத்தையே வாகனமாகக்கொண்டு 2000-வருடங்கள் அரசியற்றி அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்தன் என்னும் சக்கிரவர்த்தியின் பிரபாவங்களை அம்மன்னனுக்குப் பின்னால் அரசியற்றிய வீர, சூர தீர பராக்கிரமசாலியாய போஜமகாராஜனுக்கு, விநோதரஞ்சிதம், மதனபிஷேகம், கோமளவல்லி, மங்களகல்யாணி, மந்திர மனோன்மணி, சிங்காரமோகனவல்லி, பரிமளமோகினி, கிருபாபரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான கதை. இடையிடையே பல விசித்திர ஆனந்தக் கதைகள் இதிலடங்கி யிருக்கின்றன.

இதன்விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-38 வரை விலை ரூ. 1—4—0

ஸ்ரீ மஹா பாரதம் விராடபர்வ வசனம்

நமது இதிகாசங்களில் சிறந்ததும், அறம் பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களைத் திறம்பட வகுத்துரைப்பதினால் ஐந்தாம் வேதம் என்று சிறப்பிக்கப் படுவதுமாகிய ஸ்ரீ பாரதம் விராடபருவம் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது. சரளமான செந்தமிழ் நடை முத்துப்போன்ற பெரிய எழுத்துக்களில் அமைந்த சுத்தப்பதிப்பு; விசித்திரப் படங்களுடன் இலங்குவது. சாமானியப் படிப்புள்ள ஆடவர் பெண்டிர் எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கும். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே முந்துங்கள். உறுதியான கட்டடம்.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

மதிமோச விளக்கம்.

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த நீக்கு கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், காலவிபரீதப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமாபாதகமும் அவற்றிற் கஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள் தோறும், ஊர் தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், திமிர்ப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே யிருக்கின்றன. உலக முழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே, வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புகளும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

190/04

பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசன நூலாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-33-வரை விலை ரூபா 1.

சாதி சமயச் சண்டைகளை யொழித்து சமரசபாவத்தைப் பரப்புவது எது?
இந்து மதத்தின் உண்மையான தத்துவத்தை அறிவிப்பது எது?

வேதாந்த மொன்றே.

உபநிடதங்களின் பரம தாத்பரியமாக விளங்கும் வேதாந்தத்தின் இரகசியார்த்தங்களை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியவேண்டுமானால்

ஞானசூரியோதயம் என்னும்
வேதாந்த இரகசியார்த்த வினாவிடை

என்னும் அரிய நூலைப் பாருங்கள். ஒவ்வொருவரிடத்திலும் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய ஞான பொக்கிஷம். பிறருதவியின்றிப் பாலருமறியுமாறு எளிய நடையில் சம்பாஷணை வடிவமாக எழுதப்பட்டிருக்கிறது. முமுட்சுக்களுக்குண்டாகும் முக்கியமான சந்தேகங்களை யெல்லாம் போக்கி ஜீவன் முக்திப் பரமானந்தத்தைத் தருவது. வேதாந்த தர்க்க ஆசிரியர் ஸ்ரீ. கோ. வடிவேல் செட்டியார் அவர்களின் சிறந்த முகவுரை யுடையது. நாவல் வாசிப்பது போலவேயிருக்கும். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. சுமார் 200 பக்கம் கொண்டது.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-33 வரை விலை அணா 12.

பவளத்தீவு 2-பாகம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூர்ணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். 2-பாகம் விலை ரூபா. 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 2-பாகமும் விலை ரூ. 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.